726

காவேரி

கர - கார்த்திகை



NOVEMBER 1951

8 அணா

நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



"கடந்த சில ஆண்டுகளாக நான் மக்ளீன்ஸ் பற்பசையை உபயோகித்து வருகிறேன். அதிலிருந்து என் பற்களைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் ஆச்சரியப்படுகிறார்கள்."

ஆனந்தமும், ஆரோக்கியமும் கூடிய தங்கள் புன்னகையை அளிக்க மக்ளீன்ஸ் பொராக்ஸைட் பற்பசையை உபயோகியுங்கள். மக்ளீன்ஸ் உங்கள் ஈறுகளைப் பாதுகாத்து, சுவாசத்தை இனியதாக்கி பற்களைப் பளபளவென்று வெண்மையாக்கும். இவையாவும் ஏககாலத்தில் செய்வதை நீங்கள் அறிவீர்கள்.

மக்ளீன்ஸ் பொராக்ஸைட் பற்பசை பிரத்தியேகமான ஆராய்ச்சி முறையினால் தயாரிக்கப்பட்டது. அதன் சுத்தத்திற்கு உத்தரவாதம். அதனால்தான் உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் தினமும் தங்கள் பற்களை சுத்தம் செய்ய இருவேளை மக்ளீன்ஸை உபயோகித்து வருகிறார்கள்.

இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!

MTY-4 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே. எல். மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட்; பம்பாய் 26.

சிறந்த கட்டிடத்திற்கு ஓர் வழிகாட்டி

சிக்கனத்துடன் தற்காலத்திற்கு ஏற்றவாறு கட்டிடம் கட்டுவதில் சிரத்தை கொண்ட கட்டிட சிற்பிகள், கன்டிராக்டர்கள் முதலிய யாவருக்கும் தேவையானது.

ஏதாவது கட்டவேண்டுமானால், உங்களுக்கு "80 டிஸைன்கள்" என்ற புதுப்புத்தகத்தின் உதவி அவசியம். பலவித நேர்த்தியான கட்டிட பிளான்களும் அவைகளை அலங்கரிக்கும் வழிகளும் அடங்கிய இப்புஸ்தகம் உங்களின் உதவிக்கென்றே தயார் செய்யப்பட்டது. வீடுகள் முதல் ஆஸ்பத்திரிகள் வரையும் உண்டி சாலைகள் முதல் சமூக கொட்டி வரையும் சகல கட்டிட விபரங்களையும் இதில் காணலாம்.

விலை ரூபாய் ஐந்தே தான் (தபால் செலவு அணா 9/- தனி. கூப்பனுடன் இன்றே உங்கள் பிரதிக்கு விண்ணப்பம் செய்யுங்கள்.

தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா,
9, மவுண்ட் ரோட், மதருஸ்.

"80 டிஸைன்கள்" பிரதி ஒன்று உடனே எனக்கு அனுப்பிவைக்கவும். புஸ்தக கிரயத்திற்கும் தபால் செலவிற்குமாக ரூ. 5/9/- மணியார்டர்/போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

பெயர் ....

விலாஸம் ....

(செக்குகள் ஏற்கப்பட மாட்டா) CKM 38

தி அஸோஸியேட்ட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின வியாபார மானேஜர்கள்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்

SISTA'S-CMI 38-TAMIL

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

இவர்கள் அனைவர்க்கும் ஆரோக்கியத்தைக் காக்க உதவுகிறது; தகப்பனார் உழைப்பினால் தளர்ச்சி அடைந்தபோதும் தாயார் வியாதி குணமடைந்து வரும்போதும் பிள்ளை வளர்ச்சிக்கு வேண்டிய உற்சாகத்தைக் கொடுத்து உதவுகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்
மதராஸ் 17.



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும் சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c. k.)
JULLUNDUR CITY.

எப்படித்தான்
மலேரியா என் குழந்தையை
பயமுறுத்தியது !

'பாலுட்ரின்' தான்
அவளைக் காப்பாற்றிக்
கொடுத்தது ...

என் குழந்தையை அவளது மாமன் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகாமலிருந்திருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். அவள் மீண்டும் பள்ளிக்குச் செல்லவேண்டிய தினத்தன்று மலேரியாவில் படுத்துக்கொண்டாள். விரைவில் பலவீனமடைந்து நோஞ்சலாய்ப் போனாள். பயங்கரமான ஜுரத்துடன் அவளுக்கு எப்படித்தான் நடுக்கல் வந்தது தெரியுமா? அதை நிறுத்தவே முடியவில்லை. பிறகு ஒரு நண்பரின் யோசனைப்படி தினமும் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை கொடுத்துவரத் தொடங்கினோம். மூன்று அல்லது நாலு நாட்களில் ஜுரம் விட்டுவிட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நாங்கள் எல்லோருமே பிரதி ஞாயிற்றுக்கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை உட்கொண்டு வருகிறோம். குடும்பத்திலே யாருக்கும் மலேரியா இல்லை.

ICI **பாலுட்ரின்***
டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அணாவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IRP 141 TMI

பரிசு ரூபாய்... 7000
முதற் பரிசு ரூ.......... 4000
மற்ற பரிசுகள் ரூ.... 3000



மொத்தம் நான்கு பரிசுகள். மூன்று தவறுள்ள விடைகளுக்கும் பரிசு உண்டு.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

✯ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு இரண்டு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 12—12—51

		விடைகள் 1	2
1	நல்ல இது உள்ளவர்களுக்கு நாலுபேர்கள் நன்மதிப்பும் கிடைக்கும்	நிலைமை	புலமை
2	பக்கத்திலே படுக்கும் ஆசாமி இது அதிகமுள்ளவர் என்ருல் தூக்கம் பிடிக்குமா நமக்கு?	அரட்டை	குறட்டை
3	பாங்க் கஜானு முதலியன இருக்கும் கட்டடங்களுக்கு இதுவும் பலமாகத்தான் இருக்கும்	சுவர்	காவல்
4	மனிதனுக்குக் கஷ்டமும் வறுமையும் வருகையில் அற்பத்திற்குக்கூட கணக்குப் பார்க்கும்படி மனம் இதாகிவிடுகிறது	கடுமை	சிறுமை
5	இந்திய அரசியல் ஸ்தாபனங்களுள் மிக இதானது காங்கிரஸ் ஸ்தாபனம்	பெரியது	பழையது
6	இப்படியாக எழுதும் பத்திரிகைகளை வெளியிட ஸர்க்கார் அனுமதிப்பதில்லை	ஆவேசம்	ஆபாசம்
7	நாள் ஆக ஆக தம்பதிகளுள் இதுவும் அதிகமாதல் சகஜம்தானே!	பாசம்	பூசல்
8	இப்படியாக ஆகவேண்டிய வேலைகள் என்ருல் பிறரிடம் நம்பி ஒப்புவியாமல் நாமே கவனிப்பதுதான் நலம்	சீக்கிரம்	முக்கியம்
9	எதிராளி இப்படியாகப் பதிலளித்த பின்னரும் மேலும் விவாதிப்பதில் பயன் என்ன?	இறுதி	உறுதி
10	இப்படியான புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண் வாழ்க்கையில் என்ன சுகத்தைக் காணமுடியும்?	குருடன்	முரடன்
11	நாம் மிகவும் நேசிக்கும் ஒருவர் நம்மைப்பற்றிப் பிறரிடம் இப்படியாகப் பேசுவதை யறிந்தால் நம் மனம் புண்படக்கூடும்	குறைவு	மறைவு
12	உல்லாசத்தை விரும்பிவரும் கணவனை மனைவி சரியாக வரவேற்காவிட்டால் அவனுக்கு இது உண்டாவது இயற்கைதானே!	கோபம்	சோகம்
13	எத்தனை வயதானுலும் இது இல்லாதிருப்பவர்களுமுண்டு	விவாகம்	விவேகம்

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம். 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை காவேரி மார்கழி இதழில் வெளிருவம். நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம்:- { **மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி**
"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 20-ன் சரியான விடை:—(1) தோல்வி (2) தின்னல் (3) கேனன் (4) இலஜ்ஜை (5) விழுதல் (6) ஓய்வு (7) சோகம் (8) மறுத்தல் (9) பொழுது (10) நித்திரை (11) திருப்பல் (12) பொறுமை (13) தனிமை. 2 2 1 1 2 1 2 1 1 1 1 1 1

போட்டி—19-ன் பரிசு விவரம்

முதற் பரிசு தலைக்கு ரூ. 101—0—0 விதமும், இரண்டாவது பரிசு தலைக்கு ரூ. 10—0—0 விதமும், மூன்ருவது பரிசு தலைக்கு ரூ. 1—0—0 விதமும் பிரித்து வழங்கப்பட்டன. மற்ற விவரங்கள் வரலக்ஷ்மி கிராஸ் வர்ட்ஸ் 21-ல் பார்க்கவும். தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். பரிசுத் துகைகள் 24—10—51 & 25—10—51 தேதிகளில் அனுப்பப்பட்டன.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.

காவேரி

பொருளடக்கம்

கர மலர் 11		கார்த்திகை இதழ் 4

வாக்காளர்களின் பொறுப்பு 6

மருந்தும் மாயமும் 8
ஏ. எஸ். ராகவன்

இயற்கை விந்தைகள் 14
ரவிப்ரியா

வாழும் வையம் 17
நாயகர்

நேபாள யாத்திரை 19
கே. ஸ்ரீ.

கடைசி நாடகம் 25
ஜனகன்

எனது மலாய்நாட்டுப் பிரயாணம் 33
ரங்க ராமானுஜ அய்யங்கார்

ஸ்ரீ ஸ்துதி 33
ஏ. கே. ராகவாச்சாரியார்

மூன்ருவது பிறந்தநாள் 41
முத்து—சுப்ரமணியன்

நிலையும் நிழலும் 46
வெங்கடராமன்

எது இன்பம்—(தொடர் கதை) 52
வே. ரங்கராஜன்

சித்தப்பா 64
ராசு

டில்லித் தபால் 69
கே ஸ்ரீநிவாஸன்

காஞ்சனு 75
கே வி. கே.

குறிப்பு: 'காவேரி'யில் "வெளியாகும்" கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள், அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல

தமிழ்நாடு ... நூலகம்
199328
சென்னை-600 008

காவேரி

கர ஷூ மலர் 11	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	கார்த்திகை இதழ் 4

வாக்காளர்களின் பொறுப்பு

தேர்தல் மும்முரமாக ஆரம்பமாகிவிட்டது. அனேகமாக, காங்கிரஸ் அபேக்ஷகர்கள் ஜாபிதா பிரசுரமாகிவிட்டது.

இந்த அபேக்ஷகர்களின் ஜாபிதாவைப் பரிசீலனை செய்து பார்த்தால் பெரும்பாலோர் இதில் பொறுப்பேற்று நிர்வாகம் புரியும் திறமையோ அல்லது சட்டம் இயற்றப் போதிய அறிவோ உள்ளவர்களாகத் தோன்றவில்லை.

பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் மந்திரி சபை அமைக்கப்பெற்றதும், அதன் அங்கத்தினர்களின் யோக்கியதாம்சங்களைப் பற்றிய விவரங்கள் பிரசுரிக்கப்பட்டன. அதில் ஒவ்வொரு மந்திரியும் நிர்வாகத்திலும் உலக அனுபவத்திலும் நீண்டகாலம் என்னென்ன வகையில் சேவை செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு இப்பொழுது பொறுக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் கக்ஷி ஜாபிதாவையும் பார்த்தால் இந்நாட்டில் நிர்வாகம் ஊழலாக இருப்பதற்குக் காரணம் விளங்கும். பிரிட்டிஷ் மந்திரி சபையில் படித்தவர்களுக்குப் பதவி என்ற பேச்சே கிடையாது. ஏன்? பிரக்யாதி பெற்ற சர்வகலாசாலைகளில் படிக்காதவனைச் சாதாரண அங்கத்தினனாகத் தேர்ந்தெடுப்பதே அரிது. பட்டம் போதாது. அனுபவம், நிர்வாகத் திறமை, நீண்டநாள் பல்வேறு துறைகளில் உயரிய பதவிகளில் வெற்றிகரமான பணி ஆற்றல்—இவைதாம் மந்திரிக்குத் தகுதி என்று அங்கே கருதுகிறார்கள்.

நம் நாட்டில் தகுதிக்கு அர்த்தம் வேறு. ஒருவன் ஸர்வகலாசாலைப் பட்டம் பெற்றிருக்கிறான் என்றால் அவன் மந்திரி பதவிக்கு லாயக்குள்ளவன் என்று கருத ஆரம்பித்து விடுகிறோம். ஏன்? சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் அதிகம் படிப்பில்லாதவர்கள். பணம் படைத்த பெருமையாலோ அல்லது சுதந்திர இயக்கத்தில் சிறை சென்ற காரணத்தினாலோ அங்கத்தினர்களாகப் பொறுக்கப்பட்டவர்கள்.

சுயராஜ்யத்திற்குப் பாடுபடும் காலங்களில் நமக்கு ஒன்றே ஒன்றுதான் தேவை. தலைவர்கள் சொற்படி நடக்கும் திடம் மாத்திரம் இருந்தால் போதுமானது. நிர்வாகப் பொறுப்பு அப்பொழுது நமக்கில்லை. திறம் படைத்த வெள்ளையன் ஆண்டான். எனவே எந்தத் தற்குறி சட்டசபை அங்கத்தினராக இருந்தாலும் நமக்கு அதனால் பாதகம் ஏற்படவில்லை.

நாட்டின் நிர்வாகம் நம் கைக்கு மாறியபின்பும் அதே கொள்கையோடு அங்கத்தினர்களைப் பொறுக்கி ஆட்சி புரிந்தார்கள். அதன் விளைவு எங்கும் ஊழல். மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே காங்கிரஸிடம் வெறுப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. சில அங்கத்தினர்கள் தங்கள் சலுகைகளை வைத்துக்கொண்டு தவறான முறையில் நடக்க ஆரம்பித்தனர். மந்திரிகளும் தங்கள் பதவிகளைக் காக்க அதற்கு உடந்தையாக இருக்க நேரிட்டது. இதன் விளைவு மந்திரி சபைக்கே இழுக்கு.

இந்தப் புதிய சட்டசபை அமைப்பிலாவது இது மாறும், தகுதியும் நிர்வாகத் திறமையும் உள்ள நபர்கள் பொறுக்கப்படுவார்கள்

என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். என்ன ஏமாற்றம்? அதே ஆகஸ்ட் தியாகிகளும் அரைகுறைப் பேர்வழிகளும் காங்கிரஸ் அபேக்ஷகர்களாகப் பொறுக்கப்பட்டுள்ளனர்.

இத் தருணத்தில் மக்களது கடமை என்ன?

தனிப்பட்ட நபர்கள் சட்ட சபைகளில் எதையும் சாதித்து விடமுடியாது என்று கூறியுள்ளார் பண்டிதநேரு. நாம் இதை முற்றிலும் ஒத்துக் கொள்ளுகிறோம், ஆனால் ஒரு கக்ஷிக்கு நல்ல கொள்கை மட்டில் இருந்தால் போதாது. அதைச் சரிவர நிறைவேற்றப் போதிய திறமை வேண்டும். சென்ற நான்கு வருஷ காலத்தில் காங்கிரஸ் கொள்கையில்லாமலில்லை. இருந்தும் அதன் பொறுப்பை அது செவ்வனே செய்ய முடியவில்லை என்பது பகிரங்கம். இதற்குக் காரணம் தகுதியுள்ள நபர்கள் அதில் வராததுதான்.

இந்தியா போன்ற பெரிய தேசத்தை ஆள்வது எளிதன்று. ஒரு சங்கிலியினுடைய பலம் அதன் ஒவ்வொரு அணுவையும் பொறுத்திருக்கிறது. ஆகவே காங்கிரஸ் கட்சி சரிவர ஆட்சி புரிய முடியாததன் காரணம் அதன் அங்கத்தினர்களின் பலக் குறைவு.

இனியாவது நாட்டு நிர்வாகம் செவ்வனே நடைபெற வேண்டுமானால் தகுதியும் அனுபவமும் பெற்றவர்களை மட்டுமே வாக்காளர்கள் பொறுக்கி அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் நாட்டுக்கு விமோசனம். வோட் செய்யும்போது மக்கள் இதைக் கவனித்துச் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம். கக்ஷிபலமோ கொள்கை பலமோ மட்டும் போதாது. அதைச் சரிவர நிறைவேற்றத் திறமை வாய்ந்த அங்கத்தினர்கள் தேவை. இவர்களைப் பொறுக்குவதுதான் நம் பொறுப்பு.

மற்றொரு முக்கியமான விஷயம். முன்பெல்லாம் காங்கிரஸ் தேசிய ஸ்தாபனமாக இருந்தது. இன்று அது பல்வேறு கக்ஷிகளில் ஒன்றாக மாறிவிட்டது. ஆனால் பாமர மக்களுக்கு அதன் பாலுள்ள பற்றுப் போகவில்லை. பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் மிகவும் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. இத்தருணத்தில் ராஜ்யபாரம் செய்வது மிகக் கடினம். எனவே புதிய அமைப்பில் தகுதியானவர்கள் பதவிக்கு வரவேண்டும்.

கொள்கை அளவில் காங்கிரஸ் திட்டம் வேறு எந்தக்கட்சியும் வகுக்கக்கூடிய திட்டமே. அத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா என்பதைப் பொறுத்துத்தான் நாம் எதையும் முடிவு செய்ய முடியும், முடியாது என்பதுதான் நம் கருத்து.

நாட்டிலுள்ள எண்ணற்ற முக்கியப் பிரச்னைகளைச் சமாளிக்கக் கூட்டுறவு மந்திரி சபை தேவை. நிறைவேற்ற முடியாத சட்டங்கள், கைகூடாத திட்டங்கள் இப்படி அடுக்கிக் கொண்டே போனால் எங்கே தேசம் உருப்படுவது? கவர்மெண்ட் தலையீட்டை ஓர் வரம்பிற்குட் படுத்தாமற் போனால் இனி நாட்டில் தொழிலியல் வளர்ச்சி காணமுடியாது. மக்களுக்கு ஊக்கம் குன்றிவிட்டது.

இதற்கெல்லாம் வழிகாண வேண்டுமானால் தகுதியும், திறமையும், அனுபவமும் உள்ள நபர்களை மக்கள் தெரிந்தெடுத்தாலன்றி விமோசனம் இல்லை. கொள்கைகள் எந்தக் கட்சிக்கும் பொது. எத்தருணத்திலும் திட்டம் வகுக்கலாம். ஆனால் வகுத்த திட்டத்தை நிறைவேற்றுவதுதான்— சூழ்நிலைக்கு உகந்தவாறு — சாமர்த்தியம். எனவே இந் நெருக்கடியான தருணத்தில் வாக்காளர்கள் நிலைமையை உணர்ந்து பிரதிநிதிகளைப் பொறுக்குவது பெரிய தேச சேவையாகும். ●



மருந்தும் மாயமும்

ஏ. எஸ். ராகவன்

மாலை நேரத்து மஞ்கள் வெய்யிலிலே பள பளத்துக்கொண்டு வெகு வேகமாக ஒருகார் செங்கல்பட்டு ரஸ்தாவில் ஓடிக் கொண்டிருந்தது. அதைவிட வேகமாகக் காருக்குள் இருந்த ஸ்ரீமான் சாம்பசிவத்தின் மனது படபடத்துக் கொண்டிருந்தது. அவர் முகத்தில் குளு, குளுவென்று காற்று வீசிய அந்த நேரத்திலும் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன.

கார் ட்ரைவருக்குத் தன் எஜமானனின் அவசரம் நன்ருகத்தெரியும். அந்தக் குடும் பத்துக்குச் சென்ற பத்து வருஷங்களுக்கு மேலாக அவன் உழைத்து வந்திருக்கி ருன். ஆகவே கண்ணை மூடிக்கொண்டு காரை வேகமாக ஓட்டினன்.

"என்ன ட்ரைவர், இன்னும் எவ்வளவு மைல் இருக்கும்? ......இதற்குள் அவளுக்கு உடம்பு எப்படி இருக்கிறதோ?" என்று துடித்தார் சாம்பசிவம்.

"இன்னும் ஆறே மைல் தானுங்க......" என்ருன் ட்ரைவர்.

கார் பறந்தது. சாம்பசிவத்துக்கு எது வும் புலனுகவில்லை. வேதனையையே அனுப வித்தறியாத அவருக்கு இந்த நிலைமை அவருக்குத் தாங்கமுடியாததாக இருந்தது. எதுவும் புலனுகவில்லை. 'டப்' என்ற வெடிச் சப்தம் கேட்டபோது அவர் நிஜமாகவே கனவு உலகத்திலே இருந்தார். எலும்புந் தோலுமான அவர் மனைவிக்கருகில் ஒரு குழந்தை படுத்திருக்கிறது. அவருடைய மூத்தமகன் வாயில் பலூனை வைத்து ஊதிக் கொண்டிருக்கிருன். அவனுக்குப் பலூன் மீது உயிர். எப்போதும் ஒன்றை வைத்து ஊதுவது, அது டப்பென்று உடைவதைக் கண்டு மகிழ்வது இதுவே அவன் விளையாட்டு. அதேபோல் அப்போதும் இருந்தான். திடீரென்று பலூன் வெடித்து விட்டது. அதை அபசகுனமாகக் கருதிய சாம்பசிவம் நிஜமாகவே நடு வழியில் காரின் டயர் வெடித்து விட்டதைக்கண்டு துணுக்குற்ருர்.

"ட்ரைவர் இப்போ என்ன செய்யறது? வேறே 'டயர்' இருக்குதா?......" என்று கேட்டார்.

"இல்லீங்களே...... புது டைமராச்சே, ஏதுக் குன்னு 'ஸ்டாக்' எதுவும் எடுத்துக்கிட்டு வாராம வந்துட்டேன்...... இப்போ வர்ர டயருங்களே மகாபாடாவதியாயிருக்குதுங்க" என்ருன் ட்ரைவர்.

"அது கிடக்கட்டும்...... இந்த நடுக்காட் டில் என்ன செய்யறது?...... நேரம் ஆறரை ஆச்சு...... இதுக்குள்ளாற அவ உசிரு..." என்று சாம்பசிவம் ஏதோ கூறியதும், அவ ருடைய தாயார் இடைமறித்து, "ஏதாவது கன்னுபின்னுன்னு உளருதே...... எல்லாம் நல்லா முடியும்னு தோணுது மனசுலே...... செந்திலாண்டவன் நம்மை மோசம் செய்ய மாட்டான்" என்ருள். இப்படிச்சொல்லி விட்டாலும் அந்த அம்மாளுக்கு உள்ளூறக் கவலை தான்.

ட்ரைவர் குனிந்து காரைப் பார்வை யிட்டான். வேறு டயர் இல்லாமல் வண்டி எப்படி ஓடும்? ஆகவே அவன் அயர்ந்து உட்கார்ந்து விட்டான்.

இரவு மெதுவாக நகர ஆரம்பித்தது. ஏதாவது கார் வரும் என்று எதிர்பார்த் தார்கள். இவர்கள் போய்ச் சேரவேண்டிய கிராமத்துக்கு இன்னும் பதினன்குமைல் இருக்கிறது. முதலில் சாம்பசிவம் கேட்ட போது ட்ரைவர் ஆறுமைல் தான் இருக் கிறது என்று சொன்னது அவரைச் சாந்தப் படுத்தத்தான்: உண்மையாகவே இன்னும் அதிக தூரம் இருந்தது.

பூம்...... பூம்......

ஒரு கார் வேகமாக வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டதும் சாம்பசிவத்துக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. எப்படியாவது கிராமத்தை இந்தக் கார்மூலம் அடைந்து விடலாம் என்று நம்பிக்கை கொண்டார்.

கார் அருகில் வந்ததும் ட்ரைவர் கை காட்டி நிறுத்தினன். கார் நின்றது. சாம்ப சிவம் அருகில் சென்று பார்த்தார். "ரொம்ப முக்கியமான விஷயம்: என் கார் வழியில் பழுதாகிவிட்டது...... அதனுல்தான்......" என்று அவர் கூற ஆரம்பித்தார்.

அதற்குள் காருக்குள் இருந்தவர், "அடேடே! மிஸ்டர் சாம்பசிவமா?...... வாருங்கள். இந்தக் கார் உங்களுக்கில்லாமல் வேறு யாருக்கு??......" என்றார்.

"அடேடே!...... டாக்டரா?...... நல்லதாப் போச்சு...... கடவுள்தான் உங்களை அனுப்பினார்......" என்றார் சாம்பசிவம்.

"ரொம்பப் புகழ்கிறீர்களே... ஏறுங்கள்... என்ன விஷயம்?" என்று உபசரித்தார் டாக்டர்.

சாம்பசிவமும் அவர் தாமாரும் ஏறிக் கொண்டார்கள். ட்ரைவருக்கு இந்தக் காரிலிருந்து ஒரு டயர் வாங்கிக் கொடுத்து, அதைப் பூட்டிக்கொண்டு வரும்படி உத்தரவிட்டார் சாம்பசிவம்.

"என் மனைவிக்கு உடம்பு சரியாயில்லை...... 'டெலிவரி டைம்'...... கேஸ் ரொம்ப 'ஸீரியஸ்'..." என்றார் சாம்பசிவம்.

"அப்படியா?...... யார் பார்க்கிறார்கள்?" என்று கேட்டார் டாக்டர்.

"அது தெரியவில்லை...... அந்தக் கிராமத்தில் பெரிய டாக்டர்கள் ஏது?...... அதனால் நாட்டு வைத்தியமாத்தான் இருக்கும்........ நான் வியாபார விஷயமாய்க் கொளும்புபோய் விட்டு நேற்றுத்தான் வந்தேன்...... பத்து நாளாக ஊரிலே இல்லை நான்...... இன்றைக்குத் தந்தி வந்தது......" என்று பேசிக்கொண்டே வந்த சாம்பசிவம் திடீரென்று நினைத்துக் கொண்டவர்போல டாக்டரை நோக்கி, "எனக்கு ஒன்று தோன்றுகிறது... டாக்டர், நீங்கள் என்னோடு வந்து என் மனைவியின் நிலையைப் பாருங்கள்...... உங்கள் கைராசியில் எனக்கு அசையாத நம்பிக்கை" என்றார்.

டாக்டர் யோசனை செய்தார், "நானும் அவசர, 'கேஸ்' விஷயமாகத்தான் போகிறேன்...... சோலைப்பட்டி வரைக்கும் போக வேண்டும்...... 'போன்' வந்தது......" என்றார்.

"சோலைப்பட்டியா?...... அதுதான் என் மனைவியின் பிறந்த ஊரும்...... உங்களுக்குப் போன் செய்தது நல்லப்பபிள்ளை தானே! சோலைப்பட்டி மிட்டாதார் அவர்......" என்று கேட்டார் சாம்பசிவம்.

"ஆமாமாம்...... ரொம்ப நல்லதாப்போச்சு..." என்றார் டாக்டர்.

கார் ஊரை அடைந்தது. மிட்டாதார் வீட்டின் முன்னால் கவலையுடன் நின்றுகொண்டிருந்தார். ஒவ்வொரு வினாடியும் அவர் பட்டணத்து டாக்டரையும், மாப்பிள்ளையையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய ஒரே மகளான விலாசவதியை அவர் அருமையும் பெருமையுமாய் வளர்த்தார். சீரும் சிறப்பும் பொருந்திய இடத்திலே தான் கல்யாணமும் செய்துகொடுத்தார். மாப்பிள்ளை சாம்பசிவமும் தங்கத்தால் செய்யப்படாத ஒரு குறைதான். மற்றப்படி அவர் குணத்தில் பத்தரைமாற்றுத் தங்கம். மனைவியிடம் அவருக்கு அபாரவாஞ்சை. வியாபாரத்தில் லட்சலட்சமாய்க் குவிந்தது. பங்களாவும், காரும், சகல சௌகரியங்களும் இருந்தன. தம் பெண் பிரசவ சமயத்திற்குத் தம்மிடம் இருக்கவேண்டும் என்று நல்லப்பபிள்ளை விரும்புவார். போதுமான பால், தயிர், கிராமச் சூழ்நிலை இவைகளை உத்தேசித்தேதான் அவர் அப்படி எண்ணுவது. மேலும் தம் மகள் பிறந்த வீட்டிற்கு வர வேறு எந்தச் சமயத்திலும் மாப்பிள்ளையின் அனுமதி கிடைப்பதில்லை. கிடைத்தாலும் ஒரு வாரம், பத்து நாளைக்குமேல் அவளைத் தங்கவிடமாட்டார்.

நல்லப்பபிள்ளைக்குத் தம் பெண்ணின் தற்போதைய நிலையைப் பார்க்கும்போது பட்டணத்திலேயே அவள் இருந்திருக்கலாம் என்று தோன்றியது. சோலைப்பட்டி அந்தப் பக்கத்தில் பெரிய ஊர்தான் என்றாலும் பெரிய டாக்டர்கள் இல்லை. எல்லோரும் சாதாரண நாட்டு வைத்தியர்கள். நாட்டு வைத்தியத்திலும் நல்ல தேர்ச்சிபெற்ற ஒரு சிலர் இருந்தார்கள். ஆனால் அவர்களெல்லாரும் பணம் சம்பாதிக்கப் பட்டணத்துப்பக்கம் போய் விட்டார்கள்.

'பூம், பூம்' என்று கார் சப்தம் கேட்டவுடன் நல்லப்ப பிள்ளை முகம் மலர்ந்தது உடல் துடித்தது.

கார் நிற்பதற்கு முன்பே சாம்பசிவம் வெளியே குதித்தார். "எப்படி இருக்குது?........." அதற்கு மேல் அவரால் கேட்க முடியவில்லை.

நல்லப்பபிள்ளைக்குத் தொண்டை அடைத்தது. "வாருங்கள்........" என்று கூடச் சரியாய்க் கூப்பிட வாய் குழறியது, கைகளை மட்டும் நீட்டி அன்புடன் சாம்பசிவத்தின் தோள் மீது வைத்தார்.

டாக்டர் இறங்கியதும் இந்தக் காட்சியைப் பார்த்தார். இதுமாதிரி நிலைமைகளைப் பார்த்துப் பழக்கப்பட்டவரல்லவா அவர்? ஆகவே சாம்பசிவத்தைப் பார்த்து, "மிஸ்டர் சாம்பசிவம்!...... உள்ளே போகலாம்......" என்றார்.

எல்லோரும் உள்ளே சென்றார்கள். அவருடைய மூத்த மகன் சுப்பிரமணியன் ஆவலுடன் ஓடிவந்து அப்பாவின் கால்களைக் கட்டிக்கொண்டான். அவன் கையில் எப்போதும்போலப் பலூன் வைத்திருந்தான். அதைப் பார்த்ததும்

'பக்' கென்றது சாம்பசிவத்துக்கு. அதைப் பிடுங்கி எறிந்து விட்டார். அவன் திரு திரு வென்று விழித்தான்.

பிரகாசமாக ஹரிகேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் பழக்கப்பட்ட அந்த இடத்தை மேலெழுந்த வாரியாகப் பார்த்தார் சாம்பசிவம். அவருக்குத் துக்கமாயிருந்தது. ஏனெனில் முதல் முதல் அவருக்குக் கல்யாணமாகி அவர் மாமனார் வீட்டிற்கு வந்திருந்தபோது இந்த அறையைத்தான் ஒழித்து விட்டிருந்தார்கள். விலாசவதியுடன் ஆனந்தமாகப் பேசிக் கொண்டிருந்ததும் இந்த அறையில்தான். இப்போது இதே அறையில்.........

"எப்ப வந்திங்க?..." என்று கேட்டாள் விலாசவதி ஈனஸ்வரத்தில்.

சாம்பசிவம் அவளருகில் சென்று நின்றார். அவளுடைய உடலை ஒரு தரம் பார்த்தார். விலாசவதியா இவள்? எப்படி மாறிவிட்டாள்? அந்தக் கண்கள் எவ்வளவு ஆழத்தில் புதைந்து கொண்டு எப்படி வெறிச்சென்று பார்க்கின்றன?

"பத்து நாளைக்கு முன்னாடி திடீரென்று உடம்புக்கு வந்தது...நம்மூர் வைத்தியரு பார்த்துச் சூரணம் குடுத்தாரு...நாலு வேளையிலே சரியாயிடுச்சு. அப்புறம் அடுத்த நாளு நல்ல காச்சலும் குளுரும் வந்து உடம்பை உலுக்கிடுச்சு...கொளந்தை தவிச்சுப் போயிட்டா...எத்தனையோ மருந்து கொடுத்துப் பாத்தாச்சு...இன்னும் நின்னப்பாடில்லே... இதிலே இன்னைக்கு வலிவேறே எடுத்திருக்காப்பலே தோணிச்சு..." என்றார் நல்லப்பபிள்ளை.

இதுவரை மறைவிலேயே இருந்த விலாசவதியின் தாயாரான அன்னபூரணம்மாள் யாரையோ நோக்கிப் பேசுவதுபோல, "மருந்துக்குக் கட்டுப்படாத மாயமாயிருக்குது.........யார் போட்ட கண்ணோ தெரியவில்லை...இல்லாட்டி ஒவ்வொரு தடவையும் இப்படியாஇருந்திச்சு?...சுப்பிரமணியனைப் பெறச்சே அவளுக்கு ஒரு கஷ்டமும் இல்லே...பொறந்தது தெரியல்லே......எல்லாம் அந்தப் படுபாவிங்க குடும்பம் செய்யற வேலை" என்றாள்.

"உஷ்! ஆரம்பிச்சுட்டயா?......... அப்படியே அவங்க செஞ்சா, 'தன் வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்'னு அது அவுங்களுக்கே திரும்பிட்டுப் போவுது!" என்றார் நல்லப்பபிள்ளை.

சாம்பசிவத்துக்கு அவர்களின் பேச்சு புரிந்தது. ஆனால் அதை அவர் இந்தச் சமயத்தில் விரும்பவில்லை. தம் மனைவியின் தேக நிலைக்கு முத்துப் பிள்ளை குடும்பத்தினர் எப்படிப் பொறுப்பாளிகளாவார்கள் என்று அவருக்குத் தெரியவில்லை. ஆதிமுதலே இரு குடும்பத்துக்கும் தலைமுறைச் சண்டை. அவருக்குக் கல்யாணமானபோது ஊரில் ஒரே குழப்பம். முத்துப் பிள்ளையின் மகன் விலாசவதியைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். நல்லப்ப பிள்ளை இணங்கவில்லை. அவன் முறைப் பையனானாலும் மகா முரடன். எல்லாத் துஷ்ட சேஷ்டைகளுக்கும் உறைவிடமானவன். பெண் தர மறுத்ததும் செல்லப்பன்—முத்துப் பிள்ளையின் மகன்—இந்த வம்சத்தையே அழித்து விடுவதாகச் சவால்விட்டான். எங்கே அப்படிச் செய்து விடுவானோ என்று நல்லப்ப பிள்ளைக்குக் கூடப் பயம்தான். ஆகவே வீட்டில் எப்போதும் பத்து பண்ணையாட்கள் இரவில் படுத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார். சில நாட்களுக்கெல்லாம் செல்லப்பன் ஊரை விட்டே போய்விட்டான். சம்பவங்களும் பழையனவாகி விட்டன.

டாக்டர் விலாசவதியின் உடலைப் பரிசோதித்துப் பார்த்தார். இன்னும் சிறிது நேரத்தில் குழந்தை பிறந்துவிடக் கூடும் என்று தோன்றியதால் உடனே இரண்டு இஞ்செக்ஷன்கள் செய்தார். பிறகு அன்னபூரணியம்மாளிடம் ஏற்பாடுகளைச் செய்யச்சொல்லி விட்டு வெளியே வந்தார்.

சாம்பசிவத்துக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நேருமோ என்று தவித்தார். டாக்டர் அவரிடம் எதுவும் தீர்மானமாகச் சொல்லவில்லை.

"என்ன, டாக்டர்! எப்படி இருக்கிறது?...... பயம் இல்லையே?" என்று கேட்டார் ஆவலுடன்.

டாக்டர் உடனே பதில் பேசவில்லை. "உம்... கொஞ்சம் 'ஸீரியஸ்' தான்......" என்றார்.

"அப்படீன்னா?" என்று தவித்தார் சாம்பசிவம்.

"கவலைப்படாதீர்கள்..........என்னால் இயன்றவரை பார்த்து விடுகிறேன்..." என்றார் டாக்டர்.

"இயன்றவரை என்று அரை மனதாய்ச் சொல்கிறீர்களே!...... எனக்குப் பயமாக அல்லவா இருக்கிறது!" என்றார் சாம்பசிவம்.

சிறிது நேரத்துக் கெல்லாம் பெண் குழந்தை பிறந்தது. பிறந்ததே ஒழிய அது வயிற்றுக்குள்ளேயே இறந்து விட்டது. விலாசவதிக்கு ஸ்மரணை தப்பி விட்டது.

டாக்டர் இஞ்செக்ஷன் செய்தார். அதற்குப் பிறகு பல மணிகள் சென்றன. அவள் கண் விழிக்கவே யில்லை. டாக்டருக்குக் கவலையாகிவிட்டது. இவ்வளவு தூரம் வந்து தம் பெயர் கெடாதிருக்க வேண்டுமே என்ற கவலையைவிட, தம் நெருங்கிய நண்பரான சாம்பசிவத்தின் குடும்பத்தில் தம் திறமை வீணாகக் கூடாதே என்று உள்ளூற விரும்பினார். மேலும் சாம்பசிவம் படும் துயர் தாளவில்லை.

பொழுது விடிந்தது. விலாசவதி மெல்லக் கண் விழித்தாள். ஆனால் அவளால் பேச முடியவில்லை. சோர்ந்து படுத்திருந்தாள். இறந்த குழந்தையை அடக்கம் செய்தார்கள். டாக்டர்

பட்டணத்துக்குப் போய் வேறு மருந்து வாங்கிக் கொண்டுவர ட்ரைவரை அனுப்பினர்.

சாம்பசிவமும் டாக்டரும் வாசற்புற அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நல்லப்ப பிள்ளை பக்கத்தூருக்குப் போயிருந்தார். அங்கே ஒரு பிரசித்தி பெற்ற மாந்த்ரீகன் இருக்கிருனம். ஏவல், சூன்யம் முதலியவைகளை நிவர்த்தி செய்வதில் கெட்டிக்காரனும். தம் பெண்ணுக்கு யாரோ சூன்யம் வைத்து விட்டார்கள் என்றே அன்னபூரணம்மாளுக்கும், அரை குறையாக நல்லப்ப பிள்ளைக்கும் எண்ணம். சாம்பசிவத்துக்கு அர்த்தமற்ற அவர்களின் அவஸ்தையைக் கண்டு அனுதாபம் தான் ஏற்பட்டது.

"சூன்யம், ஏவல் இவையெல்லாம் நிஜம்தானு?" என்று கேட்டார் சாம்பசிவம்.

டாக்டர் டக்கென்று பதில் சொன்னுர். "நிஜந் தான்"

"நிஜந்தானு?"

"ஆம்...... அப்படித்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது...... குட்டிச்சாத்தான் வேலை மிக அபாரமானது......மந்திர உச்சாடனத்தினுல் துர்தேவதைகள் வசப்படுகின்றன என்பது நம்நாட்டுச் சித்தாந்தம்......அமெரிக்காவிலே இதை மனத்தோடு சம்பந்தப்பட்ட ஒருவித சக்தி என்கிருர்கள்... எது எப்படி இருந்தாலும், துஷ்ட தேவதைகளின் சூன்யம் உண்மைதான்," என்றுர் டாக்டர்.

சாம்பசிவத்துக்கு யோஜனையாய்ப் போயிற்று. டாக்டர் சொல்வதை நோக்கினுல் தம் குடும்பத்தின்மீதும் யாராவது சூன்யம் வைத்திருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் தலை தூக்கியது. அவர் மனத்தில், ஓடிப்போன செல்லப்பன் முரடன். எதற்கும் துணிந்தவன். பழிவாங்கப் பாதகம் செய்யத் தயங்கமாட்டான், அவன் செய்திருந்தால்?

நேற்றைக்கு முதல்நாள் புழக்கடைப்புறம் கூந்தல்கற்றையும் அதனருகில் தேங்காய்மூடியும் கிடந்ததாக வேலைக்காரி சொன்னுள்.

"என் குடும்பமும் இந்தத் துர்சக்தியால் அழிந்து போகுமா?" என்று சாம்பசிவம் கலங்கிய குரலில் கேட்டார்.

டாக்டர் பதில் சொல்ல வாயெடுத்தார். அப்போது வாசல்புறமிருந்து ஒரு குரல் கேட்டது. "அய்யா, யாரு வீட்டிலே?" என்று யாரோ கேட்டது காதில் விழுந்ததும் சாம்பசிவம் எழுந்து வாசற்புறம் போனுர்.

நடுத்தர உயரம். பரந்தநெற்றி. வளர்ந்த மீசை, தாடிகள். மார்பு திறந்திருந்தது. ஒரு கையில் கமண்டலம் பிடித்திருந்தார். மற்றொரு கையில் மூட்டை ஒன்று. அவரைக் கண்டதும் சாம்பசிவத்துக்குத் தம்மை யறியாமல் பக்தி பிறந்தது. "வாருங்கள்!" என்று வரவேற்றுர்.

சாமியார் உள்ளே வந்து உட்கார்ந்தார்.

"சுவாமிகளுக்கு எந்த ஊரோ?" என்று கேட்டார் சாம்பசிவம் வணக்கமாய்.

சாமியார் சிரித்தார். "அப்பனே, என் சொந்த ஊர் இவ்வுலகமல்ல...... அது என்னப்பன் கைலாஸப் பெருமான் வசிக்கும் திருக்கைலாயம்."

"மன்னிக்கணும்...... சுவாமிகள் ஏதாவது சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம்... இரவு நான் சாப்பிடுவதில்லை."

"பாலாவது......"

"வணக்கம்... எதுவும் வேண்டாம்...... வாசல் திண்ணையில் படுத்துக்கொள்ள அனுமதி கொடுங்கள்... போதும்... காலையில் போய்விடுகிறேன்."

"ஊஹூம், உள்ளேயே படுக்கலாம்...காலையில் போகக் கூடாது......இவ் வீட்டில் உணவருந்தாமல் எந்த அதிதியும் தப்பி ஓடிவிட முடியாது.'

சாமியார் பார்த்தார், புன்னகையுடன் 'ஆகட்டும்' என்று கூறிவிட்டு வாசல் புறம் போய் விட்டார்.

* * *

மறு நாள். மாந்திரீகன் தன் கை வரிசைகளைக் காண்பித்துக் கொண்டிருந்தான். ஊரே அலறும்படி அவன் கதறிப் பாடிக் குதித்தான். என்னென்னவோ ஜபம் செய்து தண்ணீரைத் தெளித்தான்.

டாக்டருக்கோ இவற்றைக் கண்டு சிரிப்பு வந்தது. ஆனுல் அவருக்கோ விலாசவதியின் உடம்பைப் பீடித்திருக்கும் வியாதி இன்னதென்றே புரிய வில்லை. அவர் முயற்சிகள் பயனற்றுப் போய் விட்டன.

சாமியார் வீட்டில் நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார். கவலையோடு விசாரித்தார். சாம்பசிவம் அவரிடம் தம் கதையை யெல்லாம் கூறிவிட்டார். அவளின்றித் தம் வாழ்வு மணம் பெருது என்றும் சொன்னுர். இதைக் கேட்ட சாமியாருக்கு மிக வருத்தமாயிருந்தது, அவர் கடவுளை நோக்கிப் பிரார்த்தித்தார்.

இரண்டு நாட்கள் சென்றன. சாமியார் எங்கோ போய்விட்டார். டாக்டர் தம்மால் ஏதும் செய்ய இயலாது என்று கையை விரித்து விட்டுப் புறப்பட ஆயத்தம் செய்யலானுர். சாம்பசிவம் நம்பிக்கையை இழந்து தலையில் கைவைத்துக் கலங்கி உட்கார்ந்து விட்டார்.

விலாசவதிக்கு உடலில் தென்பே இல்லை. தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என்று அவளுக்குப் புரியவில்லை. ஒரே மயக்கமாயிருந்

தது. தன் அந்திய காலம் நெருங்கிவிட்டது என்று மட்டும் தீர்மானமாக உணர்ந்து கொண்டாள். மேலும் அன்ன பூரணம்மாள் அடிக்கடி ஓடிப்போன செல்லப்பனைப் பற்றிச் சொல்லி அவன்தான் சூன்யம் வைத்து விட்டான் என்று கூறும்போது அவள் மனக் கண் முன் செல்லப்பனின் உருவம் தோன்றும், சரியான முரடன் அவன். ஊரை விட்டு மலையாளப் பிரதேசத்துக்கு அவன் ஓடிவிட்டதாக ஊரில் பேச்சு. அங்கே மாந்திரீகம் அதிகமல்லவா?

இதே நினைவுகளால் அவள் வாடியிருந்ததால் இரவில் அவளுக்கு நிம்மதி கிடையாது. யாரோ தன்னை அமுக்குவது போல எண்ணி நடுங்குவாள். சிலசமயம் தூக்கத்தில் செல்லப்பன் மிரட்டுவது போலக்கனவு கண்டு அலறுவாள். இந்தக் கோளாறுகளால் இந்த வியாதி யாரோ ஏவிவிடப் பட்டது என்று தீர்மானிக்கப்பட்டது.

''மிஸ்டர் சாம்பசிவம், இந்த வியாதி சரீர சம்பந்தப்பட்டதல்ல...... மனோ வியாதி .... எதோ அமானுஷ சக்தி உங்கள் மனைவியைப் பிடித்து உலுக்குகிறது......அதைச் சரிப்படுத்த எனக்குத் தெரியாது...... கைதேர்ந்த மந்திரவாதி தான் தேவை என்றார்'' என்றார் டாக்டர்.

''என்ன டாக்டர், இப்படிச் சொல்கிறீர்களே! மந்திரமாவது ஒண்ணாவது?...... எனக்கு அதிலே நம்பிக்கையில்லை'' என்றார் சாம்பசிவம்.

''அப்படி ஒரேயடியாகச் சொல்லவேண்டாம்... என் வார்த்தைகளைக் கேளுங்கள்'' என்று யாரோ சொல்வது கேட்டு இருவரும் திரும்பிப்பார்த்தார்கள். சாமியார் நின்று கொண்டிருந்தார்.

''சுவாமிகளா? திடீரென்று தோன்றி மறைந்து விடுகிறீர்களே! வாருங்கள், நல்ல சமயத்தில் வந்தீர்கள்...... எனக்குப் பலத்த சந்தேகம்......'' என்று ஆரம்பித்தார் சாம்பசிவம்.

சாமியார் புன்னகை பூத்தபடி அலட்சியமாகச் சொல்ல ஆரம்பித்தார். ''கைலாஸபதி, உன் சந்தேகம் சரிதான்...... எனக்குத் தெரிந்தவரை மனதே ஒரு துர்தேவதைதான்...... அதன் போதனைகளே நம்மை மயக்கி விடுகின்றன. மனத்தோடு ஒரு சக்தி இயங்குகிறது என்று டாக்டர் சொன்னாரே அதுவும் சரிதான்...... பொதுவாகப் பார்த்தால் துர்தேவதைகள் மனிதனின் சிருஷ்டிகள் என்று நான் சொல்வேன்'' என்றார்.

''சுவாமிகள் சொல்வது சரிதான். அதனால் தான் என் மனைவியின் நிலைமையைக் குறித்து எனக்குத் துர்தேவதைச் செய்கை என்ற எண்ணம் ஏற்படவில்லை'' என்றார் சாம்பசிவம்.

''கைலாஸபதி கவலைவேண்டாம். உன் மனைவியைக் காப்பது என் பொறுப்பு. அவளைப் பிழைக்கவைக்கிறேன்'' என்றார் சாமியார்.

டாக்டர் நிமிர்ந்து உட்கார்ந்தார். சாம்பசிவம் தாவிக் குதித்து, ''என்ன சொன்னீர்கள்? பிழைக்க வைத்துவிடுகிறீர்களா?'' என்று கேட்டார்.

''ஆமாம் கைலாசபதி......எனக்கு உன் மனைவியின் உடல் நோய் தெரியும். அதற்கு மருந்து சாமான்யமாய்க் கிடைக்காதது......அது ராக்ஷஸ வைத்தியம்......அதை நான் செய்து வைத்துவிட்டேன்......டாக்டர் அவர்கள் தயவு செய்து மன்னிக்கவேண்டும்'' என்றார் சாமியார்.

டாக்டர் உடனே ''அதனால் பரவாயில்லை...... நீங்கள் குணப்படுத்திவிட்டால் எனக்குத் திருப்தியே......'' என்றார். ஆனால், உள்ளூறச் சாமியார் பலே எத்தன், பணம் தண்டப் பார்க்கிறான் என்று எண்ணிக்கொண்டார். இல்லாவிடில் விலாசவதியின் உடலைக் குணப்படுத்த முடியுமென்று ஒரு முட்டாள்கூடச் சொல்லமாட்டான்.

சாமியார் தம் மூட்டையை அவிழ்த்தார். அதில் பல மூலிகைகளும், மருந்து டப்பாக்களும் இருந்தன. சாமியாருக்கு வைத்தியமும் தெரியும் என்று அப்போதுதான் சாம்பசிவத்துக்குத் தெரிந்தது.

ஒரு பொட்டணத்தை எடுத்தார் சாமியார். அதில் ஏதோ தூள் இருந்தது. தேனை எடுத்து அத்துடன் கலந்தார். பிறகு சில குளிகைகளை எடுத்து அதில் உரைத்துக் கலந்தார். இந்த மருந்தைச் சாப்பிடும்படி விலாசவதியிடம் கொடுத்தார்.

கஞ்சி வைத்துக் கொடுக்கும்படி சொன்னார். வேறு ஆகாரம் ஏதும் கிடையாது. சாமியார் அந்த அறையிலேயே இருந்தார். இரவு தூங்காது கண் விழித்துக் கவனித்தார். அடுத்த நாள் நிலைமை கொஞ்சம் திருந்தியது. மறுநாளும் அதே மருந்துதான். ஆனால் ஆகாரத்துடன் மோரும் கலந்து கொடுக்கலாமென்று சொன்னார். அப்படியே கொடுக்கப்பட்டது.

டாக்டர் மறுநாள் மட்டும் தங்கியிருந்தார். அதற்குமேல் தங்கினால் தம் ஆஸ்பத்திரி வேலை பாதிக்கப்படுமென்று கிளம்பிவிட்டார். போகும் போது சாமியார் வைத்தியம் பலனளித்துவிடும் போலிருக்கிறதே என்று சந்தேகத்துடனேயே போனார்.

சாமியார் பட்டபாடு வீணாகவில்லை. ஒரு வாரத்தில் விலாசவதிக்கு உடம்பு பூரணமாகக் குணமாகிவிட்டது. உடம்பில் தெம்பும் ஏற்பட்டது. பேச்சுத் தெளிவாக இருந்தது. நினைவு நன்றாக இருந்தது.

சாம்பசிவத்துக்கு ஆனந்தம். சாமியாரைக் கைகூப்பித் தொழுதார். ''சுவாமிகளே, நல்ல காலத்திற்கு நீங்கள் வந்தீர்கள்......... நீங்கள் தெய்வம்...... நாங்கள் என்னென்னவோ எண்ணியிருந்தோம்...... சூன்யம் என்று என் மாமியார்

நினைத்தார்...... அதற்குத் தகுந்தாற்போல இந்தக் குடும்பத்துக்கு விரோதி ஒருவன் இருந்தான்......" என்று கூறினார்.

சாமியார் காதுகளைப் பொத்திக்கொண்டார். "கைலாஸபதி, விரோதி யார்? இவ்வுலகத்தில் ஒருவனும் விரோதியுமல்ல, நண்பனுமல்ல...... எல்லோரும் அவன் ஆட்டிவைக்கும் கைப்பொம்மைகள். நல்லவன் கெட்டவனாவது சுலபம்... ஆனால் கெட்டவன் நல்லவனாகிறானே அதுதான் ரஸவாதம்...... அனுபவ ஆன்மவிசாரம் பக்தனின் முதல் அத்தியாயம்... அப்பனே, என்னைப் பார். ஒரு காலத்தில் நான் பெரிய முரடன். இப்போது......" என்றார்.

சாம்பசிவத்திற்குப் பதில் சொல்லத் தோன்றவில்லை. பேசாது நின்றார். பிறகு பேச்சை வேறு பக்கம் திருப்ப எண்ணி, "அது கிடக்கட்டும் சுவாமி...... தங்கள் வைத்தியத்துக்கு இந்த ஏழை தரும்சிறு சன்மானத்தை ஏற்கவேண்டும்......" என்று கூறியபடியே உள்ளே சென்று கத்தை நோட்டுகளைக் கொண்டுவந்து தட்டில் வைத்து நீட்டினார்.

சாமியார் எழுந்து நின்றார். "கைலாஸபதி, நான் வைத்தியத்தை விற்கும் கசடனல்ல...... அப்படி விற்றால் அது வைத்தியமுமல்ல...... என் மனோசக்தி மருந்தாக்கித்தரும் அறிவைக் கொண்டே இத்தொண்டு செய்கிறேன் .... இதற்குப் பணம் எதற்கு?" என்றார்.

"அப்படிச் சொல்லக்கூடாது......... அன்புக் காணிக்கை" என்றார் சாம்பசிவம்.

"வேண்டாம் கைலாஸபதி............ நான் பணத்தை ஏற்பதில்லை. பணம் தேவையாயிருந்தால் நான் அலையவேண்டாம்...... காலடியில் வந்து குவியும்...... அன்பும் அருளும் இருக்கப் பணம் எதற்கு? இவ்வைத்தியத் தொண்டிலே அன்பும், அருளும் கலந்திருக்கவேண்டும், இல்லையேல் பலனில்லை...... நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் சாமியார்.

சாம்பசிவம் மன்றாடினார். இன்னும் சில நாட்கள் இருந்துவிட்டுப் போகவேண்டுமென்று விலாசவதியும் சொன்னாள். அவரோ பிடிவாதமாகக் கிளம்பிவிட்டார். போகும்போது சாம்பசிவத்திடம் ஒரு கடிதத்தைக்கொடுத்து, "இதை நாளைக்குப் படியுங்கள். அதனால் உங்களுக்குச் சில விஷயங்கள் விளங்கும்" என்று மட்டும்சொன்னார்.

கடிதத்தில் என்ன இருக்குமோ என்று சாம்பசிவத்துக்குப் பரபரப்பு. ஆனால் மறு நாள் வரை காத்திருக்க வேண்டுமே! விலாசவதிக்கும் சாமியாரிடம் மதிப்பும், பக்தியும் ஏற்பட்டிருந்ததால் தன் உடல் நிலையைப் பற்றி ஏதாவது கடிதத்தில் எழுதியிருப்பாரோ என்று எண்ணினாள்.

மறு நாள் கடிதத்தைப் பிரித்தார் சாம்பசிவம். அது கீழ்க் கண்டபடி இருந்தது.

அன்புள்ள கைலாஸபதி,

'சுவாமிகள்' என்று என்னை இப்போது அழைக்கிறீர்கள். நான் மகிழ்ந்து போகிறேன். என் வைத்தியத்தை நல்ல சமயத்தில் தக்க இடங்களில் பயன் படுத்துகிறேன், பெருமையடைகிறேன். ஆனால் நான்யார்? நான் வேறு யாருமில்லை. செல்லப்பன் தான். விலாசவதியை மணக்க முடியாத வெறியில் ஊரைவிட்டுப் புறப்பட்ட அதே செல்லப்பன் தான். முரடன் இன்று மாறிவிட்டான். கருணையைக் கலந்து மருந்து கொடுக்கிறான். வைத்தியம் எனக்கு அறிவைத் தந்தது. விழியைத் திறந்தது. மனம் துறவறத்தை விரும்பியது. துறவுக் கோலம் பூண்டு தொண்டு செய்கிறேன். என் வைத்தியத்தில் மனம் வேலை செய்கிறது. கை மருந்து தருகிறது. மனமோ ஆண்டவனைத் துதிக்கிறது. உன் மனைவியின் உடம்பு குணமானதற்கு இதுவே மூலகாரணம். வணக்கம்.

இப்படிக்கு,
செல்லப்பன்.

சாம்பசிவம் கடிதத்தைப் படித்ததும் கண்ணீர் சொரிந்தார். அன்னம்மாள் கற்சிலைபோலாகிவிட்டாள். செல்லப்பன் அவளுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் நல்ல முரடன். அவனா இப்படி மாறிவிட்டான்? எவ்வளவு மாயமாக வந்து மருந்து கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான்? அவன் இல்லாமற் போயிருந்தால்?......

விலாசவதி நிஜமாகவே கண்ணீர் உகுத்தாள். "வைத்தியம் என்பது சாமான்யமல்ல......அது அமரத்வம் பொருந்தியது......அங்கே பொறாமையும் சுய நலமும் பலியாகிவிடுகின்றன...அதற்குச் செல்லப்பனே சாட்சி......"என்றாள் அவள்.

சாம்பசிவம் வீணைகச் சாமியாரைத் தேடமுயற்சித்தார். ஆனால் இதுவரை அந்த மாயச்சன்னியாசியைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. ●

இயற்கை விந்தைகள்

ரவிப்ரியா

இயற்கை விந்தைகளில் ஜந்துக்களின் விந்தைக் கண்களைப்பற்றி "அமெரிக்கன் மெர்க்யூரி" என்ற பத்திரிகையில் வெகு அற்புதமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

மழைப் பாம்புக்கு (நீர்ப் பாம்பு) கண்களும் இல்லை; கால்களும் இல்லை; மூக்கும், காதுகளும் தென்படா; சுருள் சுருளாய் ரப்பர் கயிற்றைப் போலவே இருக்கிறது. குருட்டுப் போக்கில் தரையைத் தடவிக்கொண்டே போகும், இந்தப் புழுவுக்கு உணர்ச்சி ஒன்றைத் தவிர, கொசுக்களுக்கும் ஈக்களுக்கும் இருக்கும் பார்வைகூட இல்லை. ஆனால் இரவு நேரங்களில் தரையிலிருந்து மேலுக்கு ஊர்ந்துகொண்டிருக்கும் மழைப் பாம்பின் மேல் 'டார்ச்லைட்' வெளிச்சத்தைக் காட்டினால் சுருட்டிக்கொண்டு தரையினுள் செல்லவே பார்க்கின்றதே: இந்த இருளில், ஒளியின், வித்யாசம் கண்ணில்லாமல் எப்படித் தெரிந்தது? ஏதோ அபாயம் வருகிறதென்ற பயத்தை எந்த இந்திரியம் அறிவித்தது?

"மழைப் பாம்புக்குச் சர்மத்தின் மேல் போட்டோ எலெக்டிரிக் ஸெல்லுகள் இருக்கின்றன. (வெளிச்சத்தினால் மின்சார ஒளியில் ஏற்படும் மாற்றத்தை வெளிப்படுத்தும் ஜீவகணங்கள்) இவைகளாலேயே உணர்ச்சியை யூட்டும் இந்திரியத்தின் மூலமாய் இந்தப் பேதத்தை அறிகிறது. வெளிப்படையாய்க் கண்கள் என்று காணாவிடினும் இயற்கையான பார்வை விசேஷம் மழைப் பாம்பினிடம் இருக்கிறது. கண்கள் இல்லாத பார்வை இதனுடையது.

இயற்கையில் 'சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்' என்று சொல்லப்பட்டிருப்பினும் கண்களின் மூலமாய் அல்லாது அநேக விதங்களில் பார்க்கக்கூடிய சக்தியை ஜீவகோடிகளிடம் ஆண்டவன் அளித்து உள்ளார்.

முதலில் ஜல சரங்களைப் பார்ப்போம். பனம் பழத்தைப் போல் இருக்கும் உருண்டை மீன்களுக்கு மேற்புறம் சுற்றும் சர்மத்தை ஒட்டினாற் போலப் பளபள வென்று கண்கள் இருக்கும்.

ஸ்டார் பிஷ் (Star Fish) இதன் உடம்பே ஐந்து விரல்களை விரித்து வைத்தாற்போல் நக்ஷத்திர உருவோடிருக்கும். இந்த ஐந்து விரல்களின் நுனியிலும் ஐந்து கண்கள் இருக்கும்.

கிராபிஷ் என்ற மற்றொரு வகைமீன் உண்டு. அதன்கண்கள் பகல் நேரங்களில் வெளுப்பாய் இருக்கும். இரவில் அதே கண்கன் கறுப்பாய் மாறிவிடும். இருட்டில் அவைகள் சுலபமாய்ப் பார்க்க வசதியாய்த் திரவம் போன்ற பொருள் புரைகளுக்குள் தயார் ஆகிறது. விடிந்ததும் இத்திரவப்பொருள் கண்களுக்குள் பக்கவாட்டத்தில் சரிந்து பகலில் பார்ப்பதற்கு அனுகூலமாய் மாறுகிறது.

இங்கே கண்ணின் நிறம் மாறுவதைப் பார்த்தோம். ஆனால் கண்களின் இருப்பிடமே மாறிப் போகும் மீன் இருப்பதை அறிவீர்களா? 'ப்ளொண்டர்' என்ற மீனுக்குப் பிறக்கும்போது தலைக்கு இருமருங்கிலும் கண்கள் இருக்கும். ஆனால் சற்று வளர்ந்ததும், உடம்பு அகன்றதும் ஒரு கண் நெற்றியின் மேல் சென்று, அங்கிருந்து நகர்ந்து, கடைசியில் மற்றொருபுறம் இருக்கும் கண்ணுக்குமேல் வந்து நின்றுவிடுகிறது. மீன் வளர்ந்து பெரிதாகும்போது இரண்டு கண்களும் தலைக்கு ஒரு புறத்திலேயே நின்றுவிடுகின்றன.

நாம் இரண்டு கண்களையும் ஒரே சமயம் அசைத்து ஒரே இடத்தைப்பார்க்கிறோம். வேறு ஜந்துக்கள் எப்புறம் பார்க்கவேண்டுமோ அப் பக்கத்துக் கண்ணை மாத்திரம் அசைக்கும். ஓணான் ஒரே சமயத்தில் வடக்கேயும், தெற்கேயும் பார்த்துக்கொள்ளும் சக்தியுள்ளது.

திமிங்கிலத்தின் கண்கள் குழாய்களில் அடைத்தாற்போல் இருக்கின்றனவோ என்னவோ, அவைகள் ஓணான்களைவிட நன்றாய் இஷ்டம் போல் கண்களைத் திருப்பும் சக்தி வாய்ந்தவைகள். 'சப்மரீன்கள்' 'பெரிஸ்கோப்பை' உபயோகித்துக் கொள்வதுபோல் தம் விருப்பப் பிரகாரம் கண்ணைத் திருப்பும் சக்தி வாய்ந்தவை. அவைகளின் கண்களில் மற்றோர் விசேஷம் கூட இருக்கிறது. கண்களை நாற்புறமும் சுழற்றுவதில், மணல்தூசி தும்பு அதிகமாய் விழலாம். அப்பொழுது திமிங்கிலம் தன் கண்களை உள்ளே இழுத்துக் கொள்கிறது. அந்தக் குழலுக்குமேல் கண் இமைகளில் மயிர் இருப்பதுபோல் இருக்கிறது. அந்த இரப்பை மயிர் கண்களைச் சுத்தப்படுத்துகின்றது.

கண்களை அவ்வப்பொழுது துடைத்துக் கொள்வதில் திமிங்கிலத்தையே வெகு ஜீவன்கள் பின் பற்றுகின்றன. தவளைகளின் கண்கள் மேலுக்கு எழும்பி உப்பினாற்போல் இருக்கும், அவைகள் சேற்றில் குதிக்கும்போது அபாயம் நேராமல் இருக்க, கண்களை உட்புறம் இழுத்துக் கொள்கின்றன.

முதலை நீருக்குள் செல்லும்போது கண்களை இமைகளால் மூடிக்கொள்வதல்லாது கண்ணாடிக் கதவைப்போன்ற மூன்றாவது கண் இமையால் மூடிக்கொள்கிறது. இந்த மூன்றாவது இமையின் கண்களின் நுனியைத் திறந்துகொண்டு அதன் வழியாய்ப் பார்க்கின்றது. பறவைகளுக்குக்கூட இம்மாதிரி மூன்றாவது கண் இமை இருக்கிறது. பறவைகள் பறந்துகொண்டிருக்கும்வரை இந்த இமை கண்ணின்மேல் இப்புறமும், அப்புறமும் ஆடிக்கொண்டே கண்களில் விழும் தூசியையும், தோன்றும் நீரையும் அவ்வப்பொழுது துடைத்துவிடும்.

* * *

பாலைவனப் பிரதேசத்தில் திரியும் நெருப்புக் கோழிகள், ஜிராபில் முதலியவைகளுக்கு வெயிலில் கண்கள் கூசாமலிருக்கத் திரையிட்டாற்போல் இமைகள் இருக்கின்றன. பருந்து, கழுகு முதலியவைகளுக்குப் புருவத்தின் எலும்பு முன்னுக்கு வந்து கண்களைக் கூசாமல் காப்பாற்றுகின்றன.

வளைகளைத் தோண்டிக்கொண்டு வாழும் ஜந்துக்களைப் பரிசோதித்தால் அவைகளில் வெகு ஜந்துக்களுக்கு முன்னங்கால்களில் கண்களை துடைத்துக்கொள்ள மெல்லிய பிரஷ்ஷைப்போன்ற குஞ்சம் இருக்கிறது. பல்லியின் கண்கள், பூனையின் கண்களைப்போலவே வட்டமாக மாத்திரமல்லாது இருட்டில் காண வசதியாய் இருக்கின்றன. பல்லி அவ்வப்பொழுது நாக்கை நீட்டிச் சுத்தமாய்த் துடைத்துக்கொள்ளும். மற்றொரு அதிசயம் பல்லியிடம் உண்டு. அது இயற்கைக்கு மாறுபட்டதாயினும் விசித்திரமானது. பல்லியின் கால் விரல்களுக்குக் காற்றைப் பருகும் சக்தியுண்டு. அக்கால்களில் காற்றை இழுத்துக்கொள்ளும் வில்லைகள் இருக்கின்றன. பல்லியை விளக்கருகில் வைத்துப் பார்த்தால் இரு காதுகளுக்கும் நடுவில் கண்ணாடி வில்லையைப்போல் தெரியும்.

ஜந்துக்களுக்குக் கண்களின் பாதுகாப்பு மிகவும் அவசியம். வெகு விஷயங்களுக்கு ஜந்துக்கள் தம் பார்வையின் மேல் ஆதாரப்பட்டு இருக்கவேண்டி இருக்கிறது.

ஓடும் பிரவாஹ ஜலத்தில் மீன்கள் நிற்க வேண்டி வரும்போது வெள்ளத்தின் வேகத்தையோ, அல்லது நீரின் அசைவையோ கண்டு நீந்தத் தொடங்காது. இரு மருங்கிலும் கரை அசைவதைப் பார்த்து, தன் நடையைப் போடுகிறது. சில மனஸ்தத்துவ ஆராய்ச்சியாளர்கள் இவ் விஷயத்தை வெகு நுட்பமாய் நிரூபித்தார்கள், அசையாத நீர்த் தொட்டிகளில் மீன்களைவிட்டு, நீரை அசைக்காமல் அதனுள் போட்டிருந்த கரைகளைப் போன்ற கட்டைகளை அசைக்கவே கரை அசைவதைப் பார்த்து மீன் திகைத்து வேகமாய் முன்னுக்கு நீந்தி அந்தக் கரையில் படீரென்று அடித்துக் கொண்டதாம்.

கடற்கரை ஓரத்தில் ஆமையின் முட்டைகள் உடைந்து குட்டிகள் வெளிவந்ததும் சகஜமாய்க் கடலுக்குள் சென்றுவிடுகின்றன. கடலின் வாசனையைக் கண்டு அவைகள் செல்வதாய் இயற்கைச் சாஸ்திரக்காரர்கள் நினைத்தார்கள். ஆனால் ஆமை அப்பொழுது பிறந்ததாயினும் கடலைப் பார்க்கச் சக்தியுள்ளதென்றும் கண்டு கொண்டார்கள்.

ஜந்துக்களின் பார்வை பொருள்களைப் பார்க்க மாத்திரமன்று, பொருள்களின் விசேஷங்களைப் பார்வையாலேயே அறிகின்றன. பார்வையினால் அவைகள் அறியும் பாகுபாட்டைக் கண்டு அறிய, கோழிக் குஞ்சுகளுக்குச் சலவைக் கல்லின் மேல் தவிடுபோட்டு வளர்த்து வழக்கப்படுத்தினார்கள். அந்தச் சலவைக் கல்லுக்கருகிலேயே மற்றொரு கல் (சலவைக் கல்லைவிடச் சற்று நிறத்தில் மட்டமான)லின்மேல் தவிட்டைப் போட்டார்கள். கோழிக் குஞ்சுகள் சலவைக் கல்லின் மேல் போட்ட தவிட்டைத்தான் தின்றன. சலவைக் கல்லைவிட மட்ட நிறக்கல் பிரகாசமாய்த் தெரிய, அந்தக் கல்லின் மேல் கண்கள் கூசும்படியான வெளிச்சத்தைப் போட்டார்கள். செயற்கை வெளிச்சத்தில் மனிதர்கள்கூட அறியமுடியாத நிறபேதத்தை அந்தக் கோழிக் குஞ்சுகள் நன்றாய் அறிந்து கொள்கின்றன என்பதை அறிந்தார்கள் ஆராய்ச்சிக்காரர்கள்.

* * *

கடிகாரத்தின் முள் அசைவதை நாம் சரியாய் உணரவேண்டுமானால் ஒரு நிமிஷத்தைவிட அதிகநேரம் செல்லும்; புறாவுக்கு இருபத்து ஒன்பது ஸெகண்டுகளுக்குள் தானாகும். காளைகள் ஆழ்ந்த வண்ணத்துணிகளைக் கண்டால் மிரளும் என்று சாமானியமாய்ச் சொல்லிக்கொள்கிறோம். குரங்குகள் ஒன்றைத்தவிர மற்ற நான்கு கால் ஜந்துக்கள் அனைத்துக்கும் வண்ணபேதத்தை அறியாத மட்டித்தனம் (Colour Blindness) இருக்கிறது. நிறத்தின் முக்கியத்துவம் நமக்கு இருப்பதுபோல் அவைகளுக்கிருக்காது. அவைகள் உயிர்வாழ, தங்களைப் போஷித்துக் கொள்ள வேண்டிய அளவு அறிந்துகொள்ள வேண்டிய நிலைமைக்குத்தான் அவைகளின்பார்வை பழகுகிறது.

நாம் ஈக்களைப் பின்புறமிருந்து பிடித்துவிடலாமென்று கையை வீசிப் பிடித்துக்கொள்ள எத்தனையோ முறை பிரயத்தினப்படுகிறோம், ஈ தனக்குப் பின்பார்வை இருப்பதுபோல் பறந்துவிடுகிறது. புழுக்களுக்குக் கண்களின் அமைப்பு வெகு அதிகமாய் இருக்கிறது. ஒவ்வொன்று ஒவ்வொரு கண்ணைப்போல் வேலை செய்யும், சுமார் பத்தாயிரத்திலிருந்து இருபத்தையாயிரம் துவாரங்கள் கட்டுக் கட்டினாற்போல் இருந்து கண்களாக ஏற்படுகின்றன புழுக்களுக்கு. இத்துளைகள் ஒவ்வொன்றும் உலகின் ஒவ்வொருபுறத்திலும் பார்வையைச் செலுத்தி, எல்லாத் திசையையும் ஒரே சமயத்தில் அறியும்படி செய்கின்றன. இந்தக்

கண்கள் பூதக் கண்களைப்போல் மேலே உப்பிக் கொண்டு இருப்பதால் பக்கவாட்டத்தில் அல்லாது முன்னும் பின்னும்கூட ஒரே சமயத்தில் பார்க்கின்றன. ஆயிரம் கண்களுக்கொப்பாக இருக்கும் இந்தக் கண்ணினால் ஈக்களுக்கு நம்மை விட அதி நுட்பமாய்ப் பார்க்கக்கூடிய சக்தி இருக்கின்றது. நாம் வானவில்லில் ஏழு நிறங்களை நீலத்திலிருந்து, சிவப்புவரை மாத்திரமே பார்க்கிறோம். நாம் பார்க்கமுடியாத அநேக வண்ணங்களைக் கிருமி கீடங்கள் பார்க்கின்றன. தும்பிகள் 'அல்ட்ராவைலைட்' அதி நீல நிறத்தைப் பார்க்கின்றன. ஆந்தைகளும், எறும்புகளும் 'இன்ர் பாரெட்' என்ற நிறத்தைக்கூடப் பார்க்கின்றன,

நம் கண்களில் 'ரெடீனா' [போட்டோகிராப் பிளேட்டைப்போல் கண்களுக்குள் இருக்கும் நரம்புகள் பலகை] நடுவில் 'போலியா' என்ற சிறிய குழி இருக்கிறது. இவ்விடத்தில் நரம்புகளின் நுனிகள் அடர்த்தியாய் ஒன்றுசேர்ந்து இருக்கின்றன. நாம் எதையாவது பார்க்கும்போது அந்தப் பொருளின் சித்திரம் இங்கு அமைந்து நமக்கு நன்கு பார்க்கும் தன்மை ஏற்படுகிறது. ஆனால் நீரில் மூழ்கியபோது பார்வை சிதறிப் பார்க்கமுடியாமல் [கண்களைத் திறந்துகொண்டிருக்க முடியாமல்] செய்துவிடுகிறது.

மற்றொரு விஷயம். நம் கண் நரம்பு விழியின் உட்புறத்தில் செல்லும்வழியில் இருள்புள்ளி [Blind Spot] ஒன்று இருக்கிறது. நாம் பார்க்கும் பொருளின் உருவம் ரெடீனாவின்மேல் விழுந்து இந்த இருள்புள்ளியை ஆக்கிரமித்துக் கொண்டால் மாத்திரம் நமக்குப் பொருளின் விசேஷங்கள் தெரியா. நம் இரண்டு கண்களும் ஒரே பொருளைப் பார்த்துத்தான் நமக்குப் பார்வையை அளிக்கின்றன. அதனால்தான் ஒரு கண்ணால் காணமுடியாத விசேஷங்களை இரண்டாவது கண்பார்த்து நமக்கு முழு உருவத்தையும் காட்டுகிறது. அதனால் நமக்குக் கஷ்டமில்லை, ஆனால் வெகு ஜந்துக்களுக்கு அருகில் இராமல், ஒவ்வொரு புறம் ஒவ்வொன்று இருப்பதால் அப்பக்கம் இருக்கும் கண் அப்பக்கம் பார்ப்பதை மூளைக்குச் சொல்லுகின்றது.

அணில் கண்கள். அதன் கண்களில் இந்த நரம்பு விழிகளை நிறுத்தும் இடத்தில் அப்பளம் போல் மெல்லியதாகக் கீற்றுபோல் ஆகிவிடுகிறது.

நம்மைச் சுற்றிலும் நம் அருகில் நடமாடும் ஜீவ ஜந்துக்களின் பார்வைகளையும், சேஷ்டைகளையும் ஆராய்ந்து பார்த்தோமேயானால் ஆனந்தம் மாத்திரமன்று, புதிய புதிய விஞ்ஞானத்தைக்கூட அபாரமாய்ச் சேகரித்துக்கொள்ள முடியும். இதனால்தான் நம் பெரியோர்கள் 'எல்லா இந்திரியங்களிலும் கண்கள்தான் முதன்மையானவை' என்று சொன்னார்கள் போலும். உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளின் கண்களைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால் இன்னும் எத்தனை அதிசய விஷயங்களை அறிய முடியுமோ? ●

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானோ உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City

வாழும் வையம்!

(நாயகர்)

சீரிய உலகம் மூன்றுஞ்
செய்தொழி லியற்ற வல்ல
நேரிய எதிர்வொப் பின்றி
நிறைந்தஎம் மீசன் சென்னிக்
கூரிய திங்கள் வானிற்
தளிர்முகங் காட்டுங் காலைத்,
தேரிய மனத்த னாகித்
திசைமுகந் தொழுதே னம்ம!

2. அம்மழு மானு மேந்தும்
அவிர்சடை யண்ண லங்கண்
செம்மழு. பரிதி தோன்றச்
செகமெலாம் முகிழ்த்தற் கண்டு,
விம்மித முற்று மாந்தர்
வினையறச் செயல்மேற் கொண்டு
மம்மரைத் துடைத்து நாளும்
மகிழ்கின்ற வையங் கண்டேன்!

3. கண்ணுதற் கடவுள் மேனி
கவினுறு ககன மாகி,
மண்ணுறு முயிர்கட் கெல்லாம்
மாமழை பொழிந்து மேகந்
தண்ணுறு காலுந் தெய்வத்
தன்னருட் கோலம் யாவும்,
புண்ணியப் பொருளாய் மாந்தர்
போற்றியே வாழும் வையம்!

4. வையக வாழ்வி னாலே
வாழ்வாங்கு வாழு மாந்தர்,
ஐயனே போல்வ ரென்ப ;
அமரத்வ முற்ற காந்தி
மையறு வாழ்வி லிந்நாள்
மாண்புறக் கண்டு, மற்ப
மையலே வாழ்வென் றெண்ணி
வாழ்வரோ வாழு மக்கள் !

5. மக்களின் பிறப்பின் மேலோர்
மாபிறப் பில்லை யேனும்
எக்கதி உய்க்கு மோ?வென்
றிருவினைக் கஞ்சி வாழும்,
தக்கவர் இருக்கை யாலே
தாரணி தகவுற் றோங்கி
முக்கண னருளை நாடி
முறைமையி லொழுகு கின்றார்.

நேபாள யாத்திரை

கே. ஸ்ரீ.

நேபாளம் சமீப காலம் வரையில் சாதாரணமாக யாவரும் பார்க்கக் கிட்டாததாக இருந்தது. காரணம் அதைத் தங்கள் ஏகபோகமாக ஆண்டு வந்த ராணாக்கள் அன்னியர்களை உள்ளே அனுமதிக்காதது. சென்ற நவம்பர் மாதத்தில் நடந்த உள்நாட்டுச் சண்டைக்குப் பிறகு இந்த நிலைமை மாறி இப்பொழுது நேபாளத்திற்குச் செல்வது வெகுசுலபம் என்று சொல்ல முடியாது. என்றாலும், முன்னைய நிலைமையைவிட இப்பொழுது மிகவும் நல்லது.

நேபாளம் என்று கேட்ட மாத்திரமே கிழக்கே யிருந்து மேற்கே வியாபித்திருக்கும் ஹிமயமலைத் தொடரும் அதற்கு மேலே உள்ள திபெத்தும் மனக்கண் முன் தோன்றி மறையும். ஆனால் இந்தியாவில் நமக்கு நேபாளத்தைப்பற்றித் தெரிந்துள்ள வெகு சொற்ப விவரங்கள் சௌந்தர்யமும், வனப்பும் பனிமலைகளின் வெள்ளிபோன்ற ஜ்வலிப்பும் எவ்வாறு என்றுகூட மனதில் தோன்ற உதவா.

நேபாளத்திற்குச் செல்வதே ஒரு பெரிய காரியம். ஏனெனில் கேவலம் 68-மைல் தூரத்தை இந்திய எல்லையிலிருந்து கடக்க இரண்டு நாள்கள் ஆகும். நேபாளம் என்றாலே அதன் தலைநகரமான காத்மாண்டுவும் அதைச் சுற்றியுள்ள பழைய நகரங்களான பாடனும் (Patan) பட்காவும் (Bhatgavm) என்று நேபாளத்தில் நம்புகிறார்கள். தற்கால துரித வாகனமான ஆகாய விமான மூலம் காத்மாண்டுவை ஒன்றரை மணியில் அடையலாம். ஆனால் அப்படி நேபாளத்தை, "பார்ப்பது" ராமாயணத்தைச் சுருக்கிய ஆங்கில புத்தக மூலம் படித்துத் தெரிந்து கொள்வது போலாகும். ஆகவே காரும் கழனியும் தேக்கும் பலாவும் ஒருங்கே கொழித்து, நாட்டைச் சௌந்தரிய வளமாக்கும் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

நேபாளத்தின் தலைநகரை அடைய ஒரே தரை மார்க்கம்தான் உண்டு. அது பீஹாரின் கிராமம் போன்ற ரயில்வே ஜங்ஷனான ராக்ஸால் (Raxaul) மூலம். பீஹாரின் சில தொத்து வியாதிகளுள் அதன் வடஎல்லை மூலம் ஓடும் O. T. ரயில்வே ஒன்றாகும். மூட்டைப்பூச்சியும் கிழிசல் மெத்தையும் நிறைந்த இந்த "பழைய களைத்த ரயில்வே" (Old and Tired Railway) மூலம் கங்கையைக் கடந்தபிறகு ராக்ஸாலை அடைகிறோம். கங்கையின் வடகரையில் உள்ள ஸ்டேஷனான பலேஜா கட்டத்திலிருந்து ராக்ஸாலுக்கு உள்ள தூரம் 117 மைல்களே. இதைக் கடக்க O. T. ரயில்வேக்கு 10 மணி நேரத்திற்கு மேல் வேண்டும்.

ராக்ஸால் ஒரு சிறிய கிராமம். காத்மாண்டுவுக்குப் போகும்வழி என்பதால் இதற்குப் பிராபல்யம் ஏற்பட்டு இருக்கிறது. நேபாளத்திலிருந்து இந்தியாவிற்குப் பிரதி வருஷமும் சுமார் 9கோடி ரூபாய் பெறுமானமுள்ள தேக்குமரம், இந்திய வைத்தியர்களுக்கு உபயோகப்படும் காட்டு மூலிகைகள், முதலியன ராக்ஸாலுக்கு வருகின்றன. பதிலுக்கு நேபாளத்திற்கு இதே ஊர் மூலம் ஜவுளிகள், பெட்ரோல், உப்பு, மண்ணெண்ணெய் முதலியன போகின்றன. ராக்ஸாலில் மிகவும் விசேஷம் மொச்சைக்கொட்டை போன்ற அந்த ஊர் கொசுக்கள். அதை விட்டால் ஒரு ஹோட்டலோ, சினிமாக் கொட்டகையோ அல்லது நம் ஊர் வெற்றிலைபாக்குக் கடையைவிடப் பெரிய கடையோ கிடையாது. ராக்ஸாலுக்கு வரும் யாத்ரிகர்கள் அங்குள்ள ரயில்வே சிற்றுண்டிச் சாலையில்தான் சாப்பிடவேண்டும். காத்மாண்டுக்குச் செல்ல, சர்க்கார் அனுமதி உள்ளவர்களுக்குச் சர்க்கார் அதிதி விடுதியில் இடம் உண்டு.

நான் ராக்ஸாலை அடைந்த பொழுதுதான் சர்க்காருக்கும் நேபாள காங்கிரஸுக்கும் மிகவும் பலத்த யுத்தம் நடந்து கொண்டிருந்து, பீர்கஞ்சை (Birgarj) நேபாள காங்கிரஸார் பிடித்து, தங்கள் வசமாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆகையால் நான் இரவில், தெரியாத்தனமாக, சர்க்கார் விடுதியில் இறங்கிவிட்டேன். இரவில் கொஞ்சம் வெளியே வரவேண்டும் என்று நான் அறையை விட்டு வெளிப்பட்டதும் இருட்டில் முகம் தெரியாத ஒரு நேபாளி துப்பாக்கி சகிதம் என்னை வரவேற்று நிறுத்தினான்.

பாஷை தெரியாமல் அவனுடன் மாட்டிக் கொள்வது உசிதம் இல்லை என்று நான் உள்ளே சென்று படுத்துவிட்டேன். நான் கண்ணயர்ந்திருப்பேன், என்னுடன் ராக்ஸாலுக்கு வந்திருந்த என் நண்பர் ஸ்ரீ நாவல்பாபு வந்து எழுப்பி, "குசு குசு" வென்று ஏதோ சொன்னர். அரைகுறையாக எனக்கு என்ன விளங்கிற்று என்ருல் நாங்கள் மிகவும் ஆபத்தில் மாட்டிக்கொண்டு விட்டோம் என்பது. காரணம் சர்க்கார் விடுதி காங்கிரஸ் வசம் இருந்தது. அதில் காங்கிரஸ் சண்டைத் தொண்டர்கள் ஏராளமான துப்பாக்கி மருந்து சகிதம் இருந்தனர். நவீன ஆயுதங்களை உபயோகிக்கத் தெரியாத அவர்களிடம் குரங்கு கையில் பூமாலை அகப்பட்டது போல் ஆயுதங்கள் சிக்கியிருந்தன. ஆகையால் ஒரு ஆயுதக்கிடங்கில் இரவைக் கழிப்பது உசிதம் இல்லை. ஒருவருக்கும் சொல்லாமல் எங்கள் படுக்கைகளையும் மூட்டைகளையும் கட்டிக்கொண்டு இரவுக்கு இரவாக ஒரு நண்பரின் பெரிய நெல்மிஷின் கட்டிட மாடியில் தங்கினேம்.

நான் ராக்ஸாலில் கிட்டத்தட்ட இரு வாரங்கள் இருந்ததில் என்ன என்ன நடந்தது என்பதை விவரிக்க விரும்பவில்லை. ஆனாலும், அந்த இருவார நிகழ்ச்சிகள் ஒரு ஏதேச்சாதிகார ராணு சர்க்காரை மண்ணைக் கவ்வச் செய்ததால் சுருக்கமாக அவைகளைச் சொல்லுகிறேன்,

மன்னன் வீரதிரிபுவனர் நேபாள மண்ணைத் தட்டிக்கொண்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்த பிறகு, நேபாளத்தை ஏதேச்சாதிகாரத்திலிருந்து விடுவிக்கக் காங்கிரஸ் ஆயுதந் தாங்கிய போர் தொடுத்து நேபாளத்துக்குச் செல்லும் பாதையை அடைத்து, பீர்கஞ்சைப் பிடித்து ஒன்பது நாட்கள் குடியரசு நடத்தியது. ஆனல் ராணுக்களின் ராணுவ பலத்திற்கு முன்னல் இது எம்மாத்திரம்? ஆகையால் பத்தாவது நாள் போன மச்சான் கதையாக, காங்கிரஸ் தொண்டர்கள் பின் வாங்கினர்கள். வெற்றி மாலை சூடிய வீரர்களின் முகத்தில் துக்கமும் அவமானமும் தென்பட்டன என்ருலும் காலம் மாறும். தங்கள் முதல் சகாப்தம் தோல்வியில் முடிந்தாலும் இறுதியில் வெற்றி கிட்டும் என்று அவர்கள் திடமாக நம்பினர். குடியரசு நிலவிய பீர்கஞ்சில் திரும்பவும் தடியரசு ஆட்சி புரிந்தது. மார்பை முன் தள்ளி நடந்த பீர்கஞ்ச் வாசிகள் கூர்க்க ஆயுதபாணிகளுக்கு அஞ்சி வங்கில் புகுந்த எலிகள் மாதிரி நடமாடலாயினர்.

சுதந்திர யுத்த முதல் காண்டம் முடிந்ததும் நான் காத்மாண்டு போகப் பிரம்ம பிரயத்தனம் செய்து பிறகு அனுமதி வாங்கினேன். காலையில் நேபாளத்தின் இரு பொம்மை போன்ற ரயில்வேக் களில் ஒன்ருன ராக்ஸால்—அம்லேக்கன்ஜ் ரயில்வே வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். சுமார் 24 மைல்களைக் கடக்க இந்த ரயிலுக்குச் சுமார் நான்கு மணிகள் பிடிக்கின்றன.

நேபாளத்தைப் படத்தில் பார்த்தால் ஏறக் குறைய ஒரு நீண்ட சதுரம்போல் இருக்கும். அதன் நீளம் 500 மைல், அகலம் 100 மைல். இதில் சுமார் 30 மைல் அகலத்திற்கு ஒரு நெல் வயல் காடு, இதை ரயிலில் போகும்பொழுது மிகவும் ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டு போனேன். என்னுடன் ரயிலில் வந்த நண்பர் இந்த வயற்காட்டில் விளையும் நெல் நேபாளத்திற்கு வேண்டிய அளவிற்கு இரட்டிப்புக்குமேல் என்ருர். இந்த நெல்லில் பெரும்பாகம் உள்நாட்டுக் கலவரத்திற்கு முன் தவக்கம் இன்றிப் பீஹாருக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. ராணு காங்கிரஸ் சண்டை துவங்கியதும் ராணுக்கள் இந்தியாவின்மேல் சீறி, நெல் போக்குவரத்தைத் தடைசெய்தனர். என்ருலும் விவசாயமே அடிப்படையான வாழ்வில் தடை என்ன தட்டு என்ன? அன்றும் இன்றும் நேபாள நெல் ராக்ஸாவை அடைகிறது, அரை படுகிறது. ஆனல் பரிதாபம்! பெரும்பாலும் கள்ள மார்க்கெட்டுக்குப் போய்ச் சேருகிறது.

நிற்க, கழனிகளைப் பார்த்து ஆனந்தித்துக் கொண்டே இருக்கையில் மத்தியானம் சுமார் 11-30 அம்லேக்கஞ்ச் வந்தது. இத்துடன் யாத்ரீகர்களின் ரயில் பிரயாணம் முடிவடைகிறது.

அம்லேக்கஞ்சில் ரயில்வேயின் முடிவு ஸ்டேஷன் என்பதைத் தவிர வேறு எதுவும் விசேஷம் ஒன்றும் இல்லை. ராக்ஸாலிலாவது ரயில்வே சிற்றுண்டிச் சாலை உண்டு. இங்கு அதுவும் இல்லை, ஆனல் ஸ்டேஷனுக்கு அருகில் ஒரு போஜன விடுதி இருக்கிறது. இதில் அரிசிச் சாதம் மல்லிகைப்பூப்போல் இருக்கும். திறந்த வெளியில் அழுக்குச் சட்டை அணிந்த சமையற்காரர்களும் அதைவிட மோசமான பரிமாறுபவர்களும் அந்த ஹோட்டலில் இருந்தாலும் கிள்ளும் பசிக்கு முன் இவர் எம்மாத்திரம்? ஆகவே என்னுடைய சுசிருசிகளை ஒதுக்கிவைத்துவிட்டு அங்கே சாப்பிட்டேன். அரிசிப் பட்டாள ராணுவத்தைச் சேர்ந்த எனக்கு வெறும் சாதமேகிடைத்திருந்தால் கூடத் திருப்திதான். சென்னையில் உட்கார்ந்து கொண்டு அம்மாதிரி அளவில்லாத அரிசிச் சாப்பாடு வேண்டும் என்ருல் கிட்டுமா? தானியக் களஞ்சியமான தஞ்சை ஜில்லாவையே அம்லேக்கஞ்ச் ஞாபகப்படுத்திற்று.

சிறிது நேரத்திற்கெல்லாம் பஸ் புறப்படும் என்று "ஹோட்டல்" முதலாளி சொன்னதும் டிக்கட் வாங்கி, பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். பஸ் புறப்பட்டு ரயிலைவிட மிக வேகமாகச்செல்ல ஆரம்பித்தது. அம்லேக்கஞ்சிற்குச் சிறிது தூரத்திலிருந்தே தேக்குக் காடு ஆரம்பம் ஆகிறது. முதலில் கொஞ்சம் விசாலமாக இருக்கும் காடாரம்பம் போகப்போக இருண்டு அடர்ந்து மரங்களும் வானை நோக்கி நிற்கின்றன.

இந்தியாவாக இருந்தால் பாதையில் உள்ள பாலங்களை உடனே உடைத்துத் தரைமட்டமாக்க வேண்டும் என்பார்கள். ஏனென்றால் பாலங்கள் தேக்கு மரத்தினால் பூராவாகச் செய்யப்பட்டிருக்கின்றன, பஸ் ரோட்டிலிருந்து பாலத்தின்மேல் செல்லும்பொழுது ஏற்படும் சப்தம் கொஞ்சம் பயமாகவே இருக்கிறது. ஆனால் இங்கு யாரும் இதற்குப் பயப்படுவதில்லை.

ரஸ்தா போகப்போக மேடிடுகிறது. சுமார் இருமணிநேரப் பிரயாணத்திற்குப்பின் பீம்பெடி (Bhimpedi)யை அடைந்தோம். இந்த ஊர் மேட்டுப்பாளையத்தை ஒத்திருக்கிறது. பாக்கி ஊர்களைவிட இது பெரியதாகவும் ஜன நடமாட்டம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த ஊருக்குப்பிறகு ரயிலோ, மோட்டாரோ அல்லது வேறு எந்தவித வாகனமோ, மகாராஜாவாக இருந்தாலும்சரி, பாட்டாளியாக இருந்தாலும்சரி, கிடையாது. ஒன்று நடக்கவேண்டும், அல்லது டோலியில் ஏறி உட்காரவேண்டும், அல்லது மலைக் குதிரையின் மேல் சவாரி செய்ய வேண்டும்.

நான் பீம்பெடியை அடைந்த பொழுது சுமார் நான்கு மணியிருக்கும். என் வருகைக்காக ஒரு டோலி தயார் செய்யப்பட்டுக் காத்துக்கொண்டு இருந்தது. அங்கே தங்குவதற்குச் சரியான இடம் கிடையாது என்றும் ஸிஸா கடி (Sisa Gati)யில் எனக்கு விடுதி சர்க்கார் அதிதி கிரஹத்தில் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். சரி என்று டோலியில் ஏறி உட்கார்ந்தேன். என் பெட்டி படுக்கைகளை இரு கூலிகள் தூக்கிக் கொண்டு நடந்தனர்.

டோலி என்பது சாதாரணமாக ஒரு ஆள் காலை மடக்கிக் கொண்டு உட்காரும்படி செய்யப்பட்டிருக்கிறது. நான் சென்ற டோலியை எட்டுப் பேர் தாங்கிச் சென்றார்கள். டோலியை டண்டி (Dandi) என்றும் சொல்லுகிறார்கள். சென்னை ரிக்ஷாவை நினைத்துக் கொள்ளுங்கள். அதில் சக்கரங்களைக் கழற்றி, கால் வைத்துக் கொள்ளும் பலகையை உயர்த்தி இரு பக்கங்களிலும் மூடி, குறுக்கு அச்சுக்குப்பதிலாக நெடுக்கத்தில் அச்சுப் போட்டிருப்பதாக மனதில் கவனம் செய்யுங்கள். இதுவே டோலி. முன் ஒரு மூக்கணையும் பின் ஒரு மூக்கணையும் பொருத்துகிறார்கள். இதைத்தான் தோளில் வைத்துச் செல்கிறார்கள் டோலி தூக்கிகள்.

பீம்பெடியை விட்டதும் ஒற்றையடிப் பாதையைத்தான் நம்பவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து அரை மணிக்குள் சுமார் இரண்டாயிரம் அடிக்கு மேல் சென்று விடுகிறோம். ஏற்றம் கடுமையாகத்தான் இருக்கிறது. பாதை மிகவும் கரடு முரடானது. மேலே போகப்போகத் தான் பயங்கரம் புலப்படுகிறது. ஒரு பக்கம் வானைத் தொடுவதுபோன்ற மலைப் பாறைகள், மற்றொருபுறம் கிடு கிடு பள்ளம். இரண்டாயிரம் அடிக்குமேலேயே குளிரும் ஆரம்பித்துவிடுகிறது. ஸிஸாகடியை அடையும் பொழுது அந்தி மங்கி அகோரமான குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது.

ஸிஸாகடி என்ற இடத்தில் ஒரு சர்க்கார் அதிதி விடுதியும் சுங்க ஆபீஸுமே இருக்கின்றன. இது மகாபாரத மலைத்தொடரில் சுமார் ஏழாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. இருபுறமும் திறந்த வெளியாக இருப்பதாலும், ஸிஸாகடியே மலைத் தொடரின் முதுகெலும்பின்மேல் அமைக்கப்பட்டிருப்பதாலும் காற்று அலறித்தள்ளி, நான் என் அறைமை அடைந்தபொழுது குளிர் தொப்புள்வரை உள் நடுக்கம் எடுக்கும்படி இருந்தது.

சர்க்கார் விடுதியில் அறைகள் என்னவோ நன்றாகத்தான் இருந்தன. கட்டில்கள் போடப்பட்டு, பார்த்தாலே உடனே போர்த்திக்கொண்டு படுத்துக்கொண்டுவிடலாம் என்று தோன்றிற்று. நாழி ஆக ஆக, குளிரும் ஏறிக்கொண்டே வந்தது. குளிர் தாங்காமல் எனக்கே பிரத்தியேகமான ஒன்றிரண்டு பாட்டுகளைப் பாட ஆரம்பித்தவுடன் என் அறைக்கும் அடுத்த அறைக்கும் குறுக்கே உள்ள கதவை யாரோ தட்டுவதுபோல் இருந்தது. கதவைத் திறந்தவுடன் "ஸார் நீங்களும் நம் ஊர் பேர்வழியா ஸார்" என்று ஒரு தமிழர் என்மேல் பாய்ந்து கட்டிக்கொண்டார். அவர் பெயர் ஸ்ரீ நாராயணன். தந்தி இலாகா மேற்பார்வையாளர். பாட்னா அவர் இருப்பிடம். காத்மாண்டுவுக்குக் கம்பியில்லாத் தந்தி டெலிபோன் வசதி அமைப்பது சம்பந்தமாகச் சென்று கொண்டிருந்தார். "என்ன ஸ்வாமி, குளிர் இப்படியே இருந்தால் நான் காலையில் திரும்பிவிடலாம் என்று இருக்கிறேன் ஸ்வாமி" என்றார். "குளிர் இதைவிட இன்னும் கொல்லும் ஸ்வாமி" என்றேன். "உத்தியோகம் போனால் கவலை இல்லை ஸ்வாமி, உயிர் ஒன்று இருந்தால் காவேரி தீரத்தில் "சிவா ராமா" என்று காலத்தைக் கழித்து விடுவேன். நாளைக் காலையிலேயே திரும்பி விடலாம் என்று திட்டம் போடுகிறேன்" என்றார், ஸ்ரீ நாராயணன்.

குளிர் கடுமை தாங்காமல் இருவரும் ஒரே அறையிலேயே தூங்குவது என்று தீர்மானித்தோம். விடுதி வேலைக்காரன் இருகை விறகு கொண்டுவந்து கொடுத்தான். அதை ஒரேயடியாக நாராயணன் எரித்துவிட்டதால் அறை பூராவும் புகை சூழ்ந்துவிட்டது. என் புதிய சிநேகிதர் ஜன்னலைத் திறக்கக்கூடாது என்று உத்தரவு போட்டுவிடவே புகை மண்டலத்தில் இரவு பூராவும் சஞ்சரித்தேன்.

ஒரு பக்கம் விடியுமுன்னரே டோலி தூக்கிகளும் கூலிகளும் தாறுபோட ஆரம்பித்தனர். ஹிமாலயப் பிரதேசத்தில் சுயக்ஷவரம் செய்து கொள்வது கரடியுடன் குஸ்தி செய்வது போன்றது. ஏனென்றால் ஸோப் தடவினால் நுரை வராது, மயிர்க்காம்புகளும் மிகவும் அழுத்தமாக இருக்கின்றன. ஒருவாறு ஸ்னான பானாதிகளை முடித்துக்கொண்டு நடையைக் கட்டி

னோம். நான் டோலியைப் பிடித்துக்கொண்டேன். ஸ்ரீ நாராயணன் மலைக்குதிரை மேல் சவாரி செய்தார்.

ஸிஸாகடி சுங்கியில் நேபாள சர்க்கார் அழைப்பின்மேல் போகிறவர்களைத்தவிர மற்ற யாவரையும், எல்லாச் சாமான்களையும் புரட்டிப் புரட்டிச் சோதனை செய்கிறார்கள். துணிமணிகள் புதிதாய் இருந்தால் அவைகளுக்குச் சுங்க வரி விதிக்கப்படுகிறது. ஆனால் சுங்க சோதனையில் முக்கியமாகக் கவனிக்கப்படும் விஷயம் காத்மாண்டுக்குச் செல்பவர் ஏதாவது ரகசிய ஆயுதம் கொண்டுபோகிறாரா அல்லது ஏதாவது பிரபலஸ்தருக்கு ரகசியக் கடிதம் கொண்டுபோகிறாரா என்பது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காத்மாண்டுவில் 1949ஆம் வருஷம் அக்டோபர் மாதம் பிரதமர் மோகன்ஸிங் ஷம்ஷேர் ஜங் பகதூர் ராணாவைக் கொல்லச் சதி நடந்து, கடைசித் தருணத்தில் சதி பயனற்றதாகச் செய்யப்பட்டது. பிறகு பிரதமரைக் கொல்ல முயற்சி செய்தவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் நேப்பாளத்திற்கு வெளியிலிருந்து ஒரு சூழ்ச்சிக் கும்பலால் அனுப்பப்பட்டவர் என்று தெரியவந்தது. இதில் எவ்வளவு பங்கு உண்மை என்று நாம் ஆராயாவிட்டாலும், இதிலிருந்து வெளிப்படுவது என்னவென்றால் காத்மாண்டுவில் ராணா சர்க்கார் தங்களுக்குப் பிடிக்காதவர்களையும் தீவிரவாதிகளையும் விரும்பவில்லை என்பது புலனாயிற்று.

சுங்கியைத் தாண்டியதும்தான் நேப்பாள யாத்திரை எப்படி இருக்கும் என்பது தெரிந்தது. நாங்கள் தாண்டவேண்டியது மகாபாரதமலைத்தொடர். போகப் போக ஏற்றம் பயங்கரமாக இருந்தது. ஒரு அடி நடந்தால் அரை அடி உயர்ந்தது. பாதையும் மிகவும் குறுகல், போதாததற்குப் பாதை மிகவும் கரடு முரடாக ரம்பப் பல்போல கால் வைத்தால் கால் போய்விடும்போல் இருந்தது. போகப் போக, ஒரு பக்கம் வானளாவும் மலைச்சுவரும், மற்றொரு பக்கம் கிடுகிடு பள்ளமுமாக முன் பின் மலைப் பரிச்சயம் இல்லாதவர்களுக்கு உள்ளூரக் கிலி உண்டாகும்படி இருந்தது.

முதலில், இப்பேர்ப்பட்ட இடத்தில் எப்படி கூலிகள் நம்மைத் தூக்குவார்கள் என்று பச்சாத்தாபம்கொண்டு நான் நடக்க ஆரம்பித்தேன். ஆனால் சில கஜதூரம் கடக்குமுன்னரே என் ஹிருதயம் நின்றுவிடும்போல் மார்பு அடித்துக்கொண்டது. மூச்சு பலமாகப் போக ஆரம்பித்து, சில சமயங்களில் மூச்சை உள்ளே இழுக்க முடியாமல் போய்விட்டது. பச்சாத்தாபப்பட்டால் ஆள்பாடு ஆபத்துத்தான் என்று தோன்றியது. கூலிகளைக் கூப்பிட்டு மறுபடியும் டோலியில் ஏறிக்கொண்டேன்.

டோலி தூக்கிகள் சாதாரணமாக நல்ல தார் ரோடில் காலை வீசி நடப்பதுபோல நடப்பதைப் பார்த்ததும் இவர்கள் மனுஷ்யர்களா அல்லது அமானுஷ்ய இயந்திரங்களா என்ற சந்தேகம் பிறந்தது. போதாக்குறைக்கு அவர்கள் உரக்கப் பேசிக்கொண்டும் ஹாஸ்யமாகச் சம்பாஷித்துக் கொண்டும் சென்றார்கள். சரி, நம் காருண்யத்தை ரூபாய் அணாவில் காண்பித்தால் போதும் என்று நான் கையில் வைத்துக்கொண்டிருந்த சிகரெட் டப்பாவிலிருந்து ஆளுக்கு ஒரு சிகரெட் எடுத்துக் கொடுத்தேன். அவ்வளவுதான். அவர்கள் சிகரெட்டை ஒரு இழுப்பு இழுத்துவிட்டு நடையைக் கடுமையாகப் போட ஆரம்பித்தார்கள். ஆனால் நான் செய்த பழக்கம் மற்றொரு விதத்தில் ஆபத்தில் முடிந்தது. பாதி தூரம் கழியுமுன்னரே என் சிகரெட் ஸ்டாக் தீர்ந்துவிட்டது.

இந்த அமானுஷ்யப் பிறவிகளைப்பற்றி இன்னும் ஒரு வார்த்தை. கரணம் தப்பினால் மரணம் என்று இருக்கும் அபாயகரமான மலைப்பாறையில் இவர்கள் சரிவின் ஓரமாக நடக்கிறார்கள். முதலில் இது எனக்கு வியப்பாக இருந்தது. சில தடவைகள் அவர்களைப் பாறைச்சுவர் ஓரமாக நடக்கும்படி கேட்டுக்கொண்டேன். அவர்கள் ஓரமாக நடந்தால் சுவரில் உராய்ந்து உடம்பில் காயம் பட்டுவிடும் என்று மற்ற ஓரமாக நடப்பதாகச் சொன்னார்கள். வாஸ்தவமான பேச்சு. சுவரில் உராய்ந்தால் காயம் படும் என்று ஒரு அடி அஜாக்கிரதையாக வைத்துச் சிரமம் இல்லாமல் சுவர்க்கம் போவதையே இவர்கள் விரும்பினார்கள் போலும்!

அந்தப் பிராந்தியத்தில் மரம் செடி கொடிகள் என்பதே எங்கும் காணப்படவில்லை. கிட்டத்தட்ட பாதைசெல்லும் வழியெல்லாம் மலை அருவிகள் விழுந்து "ஓ" வென்ற சப்தத்துடன் சரிவின் கீழ் ஓடிக்கொண்டிருந்தன. ஒருவாறாக, தொலையாமல் நடந்து கூலிகள் கூலிக்காணி (Coolicani) என்ற ஊரை அடைந்தார்கள். பண்டுதர்கள் கட்டை வண்டியில் குந்திக்கொண்டு உட்காருவது போல் உட்கார்ந்து எனக்குக் கால் மரத்துவிட்டது தவிர, பசியும் அகோரமாக இருந்தது. ஆனால் அங்கே கிடைக்கக்கூடியது மிஞ்சி மிஞ்சி தேயிலைப்பானம்தான். ஒரு நல்ல அடக்க ஒடுக்கமான நேபாளமாது சூடாகத் தேத்தண்ணீர் கொடுக்கிறேன் என்பதை எப்படி மறுக்க முடியும்? ஆகையால் சரியென்று ஒரு அழுக்கடைந்த பெஞ்சியில் உட்கார்ந்தேன். டோலி தூக்கிகள் தேத்தண்ணீரை அபேக்ஷிக்காமல் ஒரு டிராம் பட்டைச்சாராயம் போடச் சென்றுவிட்டார்கள். தேத்தண்ணீர் தயார் செய்து கொடுத்ததை வெகு ஆவலுடன் வாங்கி அருந்தினேன். டோலியில் ஒரு பிஸ்கெட் பொட்டலம் இருப்பது ஞாபகம் வந்தது. பிஸ்கெட்டும் டீயுமாக நான்கு கோப்பைகள் டீ அருந்தியது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் தஞ்சாவூர்க்காரனான எனக்கு டீ என்றால் நம் பக்கங்களில் கடிவாளம் கொடுக்கப்படும் குதிரையைப் போல் வாயே திறக்காது.

சிறிது நேரம் அந்த டீக்கடை மாதுடன் பேசிக்கொண்டிருந்தேன். நேப்பாளிகள் வாழ்க்கையே மிகவும் கடினமான வாழ்க்கை, அதிலும் பிழைப்பிற்காக இரண்டுங்கெட்டானாக இருக்கும்

இந்த இட ங்களில் வாழ்பவர்கள் உயிர்வாழ வேண்டிதான் உலகின் உயர்ந்த மலைத் தொடரின் மேல் காற்றும் குளிரும் கலந்து வீச, போதிய கம்பளமோ மற்ற வசதிகளோ இல்லாமல் இருக்க முடியும். அந்த மாது சொன்னாள்: தனக்கும் தன் குழந்தைகளுக்கும் போதிய வருவாய் வருகிறது என்று,

டோலி தூக்கிகளும் வரவே மறுபடியும் நடையைக்கட்டினோம். கூலிக்காணியிலிருந்து பாதை திடுதிடுவென்று இறங்குகிறது. சுமார் 12,000 அடி உயரம் ஏறிவிட்டு மறுபடியும் இறங்க வேண்டியது. இறக்கமும் படு இறக்கம். குச்சி, கோல் இல்லாமல் நடந்தால் வெகு சீக்கிரம் கீழே போய்ச் சேரலாம்—உருண்டு புரண்டுகொண்டே.

என் நண்பர் நாராயணனைப்பற்றிச் சொல்ல மறந்துவிட்டேனே. அவர் குதிரை வாகனராகக் கிளம்பிச் சென்றார் அல்லவா? காஸாரி இல்லாமல் தாமே குதிரையைச் செலுத்தினாராம். குதிரை பிடுங்கிக்கொண்டு ஒரு ஆபத்தான வளைவில் ஓடவே அவருக்குக் கிலிபிடித்துக்கொண்டது. உயிர் தப்பினால் போதும் என்று ஜேணத்திலிருந்து வலது காலை எடுத்துக்கொண்டு இடது பக்கமாகச் சுவர் பக்கம் குதித்துவிட்டார். இதனால் ஏற்பட்ட பலன் அவருக்கு ஒரு பக்கமாக அடிபட்டதுதான். என்னைக் குதிரைமேல் ஏறி வரும்படி சொன்னார். எனக்கும் உயிர் வெல்லம் ஆனதால் நீர் குதிரைமேலேயே வாரும். ஆனால் காஸாரியைப் பிடித்துக்கொள்ளச் சொல்லும் என்று சொல்லிவிட்டேன்.

ஒருவாறாக இறக்கம் முடிந்ததும் நான் இறங்கி நடக்க ஆரம்பித்தேன், சுற்று வட்டாரமும் மிகவும் பார்வைக்கு ரம்மியமாகவும் நல்ல பச்சையாகவும் இருந்ததால் நடையில் அலுப்புத் தட்டவில்லை ஸ்ரீ நாராயணன் டோலியில் ஏறிக்கொண்டார்.

பிரதேசமும் பாறையும் மலையுமாக இல்லாமல் சாகுபடிக்கு லாயக்காகவும் நல்ல செழிப்பான மண் உள்ளதாகவும் இருந்தது. பாசனத்திற்கு மழையைத் தவிர வேறு வசதிகள் இல்லாததால் சரிவில் உள்ள இடங்களைப் படிப்படியாக உழுதுவிட்டு, பாத்தி கட்டியிருந்தார்கள். இது ஏன் என்று விசாரித்ததில் ஒரு நேப்பாளி சொன்னார்: ஒரு சொட்டு ஜலமும் விரயம் ஆகக்கூடாது, ஒரு ஊசி குத்தும் நிலப் பரப்பும் விருதா ஆகக்கூடாது என்பதுதான் இந்த, "படிக்கட்டு சாகுபடி"யின் தத்துவமாம்.

நாங்கள் போய்க்கொண்டிருந்த பாதை ஒரு மலைத் தொடரின் நீளம். இந்தத் தொடர்களுக்கு நடுவே மலை ஆறு, மற்றப் பக்கத்திலும் தொடரும் வயல் வெளிகளும். இந்தப் பக்கத்திலிருந்து பார்த்தால் புல் பச்சைக்கு நடு நடுவே மஞ்சள் அல்லது சிகப்புப் பொட்டுகள்போல் தென்பட்டவை சிறு கிராமங்கள். இந்த உலகப்பற்று என்பதே இல்லாத பிரதேசத்தில் எப்படித்தான் உயிர்வாழ அத்தியாவசியமான சாமான்கள் கிடைக்கின்றனவோ என்று உள்ளூர வியந்தேன்.

நீள வழி நடப்பின்போது பொழுதுபோக்க ஒரு வஸ்து இருக்கத்தான் இருந்தது. அது பீம்பெடிக்கும் காத்மாண்டுவுக்கும் நடுவே போடப்பட்டிருக்கும் மின்சாரக் கயிறு மார்க்கம். இதில் பீம்பெடியிலிருந்து அரிசி, துணிமணிகள், பெட்ரோல் முதலியன காத்மாண்டுவுக்குச் செல்லுகின்றன. திரும்பி வரும்பொழுது காலிச்சாக்குகளும் பெட்ரோல் டின்களும் வருகின்றன.

சுமார் ஏழு மணுக்கள் வரையில் ஒவ்வொரு டிராலியிலும் வைக்கிறார்கள். டிராலி ஒரு "ட" உருவமானதாகவும் கீழே சுமார் மூன்று அடி அகலம் உள்ள பலகையுடனும் இருக்கிறது. டிராலிக்கு மேல்பாகத்தில் இரு காந்தத்தால் இயக்கப்பட்ட சக்கரங்கள் எஃகு கப்பியை பற்றிக்கொள்ள, கம்பி பீம்பெடிக்கும் காத்மாண்டுவுக்கும் இடையே ஓயாமல் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

காக்கைகளுக்கும் மனிதர்களைப்போல் அலுப்பு உண்டு போலும்! கிட்டத்தட்ட ஒவ்வொரு டிராலியிலும் காக்கை உட்கார்ந்து டிக்கெட் செலவில்லாமல் போவது ஆச்சர்யமாக இருந்தது. காத்மாண்டுவிலிருந்து பீம்பெடிக்குக் குதிரை மேலோ அல்லது டோலியிலோ செல்லப் பன்னிரண்டு மணிகள் ஆகின்றன, என் நண்பர் நாராயணன் சொன்னார்: "ஸ்வாமி இந்த டிராலியில் சுகமாக உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாக ஆறுமணியில் காத்மாண்டுவுக்குப் போய்ச் சேர்வதை விட்டுவிட்டு ஏன் ஐயா இந்த வாதனை" என்று. இது சம்பந்தமாகப் பிற்பாடு எனக்கு இந்த வரலாறு தெரியவந்தது. காத்மாண்டுவுக்கும் பீம்பெடிக்கும் எஃகு கயிறு மார்க்கம் ஏற்பட்ட பிறகு பீம்பெடியில் பக்காத்திருடர்கள் மூன்று பேர்களைச் சர்க்கார் பிடித்தார்களாம் அவர்களைக் காத்மாண்டுவுக்கு விசாரணைக்கு அனுப்ப வேண்டியிருந்தது அப்பொழுது பிரதமராயிருந்தவர் உத்தரவு பிரகாரம் அவர்களைத் திறந்த டிராலியில் உட்காரவைத்துச் சாமான்களைக் கட்டுவதுபோல் அவர்களையும் கட்டி, பீம்பெடியிலிருந்து அனுப்பினார்களாம். பீம்பெடிக்கும் காத்மாண்டுவுக்கும் இடையே ஐந்து ஸ்டேஷன்கள் இருக்கின்றன. இவைகளில் சாமான்கள் நடு நடுவே விழுந்துவிட்டனவா என்று சோதிக்கிறார்கள். பீம்பெடிக்கு அடுத்த ஸ்டேஷனைத் திருடர்கள் அடைந்தபொழுது ஸ்டேஷன் அதிகாரிகள் துப்பாக்கி சகிதம் தயாராகக் காத்து இருந்தார்களாம். ஆனால் துப்பாக்கிக்கும் தோட்டாவுக்கும் தேவையே இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால் ஒரு மலை உச்சியிலிருந்து மற்றொரு மலை உச்சிக்கு அத பாதாள பள்ளத்தாக்கைக் கடந்துசெல்லும் டிராலியில் மனித ஹிருதயம்—பக்காத் திருடர்கள் ஹிருதயமானாலுசரி—எப்படி ஓடும்? ஆகவே அடுத்த ஸ்டேஷனை அடைந்தபொழுது திருடர்கள் செத்துப் பிணமாய்த் தொங்கிக்கொண்டிருந்தார்களாம். இந்த வரலாறு இரு முட்டாள்தனங்களைக் காண்பித்தது. முதல் மௌடீகம் திறந்த பெட்டியில் இந்தத் திருடர்கள் பலியாகாவிட்டால் உலகவியவகாரம் சம்பந்தப்பட்ட வரையில் ஞானசூன்யர்களான ராணுக்களில் ஒருவர் பலி ஆகி

இருப்பார். ஏனென்றால் காத்மாண்டுவில் உயர்ந்த கோபுரத்தின்மேலிருந்து முறங்களை கட்டிக்கொண்டு பறக்க முயற்சித்த பீம்ஸென் என்பவரின் பரம்பரைதானே ராணாக்கள், இரண்டாவது, அப்பொழுதைய ராணாக்கள் எப்பேர்பட்ட கிராதகர்கள் என்பதைத் திருடர்கள் திருமால் அடி சேர்ந்த கதை எடுத்துக் காண்பிக்கிறது.

பேச்சுத் துணைக்கு நண்பர் நாராயணன் இல்லாவிட்டால் வழி நடப்பது மிகவும் கஷ்டமாயிருந்திருக்கும். என்னதான் இயற்கை வனப்பும், அடர்ந்த மரங்களும், அலறியோடும் காட்டாறுகளும் வழி நெடுக இருந்தாலும் மத்தியானம் ஆன பிறகு ஏதாவது ஓர் இடம்போய்ச் சேரமாட்டோமா என்ற அலுப்புத்தட்டி விடுகிறது.

சாயந்திர வேளை சிட்லாங் என்ற கிராமத்தைச் சேர்ந்தோம். இது ஒரு அழகிய மலை ஓடைக்கு அருகே அமைந்து இருக்கிறது. ஜலம் பளிங்கு போன்று சல சலவென்று அரித்து ஓடுகின்றது. ஓடையில் மீன்கள் மிகவும் கொஞ்சம் என்றாலும் மீன் பிடிப்பவர்கள் மணிக்கணக்கில் மிகவும் பொறுமையாகக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். சிட்லாங்கிலும் டீத்தண்ணீர் கிடைத்தது. பசி ஒரு பக்கம் கிள்ளிக்கொண்டு இருக்கையில் நாராயணன் "அடாடா! இப்பொழுது ரவாதோசை முறுகலோ அல்லது தஞ்சாவூர் பரமேச்வரன் ஹோட்டலில் கிடைக்குமே அந்த ஊத்தப்பமோ கிடைத்தால்?" என்று மனக்கோட்டை கட்ட ஆரம்பித்தார். அகப்பட்டதைச் சுருட்டுடா ஆண்டியப்பா என்று அங்கே கிடைத்த ரொட்டியையும் டீயையும் குடித்துவிட்டு மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினோம்.

சாயங்கால வேளை மரங்களின் நிழல்கள் நீளமாகவிழுந்து சூரியன் மடைவாயில் விழ இன்னும் அதிக நேரம் இல்லை என்று தெரியப்படுத்திய சமயம் சந்திரகிரிமலை அடிவாரத்தை அடைந்தோம். மறுபடியும் சுமார் 9000 அடி வரை ஏற வேண்டியிருந்தது. அடிமேல் அடிவைத்து, சந்திரகிரி உச்சியை அடைந்தோம். இங்கு மிகவும் பொருத்தமாகப் பலசாலியும் தீரனுமான பீமஸேனனுக்கு ஒரு சிலை செய்துவைத்து இருந்தார்கள். டோலி தூக்கிகள் டோலியைக் கீழே வைத்துவிட்டு, பலத்திற்கும் அஞ்சா நெஞ்சத்திற்கும் பெயர் எடுத்த பீமனைக் கும்பிட்டார்கள். இங்கும் ஒரு மொந்தை (டீதான்) போட்டுக்கொண்டோம். பிறகு இறங்க ஆரம்பித்தோம்.

மணி ஐந்துக்குமேல் ஆகிவிட்டது. சிறிது தூரம் சென்றதும் மரங்களுக்கு இடையே ஒரு நெஞ்சை அள்ளும் காட்சி காத்துக்கொண்டு இருந்தது. மேற்கே தொடங்கி கிழக்குவரை தூரத்தில் தூய வெள்ளைப் பனி போர்த்திய மலைத்தொடர் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது, மங்கும் வெய்யலில் ஆகா! என்ன அற்புதக்காட்சி! உலகத்தில் உள்ள வெள்ளியை எல்லாம் திரட்டி ஒரு ராக்ஷஸன் அக்னியில் போட்டு உருக்கி ஓடவிட்டால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன். பனி மலைகளுக்குப் பொன்முடி வைத்தாற்போல் பல சிகரங்கள் ஜகஜ்ஜோதியாகக் காட்சி அளித்தன. வரிசைக் கிரமமாக நந்ததேவி, கைலாச மலை, கௌரிசங்கர், மச்சபுச்சர் (மீன் வால் என்பது பொருள்) சோஸைந்தான் முதலிய சிகரங்களைப் பார்க்கக் கொடுத்துவைத்திருந்தன என் கண்கள்.

பல நிமிஷங்கள் சிகரங்களைக் கண்டு ஆனந்தித்த பிறகு மற்றொரு அழகிய காட்சியைக் கண்டேன். சந்திரகிரி மலையிலிருந்து காத்மாண்டு பள்ளத்தாக்குப் புலப்படுகிறது. கும்பல் கும்பலாக அழகிய வெள்ளைக் கட்டிடங்களும், வார்க்கப்பட்ட தங்கம்போல் மின்னும் கோவில் கலசங்களும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. "நாம்தான் அதிலேயே இருக்கப் போகிறோமே, என்னய்யா பார்வை வைத்தக் கண் வாங்காமல்" என்று ஸ்ரீ நாராயணன் துரிதப்படுத்தவே மலையிலிருந்து இறங்கலானோம். இங்கும் இறக்கம் மிகவும் பயங்கரமாகத்தான் இருக்கிறது. தவிர, குளிர் சுமார் ஆறு மணி ஆகும் முன்னரே காலிலிருந்து தலைவரை ஏற ஆரம்பித்தது. ஓட்டமும் நடையுமாக இறங்கி, சுமார் ஏழு மணி அடிக்கும் சமயம் தான் கோட்டை (Thankot) அடைந்தோம். இங்கிருந்து கிட்டத்தட்ட சமவெளி காத்மாண்டுவரை சுமாரான மோட்டார் ரோடு ஒன்று இருக்கிறது, எங்களுக்காக ஒரு ஸ்டேஷன் வாகன் தயாராய் இருந்தது. டோலி தூக்கிகளுக்கும் கூலிகளுக்கும் ஆளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு, வண்டியில் ஏறிக்கொண்டோம். மங்கிய நிலா சுற்று வட்டாரத்தில் உள்ள காட்சியைக் காண்பித்துக் கொண்டிருந்தது. இருபக்கங்களிலும் உருளைக்கிழங்குத் தோட்டங்களும் மற்றச் சீமைக் கறிகாய்ப் பாத்திகளும் தெரிந்தன. காத்மாண்டு நகரின் வழியே வண்டி சென்று கொண்டிருந்தது. ராஜபாட்டையின் கீழ்ப்புறம் எல்லாம் கம்பீரமான மாளிகைகள் நிலா வெளிச்சத்தில் தீர்க்கமாகத் தெரிந்தன. மேற்புறம் சிறிய வீடுகளும் ஏராளமான ஏழ்மையான கூரை குச்சுகளும் புலப்பட்டன. அரைமைல் தூரத்திற்குள் காத்மாண்டு எப்பேர்ப்பட்ட வித்தியாசம் மண்டிய நகரம் என்பது எனக்கு மிகவும் உறுதியாகத் தெரிந்தது. ஒருபுறம் ராணாக்களின் கொழிப்பு; ஒருபக்கம் பாட்டாளிகளின் எளிய வாழ்க்கையின் சின்னங்கள்; ஒருபக்கம் டாம்பீகம்; மற்றொரு பக்கம் ஏழ்மை.

நகரத்திற்கு வெளியே ஸீதல்நிவாஸ் என்ற இந்திய ஸ்தானிகர் காரியாலயம் இருக்கிறது. ஸ்தானிகர் ஸ்ரீ நாராயணனுக்கு இந்திய ஸ்தானீக எல்லைக்குள் இடம் கொடுத்தார். என்னைக் காத்மாண்டுவின் ஒரே ஹோட்டலில் தங்கச் சொன்னார். நான் போன சமயம் ராணா சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் இடையே கொஞ்சம் மனஸ்தாபம் இருந்ததால் பத்திரிகைப் பிரதிநிதியான நாள் இந்திய ஸ்தானீகருடன் தங்குவது உசிதம் இல்லை என்று கருதப்பட்டது. சுமார் எட்டுமணி இருக்கும் நான் காத்மாண்டுவின் ஒரே ஹோட்டலுக்குள் சென்று ஒரு அறையில் உட்கார்ந்தபொழுது. ஹோட்டலைப் பற்றியும் நேபாளத் தலைநகரைப்பற்றியும் அடுத்த கட்டுரையில் எழுதுகிறேன். (தொடரும்)

பாய்மரம் முறிந்து, திக்குத் தெரியாமல் கடல் அலைமீது மிதந்து சென்று கொண்டிருந்தது. அம்மரக்கலம், விதியின் வழியே செல்லும் மனிதனைப்போல! கன்னங் கரிய கார்மேகங்கள் கவிந்த வான விதானத்திலிருந்து பளீர் பளீரென மெய் சிலிர்க்கும் மின் வெட்டுக்களும், அதைத் தொடர்ந்து முழங்கிய பேரிடி முழக்கங்களும் மரக்கலத்தில் இருந்தவர்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கின.

இருந்தும் அம் மரக்கலத்தில் இருந்த சிலர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தனர், பகற் பொழுதெல்லாம் துடுப்பிட்ட அலுப்பில் உடல் சோர்வுற்று மிகவும் களைப்படைந்திருந்ததனாலே.

அன்று, பெருங்குடி வணிகன், தேவதத்தனும் மாணிக்கக் கணையாழியிட்ட தன் கையினாலே துடுப்புப் பிடித்துத் தள்ளினான்! மலை போன்ற பேரலைகளுக்கிடையே கலனைய வேர்வையையும் லட்சியம் செய்யாது கலத்தைச் செலுத்திச் சென்ற மறவர்களின் உழைப்பு அவனை ஊக்கியது. கப்பலில் இருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலை செய்துகொண்டிருந்தனர். கலம் எங்கே போகிறது என்ற குறிக்கோள் இல்லாமல் ஏதேனும் ஒரு கரை கிடைத்தால் போதும் என்ற உத்தேசத்துடன் மறவர்கள் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொழுது பெருங்குடி வணிகன் தேவதத்தனும் தன் கடமையைச் செய்தான். அவன், செம்பொற்கரங்கள் கொப்புளித்து விட்டன! உடல் பெரும் அதிர்ச்சியுற்றிருந்தது. அவன் உறங்கவில்லை.

* * *

அவன் மட்டுமா உறங்க வில்லை? காவிரிப் பூம்பட்டினத்துக் கலங்கரை விளக்கம் அவன் வரவை எதிர் நோக்கி உறங்காமல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

கலங்கரை விளக்கத்துத் திரியை அப்போதைக்கப்போது தூண்டிவிட்டுக் கொண்டு வழிமேல் விழிவைத்து எத்தனை இரவுகளாகக் காத்திருக்கிறுர் விஜயேந்திர ஆச்சார்யன்! அதோடல்ல, தஞ்சை நகர வாசிகளே அவன் வரவை எதிர்நோக்கி ஆவலாக இருந்தனர். இன்னும் சொன்னல், சோழமன்னர் ராஜ ராஜர்கூடத் தேவதத்தனை எதிர்பார்த்திருந்தார்!

தூர தூர யவன தேசங்களிலிருந்து கடல் படு பொருள்களும், மணியும், முத்தும் பவளமும் வாசனைத் திரவியங்களும் கொண்டு வருவான் என்பதற்காக அல்ல; இவை யாவும் தஞ்சை வணிக வீதியிலே மண்டிக் கிடந்தன.

‘தேவதத்தன் புதுமையான பண்டம் ஒன்றுமே கொண்டு வரவேண்டாம்; அவன் மட்டும் வந்து சேர்ந்தால் போதும்!’ என்றுதான் எல்லோரும் விரும்பினர். நகர மக்களில் சிலர் தஞ்சைப் பிரகதிசுவரரைக்கூட வேண்டிக்கொண்டனர்.

* * *

ஏனெனில், தமிழ் கண்ட பாண்டியன் கொண்டாடிய இந்திர விழாவைப்போல், மண்கண்ட ராஜ ராஜர் வைகாசி—வைசாகத்திலே ஒரு பெரும் விழாக் கொண்டாடினுர். சிங்களம், கடாரம், சாவகம், மிசிரம், யவனம் முதலான தூரதூர நாடுகளில் வாளுழவு செய்து புகழ்ப் பயிரை விளைவித்து மீண்ட தன் திக் விஜயத்தின் ஞாபகார்த்தமாக அவ் விழாவைக் கொண்டாடினுர்.

அவ் விழா முடிந்து, இரவிலே ராஜராஜேசுவர நாடகம் நடைபெறும். சோழ மன்னர் மேற்பார்வையில் நடைபெறும் அப்பெரும் கூத்திற்குச் சோழநாட்டின் பற்பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான, ஏன் லக்ஷக் கணக்கான ஜனங்கள் திரண்டு வருவார்கள். கடாரம், சீனம் முதலிய தூரதூர தேசங்களில் இருந்துங்கூட மக்கள் வருவதுண்டு! விழா கண்கொள்ளாக் காட்சியாகவும் நாடகம் அவ்வளவு உயர்தரமாகவும் இருந்தன. அத்துடன் அரசர் தலைமையில் தஞ்சையில் கோவில் கொண்டுள்ள பிரகதிசுவரர் முன்னிலையில் நடப்பதல்லவா?

தஞ்சைக் கோவிலுக்காக விடப்பட்ட எண்ணிறந்த மான்யங்களுக்குள் மிகமிக முக்கியமானது விஜயேந்திர ஆச்சார்யன்கீழ் விடப்பட்டிருந்ததுதான். நாடக வர்க்கத்தாருக்கெனத் தனி இல்லங்கள் கட்டிக்கொடுக்கப் பட்டிருந்தன. தினம் பிரகதீசுவரர் ஆலயத்திற்குச் செல்லும் ஒவ்வொருவரும், விஜயேந்திர ஆச்சார்யனின்கீழ் நாடகம் ஒத்திகை நடக்கும் பொழுது உண்டாகும் கலகல வென்ற சதங்கைச் சப்தத்தையும் பாடல்களையும் நின்று கேட்டுவிட்டு, வைசாகத் திருவிழா என்று வரும் என்ற நினைவுடன் செல்வார்கள். அந்த நாடகம் இந்த வருஷம் நடக்காதுபோல் காணப்பட்டது! தஞ்சை நகரிலும், சோழநாடு முழுவதும், வாய்ச்சொல்லாகவே பரவிய இவ் வதந்தி அனைவர் மனதிலும் ஒரு சோர்வை உண்டாக்கிற்று. எங்கும் இதே பேச்சாக இருந்தது.

பெருங்குடி வணிகன் தேவதத்தன் நாடகத்தில் தலைவனுக நடிப்பான். ஆஜானுபாகுவாய், உயர்குடிப் பிறந்த தேஜசுடன் கம்பீர நடையும், வசீகரத் தோற்றமும், மனங் கவரும் பேச்சும் இனிய குரலும் உடையவன். இத்துடன் பரம்பரையாக வந்த பெருமிதத்துடன் அவன் தோற்றமும் ராஜ ராஜருடைய சாயலை ஒத்திருந்தது. நாடகத்தின் பெயருக்கும் புகழுக்கும் பெரும் காரணமான தலைவி வேடந்தாங்கி நடிக்கும் கணிகை கண்ணகி அவன் ஆசை மனைவிதான்! அவர்கள் நடிப்பு இயற்கையாகவே அமைந்துவிட்டது. அவர்கள் இருவரும் தம்மை மறந்து கலைக் கோயிலின் பலிபீடத்தின் முன்னே ஆனந்த பரவசராகி நடிக்கும்போது எள் விழ இடமின்றி வீற்றிருக்கும் அக் கூத்தாட்டு அவைக் குழாத்திலே எங்கே பெருமூச்சு விட்டால் அமைதி குலைந்துவிடுமோ வென்று ஒவ்வொருவரும் இழைய மூச்சு விட்டுக்கொண்டு திறந்த வாய் திறந்தபடி பார்த்துக்கொண்டிருப்பார்கள்!

நேற்று அமாவாசை சென்றுவிட்டது. வரும் பௌர்ணமிக்குள் தேவதத்தன் வந்து சேராவிட்டால் இவ் வருஷம் நடக்கும் வைசாக விழா சோபிக்காது, தஞ்சை நகரின் மாடமாளிகைகளிலும் நகர் எங்கணும் மகர தோரணங்களாலும் முத்து விதானங்களாலும் கோலாகலமாய் அலங்கரிக்கப்பட்ட அலங்காரங்களும், அரசர் பவனியும் பிரகதிசுவரருக்கு நடக்கும் சோடச பூஜைகளும் கானில் எரித்த நிலவொளியெனப் பெரும் பயனின்றிப் போகலாம்!

* * *

நாடக ஆசான் விஜயேந்திர ஆச்சார்யனின் மனதிலே ஆசைக்கும் நிராசைக்கும் பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. "பிரகதீசுவரா! சோதனை செய்யாதே! அரசனது உப்பை வருஷ முழுவதும் வயிருர உண்ட கடமையை ஒருநாளில் நான் செலுத்தியாகவேண்டும். தேவதத்தன் வந்துசேராவிட்டால் நாடகம் எப்படி நடக்கும்? விழா எப்படி நிறைவுறும்?" என்று புலம்பியவாறு நாட்களை எண்ணிக் கொண்டு வந்தான்.

2

நாலறுந்த காற்றாடியைப்போல் கூம்பொடிந்த அம் மரக்கலம் காற்றுத் தள்ளிய திசையில் போய்க்கொண்டிருந்தது. கடலிலே பேரலைகள் எழுந்து விழுந்துகொண்டிருந்தன. இளமகளிர் கைப்பட்ட அம்

மானையைப்போல் உயர்ந்து தாழ்ந்து ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்தது, கப்பல். வானத்திலே, வட வனலில் ஓரிரு நாவைப்போல், பெரு மின்னல்கள் எழுந்து மறைந்துகொண்டிருந்தன. அஷ்ட திக் கஜங்களும் ஏக காலத்தில் பிளிறுவதைப்போல் பேரிடி முழக்கங்கள் ரோமாஞ்சத்தை உண்டாக்கின. இவ்வித இயற்கையின் கோர தாண்டவம் தேவதத்தனின் உள்ளத்திலே ஒரு கிளர்ச்சியையோ அச்சத்தையோ உண்டாக்கவில்லை.

அவன் வகுத்த நியதியின்படி நடக்கப்போகிற காரியத்தில் தனக்கென்ன கவலை என்று இருந்துவிட்டானே! அல்லது, கண்ணகியை நினைத்துக் கொண்டுதான் இவ்வுலகை மறந்திருந்தானா? நீண்ட நேரம் தேவதத்தன் அந்நிலையில் இல்லை. உடல் உழைப்பினால் ஏற்பட்ட களைப்பு கண்களைச் செருகவே தன்னையு மறியாது அப்படியே உறங்கிவிட்டான்.

* * *

கடலின் மடியிலே, அலைகள் தாளியாட்ட, பேரிடிகள் தாலாட்ட, தேவதத்தன் சற்றுக் கண்ணயர முடிந்தது; ஆனால் தஞ்சை வணிக வீதியிலே உயர்ந்த உப்பரிகையில் சப்ரகூட மஞ்சத்தில் உறக்கமின்றிப் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் கண்ணகி. அச் செம்பஞ்சு மெல்லணைகள் அவளுக்கு முட்களெனத் தைத்தன. சற்றுமுன் கண்ட பயங்கரக் கனவு அவள் உள்ளத்தில் பேரலைகளை எழுப்பிக் குழப்பிக் கொண்டிருந்தது. அப்பயங்கரக் கனவைக்கண்டு புரண்டு மஞ்சத்தினின்றும் கீழே விழுந்ததால் உண்டான உடல் வலிவேறு அவளை வருத்திற்று. ஆ!.........அக் கனவு!—பெரும் வணிகப் பண்டங்களுடன், கண்ணகிக்காக நல் முத்தும் ஆணிப் பவழமும் விட்டுவிட்டுத் தொடுத்த மணிமாலையும் கொண்டு தேவதத்தன் காவிரிப்பூம்பட்டினத்தை நோக்கி, பெரும் மரக்கலத்தில் வந்து கொண்டிருக்கிறான். ஆனால் வழியிலே ஹூண—மிலேச்ச கடற் கொள்ளைக்காரர்கள் கப்பலைச் சூழ்ந்துகொள்கின்றனர்; வர்த்தகப் பொருள்களைச் சூறையாடுகின்றனர். தந்தப் பேழையிலே மறைத்து வைத்திருந்த அம் மணிமாலையைத் தேவதத்தனிடமிருந்து பறித்துத் தங்கள் தலைவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்கின்றனர். பிறகு தேவதத்தனைப் பிடித்துத் தங்கள் கப்பல் ஒன்றின் பாய் மரத்தில் கட்டிக்கொண்டு போய்விடுகின்றனர்! ஐயோ என்ன பயங்கரக் கனவு! நெருப்பில் விழுந்த புழுப்போல, கண்ணகி மஞ்சத்தின்மீது துடித்துக்கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்ததும் தன் மாமியிடம் கனவைச் சொல்லிக் கண்ணீர்விட்டாள் கண்ணகி. "பேதைப் பெண்ணே, இதற்கா இப்படி அழுவார்கள்? உன்னைப் போன்ற இளம் பெண்கள் கணவன்மீது நினைவாகவே உறங்கச் செல்வதால் இப்படிக் கனவுகள் உண்டாவது சகஜம். உன் மாமா, தேவனின் அப்பா, கப்பலேறிப் போய் விட்டால் நானும் இப்படிப்பட்ட கனவுகளைக் காண்பதுண்டு. பிறகு எல்லாம் சரியாய்விடும். பயப்படாதே, அம்மா! தேவதத்தனுக்கு ஒரு தீங்கும் வராது. மாலையில் பிரகதீசுவரர் ஆலயத்துக்குப்போய் வலம்வந்து பிரார்த்தித்துக்கொள்!" என்று ஆறுதல் சொன்னாள், வயது முதிர்ந்த அவள் என்ன கூறியும் கண்ணகி மனது சாந்தப்படவில்லை. அன்று முழுதும் பிரமைபிடித்தவள் போல் படுக்கையிலே கிடந்து அழுதுகொண்டிருந்தாள்.

மாலையில் பிரகதீசுவரர் ஆலயத்திற்குச் செல்லும்போதும், விஜயேந்திர ஆச்சார்யன் எதிர்ப்பட்டுத் தம் இல்லத்திற்குக் கண்ணகியை அழைத்தார். தந்தையினும் பரிவு கனியும் அவர் அன்புள்ள பேச்சு எப்போதும் கண்ணகிக்கு மன அமைதியை உண்டாக்கும். அவரிடமும் தன் கனவைப்பற்றிச் சொல்லிக் கண்ணீர் வடித்தாள். ஆனால் அன்று விஜயேந்திர ஆச்சார்யன் சொன்னது என்னவோ அவள் செவியுள் ஏறவில்லை. "கண்ணகி! தேவதத்தர் வியாபாரத்தின் கண்ணோட்டத்திலேயே தூர தூர தேசங்களுக்குப் போய்விட்டார்போலத் தோன்றுகிறது. வைசாக விழாவுக்குள் அவர் திரும்பி வருவார் என்ற நிலையில்லை. ராஜராஜேசுவர நாடகம் நடைபெற வேண்டுமல்லவா? அதற்காகப் பூபதி ராஜராஜரின் சகோதரி குந்தவைப் பிராட்டியே தலைவனை நடிக்க இசைந்துள்ளார். அதுவும் உன்னை உத்தேசித்துத்தான். தேவதத்தர் இல்லாமல் நீ வேறு யாருடனும் நடிக்கமாட்டாய் என்றுதான்! வைசாக விழாவில் நாடகம் இல்லாமல் விக்கினம் ஏற்படக்கூடாது என்பது அரசர் விருப்பம். குந்தவைப் பிராட்டிக்கு அநேகமாக எல்லாப் பாகங்களையும் பயிற்றுவித்துவிட்டேன்.

"நீ இனி நடக்கப்போகும் இறுதி ஒத்திகைகளுக்கு வரவேண்டும். மனத்தை வீணான பீதிகளுக்கு ஆளாக்கி வேதனைப்படாமல் உற்சாகத்துடன் நடிக்கவேண்டும். தேவதத்தர் இல்லாததால் உன் பொறுப்பு இரு மடங்காகிறது. குந்தவைப் பிராட்டியின் நடிப்பில் உள்ள குற்றம்குறைகளையும் மறைக்கும்படி நீ அற்புதமாக நடிக்க வேண்டும். பிரகதீசுவரர் இருக்கிறார். உனக்கு ஒரு குறையும் வராது. தேவதத்தர் ஒரு குறையுமின்றித் திரும்பி வருவார்!" என்று கூறினர். அவள் உள்ளம் எங்கோ அலைந்துகொண்டிருந்தது.

"ஆகட்டும் ஆச்சாரியரே! விழாவிற்குள் என் கணவர் திரும்பி வந்துவிடவேண்டுமென்று பிரகதீசுவரரைப் பிரார்த்தியுங்கள்! முதல் ஜாமப் பூசையின் மணியொலி கேட்கிறது. நான் கோவிலுக்குச் சென்றுவருகிறேன்!" என்று கூறித் தன் பல்லக்கில் சென்றுவிட்டாள்.

3

வைசாக விழாவைக் காணவந்த ஜனங்களுடன் வந்துகொண்டிருந்தான தேவதத்தன். அவன் வந்த மரக்கலம் இலங்கைத் தீவிலிருந்து வந்துகொண்டிருந்தது. பிரயாணிகள் எல்லோரும் குதூகல கேளிக்கைகளில் ஆழ்ந்திருந்தனர். ஆனால் தேவதத்தன் மட்டும் சிந்தித்தவாறு ஓர் மூலையில் உட்கார்ந்திருந்தான்.

பாவம்! அவன் சிந்தித்தற்குரிய எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. யவனம், மிசிரம், சாவகம் முதலிய நாடுகளினின்று வணிகப்பொருள்களை ஏற்றிவந்த அவன் மரக்கலம் புயலால் பெரும் பாறையில் மோதுண்டு உடைபட்டுக் கவிழ்ந்துவிட்டது. அடடா! எத்தனைப் பண்டங்கள்! எத்தனை வகை! என்னென்ன நிறங்கொண்ட சீனப்பட்டுகள்! எத்தனை வண்ணப்பவளசரங்கள்! கப்பல்கொண்ட செம்பொன் பாளங்கள்! விண்மீன்களைப் பழிக்கும் மணிகள்! அவை யாவும் கடலுள் மூழ்கிவிட்டன.

கப்பலைப் பறிகொடுத்துவிட்டு உடைந்த உள்ளத்துடன் ஒரு கப்பற் பலகையைப் பிடித்து நீந்தி வந்துகொண்டிருந்தபொழுது, வைசாக விழாவையும், தமிழ்நாட்டுத் திருக்கோயில்களையும் கண்டு தரிசித்துச் செல்லவந்த இலங்கைத் தமிழரின் மரக்கலம் தேவதத்தனை உயிரளித்துக் காப்பாற்றியது.

அவன் மரக்கலத்தின் உள்ளே தூக்கிவிடப்பட்டதும், பலர் பலவிதமாக அவனைச் சித்திரவதை செய்தனர். தேவதத்தன் ஏதேதோ சொன்னான். தன் உண்மைப் பெயரையோ வந்த காரியத்தையோ நிகழ்ந்த பேராபத்தையோ சொல்லவில்லை. அவன் கூறினவைகளில் அரைகுறை நம்பிக்கையே கொண்ட அப்பிரயாணிகள் அவன் மீது மறுபடியும் கவனம் செலுத்தவில்லை. தஞ்சைக்கோவிலைப் பற்றியும் ராஜராஜேசுவர நாடகத்தைப்பற்றியும் அதில் தலைவனை நடிக்கும் பெருங்குடி வணிகன் தேவதத்தனைப் பற்றியும் புகழ்ந்து பேசிக்கொண்டு வந்தனர்.

இவைகளை அரைகுறையாகச் செவியுற்ற தேவதத்தனுக்கு வைசாக விழாவின் ஞாபகம் வந்தது. நாட்களை எண்ணினான். 'ஆம்! நாளை மறுநாள் விழா! இம்மரக்கலம் நாளை காவிரிப்பூம்பட்டினத்தை அடையும். மறுநாள் தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். அப்படித்தான் அக்கப்பலில் இருந்த பிரயாணிகளும் திட்டமிட்டிருந்தனர்.

'நாடகத்தலைவன் இல்லாமல் நாடகம் எப்படி நடக்கப்போகிறது? கண்ணகி வேறொரு நடிகனுடன் நடிக்க இசைந்திருப்பாளா? பார்ப்போம்! உலகப்போக்கு எப்படி இருக்கிறது என அறிய

இதுதான் சமயம்! இவர்களுடன் நானும் நாடகம் பார்க்கச் செல்லும் அன்னியனைப்போலச் செல்கிறேன். என் மாளிகைப்பக்கம்செல்லக்கூடாது. என் உடை அலங்கோலமாய் இருக்கிறது. சோக சிந்தனைகளில் என் முகம் வெளுத்திருக்கிறது. அவ்விரவிலே, ஜனக்கூட்டத்திலே, என்னை யார் அடையாளம் கண்டு கொள்ளப்போகிறார்கள்? இருந்தாலும் முடிந்தால் காவிரிப்பூம்பட்டினத்தில் சிங்களவனைப்போல் உடையணிந்து கொண்டு, இந்த ஜனங்களுடன் போய்ப் பார்க்கிறேன்!" என்றெல்லாம் எண்ணினான் அவன்.

4

தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலின் நாடக அரங்கிலே ராஜராஜேசுவர நாடகம் நடந்து கொண்டிருந்தது. தலைவி அற்புதமாக நடித்துக் கொண்டிருந்தாள். காதல் கட்டங்களும் தலைவன் தலைவி வாதங்களும், கடைசியில் தலைவனுக்கு மாலைசூட்டி வீர கங்கணம் கட்டி, அடி பணிந்து போருக்கனுப்பும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தன. லக்ஷக்கணக்கான ஜனங்கள் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் கூட்டத்தில் எங்கோ ஒருமூலையில் இருந்த தேவதத்தனின் இதயத்திலே பெருந்தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அவன் கோபத்தால் துடித்துக்கொண்டிருந்தான்.

அப்போது அடுத்த காட்சி அவன் கண்முன் விரிந்தது. தலைவியை அணைத்து அவள் செவ்வதரங்களில் முத்தமீந்து போருக்கு விடைபெற்றுக்கொள்கிறான் தலைவன்! தேவதத்தனின் கண் முன்னே உலகம் சுழன்றது. கால்களின்கீழ் பற்றின்றி அவன் எங்கோ மிதப்பதாகத்தோன்றியது.

சினத்தின் எல்லையைக் கடந்த அவன் மனம் பளிங்கின் கடினத்தை அடைந்தது. நேரே தன் மாளிகையை நோக்கி நடந்தான்.

* * *

மாளிகைக்குச் சென்ற தேவதத்தன், நேரே உப்பரிகைக்குச் சென்று, தன் சயன அறையை அடைந்தான். மஞ்சத்தின் கீழே சூசகமாய் மறைத்துப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த வாளை எடுத்து உருவினான். சாளரங்களினூடே பிரகாசித்த நிலவொளியில் அது பளபளவென ஒளி வீசிற்று. சயன அறைச் சுவரிலே விசித்திர வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறந்தான். ரத்தினங்களுக்கும் மணிகளுக்கும் நடுவே இருந்த நஞ்சுக் குமிழியை எடுத்து, நஞ்சை வாளின் கூரிய முனையிலே தடவ ஆரம்பித்தான்.

* * *

அப்போது நாடகம் முடிவுற்றதற்கு அடையாளமாக ஜனங்களின் ஆரவாரப் பேரொலிகளும் ஆர்ப்பரிப்பும் தேவதத்தனின் செவியில் விழுந்தன.

"நாடகம் முடிந்துவிட்டது. ஆனால் கண்ணகி! நாடகத்தின் முடிவுறாத பாகத்தை நான் முடிக்கப் போகிறேன். இது உன்னுடைய, ஏன் என்னுடைய; இல்லை, இல்லை; சோழநாட்டின் கடைசி நாடகம்! பெருங்குடி வணிகன் தேவதத்தன் தன் குலத்திற்கே மாசு விளைவித்த நாடகக்காரியைச் சும்மாவிடமாட்டான்! சாகசக்காரி! கள்ளி! தேவதத்தன் சுவைத்துக் கள் வெறிகொண்ட அவ்வதரங்களை அந்நியன் சுவைக்கவும் இடம் கொடுத்தாயா? நல்லது, நங்கையே! தேவதத்தனின் குலத்தை, செல்வத்தைக் காக்கச் சமைத்த இவ் விசித்திரவாள் அவன் குலத்தை அழிக்கப்போகிறது! ஆம்! குலம் அழிந்து மானம் நிலைக்கப் போகிறது!"—வேலுண்ட சிங்கம்போல் குமுறிக் கொண்டு உப்பரிகையின் சயன அறையிலே இங்கு மங்கும் நடந்துகொண்டிருந்தான் தேவதத்தன்.

* * *

பணியாட்கள் மூலம் தேவதத்தன் வந்துள்ள செய்தி தெரிந்த கண்ணகி விரைந்தோடி வந்தாள். பல்லக்குச் சுமப்பவரை வேகமாகச் செல்ல ஏவினாள். என்றுமே அப்படிச் சொல்லாத எஜமானியம்மாள் அன்று அப்படிச் சொன்னதையும் அவள் உள்ளத்தில் இருந்த பரபரப்பையும் ஊகித்துக்கொண்டே போகிகள்

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி" கும்பகோணம்

குடல்தெறிக்க ஓடி, விரைவில் மாளி கையை அடைந்தனர்.

மாளிகையை அடைந்த கண்ணகி விரை வில் உப்பரிகை அடைந்து தேவதத்தனின் பாதத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். பிறகு, பிரகதீசுவரர் ஆல யத்தின் கோபுரத்தை நோக்கி நமஸ்கரித் தாள்.

— ஆகா! என்ன சாகசம்! என்ன நடிப்பு! வாழ்க்கையையே நாடகமாக்கப் பார்க்கிருளே இவள்!' — என்று எண்ணிக் குமுறினன், தேவதத்தன். அவன் பாதத் தில் முகத்தைப்புதைத்து ஆனந்தக்கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த கண்ணகியைச் சிகை யைப் பிடித்துத்தூக்கி, "கண்ணகி! நாட கத்தைப்பார்த்தேன்!......அவன் உன் இதழ் களில் முத்தமிட்டதையும் பார்த்தேன்! ....கண்ணகி!........." என்று வாளை ஓங்கினன் தேவதத்தன்.

"ஐய்யய்யோ! இளவரசி குந்தவைப் பிராட்டியல்லவா தங்கள் பாத்திரத்தை நடித்தாள்!......நீங்கள். ...." வார்த்தை களை முடிக்காமலே மூர்ச்சித்து விழுந்தாள், கண்ணகி.

*   *   *

"என்ன! இளவரசி குந்தவைப் பிராட்டியா தலைவனுக நடித்தாள்?" ஓங்கிய வாளை உறையுளிட்டான் தேவ தத்தன். கண்ணகியின் முகத் தில் பன்னீரைத் தெளித்து, அகிற் புகையை மூக்கருகே மோக்கவிட்டு மூர்ச்சை தெளி வித்துக்கொண்டிருந்தான்! அவள் மூர்ச்சை தெளிந்து கொண்டிருந்தது; தேவதத்த னின் மனத்திலே அடித்த புய லும் ஓய்ந்து கொண்டிருந் தது.

"லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பது தான் எனது அழகு பராமரிப்பு"

என்று சொல்கிறார் ஏ. ஆர். சகுந்தலா

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 294-X30 TM

HVM. 143-172 TM

எனது மலாய்நாட்டுப் பிரயாணம்

ரங்க ராமானுஜ அய்யங்கார்



கற்பக அமுது!

ரப்பர்

உருளைக்கிழங்கு, மிளகாய், புகையிலை, இவைகளைப் போலவே, ரப்பரும் புதிய உலகமெனப்படும் அமெரிக்காவிலிருந்துதான் வெளிப்பட்டது. சரித்திரப் புகழ்பெற்ற கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டு, ஸ்பெயினுக்குத் திரும்பியபொழுது, இஸபெல்லா ராணியாருக்குத் தாம் புதிய நாட்டிலிருந்து கொண்டுவந்த ரப்பர்ப் பந்துகளை வெகுமதியாகக் கொடுத்தார்! ஆனால், அதன்பின் சில நூற்றாண்டுகள்வரை, ரப்பரின் மகிமையை உலகம் உணரவில்லை. சென்ற நூற்றைம்பது வருஷங்களிலோ, ரப்பரின் உற்பத்தியும் உபயோகமும் விரைவில் அதிகரித்துவிட்டன. தற்காலம் நாகரிக வாழ்விற்கு ரப்பர் இன்றியமையாதது என்பது வெளிப்படை. பயிர்த்தொழில், கட்டிடங்கள், அச்சாலைகள் போன்ற நானாவிதமான ஆக்கவேலைகள், சுரங்கங்கள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், சாலைகள், ஆஸ்பத்திரிகள், தேகாப்பியாச விளையாட்டுகள்—இவ்விதம் எண்ணுதற்கரிய துறைகளில் ரப்பர் பயன்படுகிறது.

இப்படி உலகெங்கும் காணும் ரப்பரில் தொண்ணூறு சதவிகிதம் கிழக்கு ஆசிய நாடுகளில் உற்பத்தியாகிறது*. அதிலும் பெரும்பாகம் மலாயா நாட்டில் கிடைக்கிறது. ரப்பர் மரத்தைக் காமதேனுவென்றோ கற்பகவிருட்சம் என்றோ கருதுவது பொருந்தும். அது, கடல் மட்டத்திற்கு, சுமார் 1500 அடி வரை உயரமுள்ள இடங்களில் நாற்பது, ஐம்பது அடி உயரம் வளருகிறது. எழுபது முதல் நூறு அங்குலம் வரை வருஷவாரி மழையும், சிறிது வெப்பமும் ஈரமும் உள்ள கால நிலையும், அதற்கு வேண்டும். அதன் ஆயுள் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகும். விதைத்து, பதியன்வைத்து, களை எடுத்து, வளர்த்து, பட்டை கீறிப் பால்வடித்தெடுத்து, பாலை உறையவைத்து, தண்ணீரைப் பிரிப்பது முதல், பெரும் பெரும் தகடுகளடங்கிய "பேல்"களாக ஏற்றுமதிக்குத் தயாராகும் வரை இந்தப் பொருளின் சரிதை மிகவும் விந்தையானது. கோலாலம்பூரிலுள்ள ரப்பர் ஆராய்ச்சிக் கழகம் செய்யும் வேலை—நிலத்தின் செழிப்பைப் பரிசோதிப்பது, விதைகளின் ஸத்தை வளர்க்க வழி தேடுவது, "ஒட்டு" முறைகளின் மூலம் மரத்தின் வளத்தைப் பெருக்குவது, மரத்திற்கு நேரிடும் நோய்களையும் அவைகளின் சிகிச்சை முறைகளையும் ஆராய்வது, ரப்பர்ப் பாலின் ரகத்தைச் சோதித்து, அதைத் தோயவைத்து, இறுகும்படி செய்யும் ரஸாயன முறைகளைக் கற்பனை செய்வது, "latex foam" என்ற இறுகிப் பதமான ரப்பர்ப் பாளங்களைப் பலவிதமாகப் பயன்படுத்தும் நூதன முறைகளுக்கு அடிகோலுவது, துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், திரைப் படங்கள் இவைகளின் மூலம் தங்களுடைய ஆராய்ச்சியின் முடிவுகளை உலகறி

* 1949ஆம் வருஷம், உலகத்தின் ரப்பர் உற்பத்தி மொத்தம் 15 லட்சம் டன்கள்.

யப் பிரசாரம் செய்வது, தொழிலாளிகளின் நலத்திற்குப் பாடுபடுவது முதலியனவாம். பாரதநாட்டுத் தலைவர் ஜவாஹர்லால் நேரு முன்னொருகால் இந்தக் கழகத்தைச் சுற்றிப் பார்க்கும்பொழுது, தமக்கு ஏற்பட்ட ஸந்தேகங்களைக் குறித்து ஆராய்ச்சியாளரிடம் கேட்ட நுட்பமான கேள்விகளும், அவைகளின் மூலம் வெளியான அவருடைய கூரிய விஞ்ஞான அறிவும், அவர்களைப் பிரமிக்கச் செய்தனவென்று அறியலானேன்.

சீன ஸங்கீதம்

நமது இசையில் காணும் ஏழு ஸ்வரங்கள் பிறந்த வரலாற்றில் ஐந்து ஸ்வரங்கள் வரை வளர்ந்த நிலை அதன் ஒரு முக்கியமான கட்டமாகும். இப்பொழுதும் நமது நாட்டுப் பாடல்களில் அனேகம், ஐந்து ஸ்வரக் கூடுகளிலேயே அமைந்தவை. சீனர்களின் இசையில் "கோங்ச்சே" என்ற ஒரு 'தாட்' முக்கியமாக இருக்கிறது. அது கர்நாடக ஸங்கீதத்தின் "மோகனம்" என்ற ஔடவ ராகத்தை ஒத்தது. ஐரோப்பிய இசையில் பிரதானமாக உள்ளதும், இந்துஸ்தானி முறையில் சுத்தஸ்வர ராகமுமான சங்காரபரணத்திற்கும் மோஹனத்திற்கும் உள்ள நெருங்கிய ஸம்பந்தத்தைக் கவனிக்குமளவில், புத்த மதமும், இந்திய ஓவியமும் போலவே இந்திய ஸங்கீதமும் சீனக்கலைக்கு ஆதாரம் என்பது தெளிவாகும். "கின்" அல்லது "சுங்" என்பது யாழைப்போன்ற ஒரு இசைக்கருவி. புராதன காலத்தில், "பு-ஹி" என்ற சீனப் பேரரசரும், "கன்பூஷியஸ்" என்ற தத்துவ ஞானியும் அதைப் போற்றினார்கள். ஆனால் அந்தக் கருவி நாளடைவில் மறைந்து விட்டது. பல நூற்றுண்டுகளாகச் சீனவின் சரித்திரப் போக்குச் சிக்கல்கள் நிறைந்துள்ளது. பொருளாதாரக் குழப்பம் ஸமூகத்தைப் பலவாறு பாதித்திருக்கிறது. ஆகையினால் அந்த நாட்டில் ஸங்கீதத்தைப் போன்ற லலிதக் கலைகள் படிப்படியாக ஓங்கி வளரவில்லை.

எனினும், சீனர்களின் இசைக்கலை முற்றிலும் அழியவில்லை. மூன்று ஸ்தாயிகளுக்கு மேல் வாசிக்கக் கூடிய ஒரு தந்தி வாத்தியத்தின் ஸ்வரங்கள், நமது ஆதி ராகமான கரஹரப்பிரியா மேளத்தில் அமைந்திருக்கின்றன. ஆனால் சீனர்கள் அந்த ராகத்தை "ஹோசசே" என்று அழைக்கின்றனர். மேலும், பன்னிரண்டு ஸ்வர மெட்டுகளும் இரண்டு தந்திகளும் உடைய "யாஹு-சுன-



ரப்பர்த் தளமிட்ட சாலை

குன்", நாற்பது தந்திகளுக்கு மேலுள்ள "யாங்குன்", முதலிய சில இசைக் கருவிகள் இன்றும் உயிர் தரித்திருக்கின்றன. ஒரு உலோகத் தகட்டின்மீது கணீரென்று தாளத் தட்டுகளையும், ஒரு மரக்கட்டையின்மீது "வீச்சு"களையும் சீனர்கள் ஒரு கோல்கொண்டு தட்டித் தாளம் போடுகிறார்கள். ஒரு சீன இசைச் சங்கத்தினர், இந்திய ஸங்கீதத்தையும் சீன இசையையும் நீண்ட நேரம் ஒப்பிட்டுப் பார்த்து, வீணையின் அம்சங்கள் அனைத்தையும் விளக்கக் கேட்டனர். முடிவில், அவர்களுடைய தலைவர், எனக்கு வந்தனம் கூறி, "இந்திய ஸங்கீதத்தின் எண்ணிறந்த இசை நுணுக்கங்கள், கருவிகள், இலக்கண நூல்கள், இவை யாவும் பல நூற்றாண்டுகளினூடே தொடர்ந்த முயற்சியின் பயனாக உருவானவை. நாங்களோ, எங்களுடைய பழைய கலையைப் போற்றவுமில்லை, வளர்க்கவுமில்லை. ஏழு ராகங்களும், மூன்று தாளங்களும், இங்கே நீங்கள் பார்க்கும் சில கருவிகளுமே எஞ்சியிருப்பவை. இந்த நிலையில் நாங்களே ஐரோப்பிய ஸங்கீதத்திற்குச் சலுகை காட்டி வருகிறோம். இந்திய ஸங்கீதத்தின் மாட்சிமை எங்கே? உருக்குலைந்து, விரைவில் மறைந்துவரும் எங்கள் ஸங்கீதம் எங்கே!" என்று கபடமில்லாமல் மனம்விட்டுச் சொன்னார். பிற தேசத்து அறிஞர்கள். மதிக்கும் நமது கலைக்குத் தற்காலம் ஏற்பட்டிருக்கும் இன்னல்கள்



நீர்வீழ்ச்சியுடன் கூடிய விஸ்தாரணமான நந்தவனம்

அப்பொழுது என் நினைவிற்கு வந்தன. "வாழ்க கர்நாடக இசை; வளர்க நம் இசைத் தமை!", என்று நமது கலையின் மேன்மைக்குப் பல்லாண்டு பாடி, அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டேன்.

நாட்டுச்சாலை

இசைச் சொற்பொழிவு, வீணை இசை விளக்கம், இவற்றை முன்னிட்டு, பினங்கு, தெய்ப்பிங், கோலாலம்பூர், கிள்ளாங், செரம்பான், மலாக்கா, ஜோஹோர் பாரு, ஆகிய இடங்களுக்குப் போக நேர்ந்தது. கலகக்காரர் தொல்லையினால் இருப்புப் பாதை பயனற்றிருந்தது. அதுவும் நன்மைக்கே என்று எண்ணும்படி, அழகிய நாட்டுச் சாலையில், நெடுந்தூரம் பிரயாணம் செய்யும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. இந்த இடங்கள் மலைகளும் காடுகளும் நிறைந்த பிரதேசத்தில் இருக்கின்றன. எனினும், அவைகளை இணைக்கும் சாலை நேர்த்தியாகச் செப்பனிடப் பட்டிருக்கிறது. இதன் வழியே செல்லும்பொழுது, இருபுறங்களிலும் துலங்கும் இயற்கை யன்னையின் பேரழகில் உடலும் மனமும் ஒருங்கே லயித்து, இன்பமயமாகிவிடும். விண்ணைத் தொடும் மலைச் சிகரங்கள் அவற்றுடன் போட்டியிடும் மரங்கள், செடி கொடிகள், பூஞ்சோலைகள், பரிமளம் நிறைந்து, ஜில்லென்று வீசும் இளவேனில்—இவைகளில் தெவிட்டாத இன்பம் நுகரும் பண்பாடிருப்பின், சலிப்பும் சோர்வும் அணுகாதொழியுமன்றோ? ஆதலின், இந்தச்



அச்சில் வார்த்த ரப்பர் சாமான்கள்

சாலே உலகப் பிரசித்தி பெற்றிருப்பது இயற்கையே.

மலாயாவில் இலங்கைத் தமிழர்.

மலாயா நாட்டில், ஏறக்குறைய 25,000 இலங்கைத் தமிழர் வசிக்கின்றனர். ஐம்பது வருஷங்களுக்குமுன், ஜனத்தொகைக் கணக்கிடும்பொழுது, இவர்களின் எண்ணிக்கை, ஆண்கள் ஐயாயிரமும்,பெண்கள் தொள்ளாயிரமுமாக, ஐயாயிரத்துத் தொள்ளாயிரம். இது, கடந்த அரை நூற்றுண்டில், ஏறக்குறைய நான்கு மடங்கு அதிகரித்திருக்கிறது. இந்த இனத்தவரில் நாற்பத்தைந்து சத விகிதம் ஸெலங்கேள் என்னும் மாகாணத்தில் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர், அதாவது ஏறக்குறைய எண்ணுயிரம் பெயர்கள், மாகாணத்தின் தலைநகரான கோலாலம்பூரில் இருக்கின்றனர். மலாயாவில் இலங்கைத் தமிழர் சிறப்புடன் வாழ்கின்றனர். ஆங்காங்கு, கலாவிருத்திச் சங்கங்களும் பொதுநலக் குழுக்களும் தீவிரமாக உழைத்து வருகின்றன. அவர்களுக்குக் கர்நாடக ஸங்கீதத்தில் உள்ள சிரத்தை மெச்சத்தக்கது. அவர்கள் இடந்தோறும் இசைப்பள்ளிகளை அமைத்திருக்கின்றனர். அவர்களுடைய இன ஒற்றுமையையும், நிர்வாகசக்தியையும், கொடைக் குணத்தையும் நன்கு பயன் படுத்தினுல், மலாயா நாட்டில், பொதுவான மத்திய இசைஸ்தாபனம் ஒன்றை நிறுவி, அதன் மேற்பார்வையில், முக்கியமான இடங்களில் இசைப்பள்ளிகளை நடத்தி, கலையின் முன்னேற்றம் காணலாம். மலாக்காப் பட்டணத்தில், ஒரு இசைப் பள்ளியின் கட்டிட நிதிக்காக நடத்திய ஒரு வீணைக் கச்சேரிக்கு, அவர்கள், நொடிப்பொழுதில், ஆயிரம் வெள்ளிக்குமேல் வசூலித்தார்கள்! உயர்ந்த நெறியும், சிறந்த பண்பாடும், முதிர்ந்த நாகரிகமும் உள்ள இந்தச் சமூகம், மலாய் நாட்டில், கண்ணியமாக வாழ்ந்து வருவது இலங்கைக்குப் பெருமையே.

(தொடரும்)



ரப்பர் ஆராய்ச்சிக் கழகம் கோலாலம்பூர்

(MADRAS), LTD.

Retail Branches 285, China Bazaar. 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylpaore. No. 2. Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

ஸ்ரீ ஸ்துதி

ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

सानुप्रासप्रकटितदयैः सान्द्रवात्सल्यदिग्धैः
अम्बस्निग्धैः अमृतलहरीलब्धसब्रह्मचर्यैः ।
घर्मे तापत्रय विरचिते गाढतप्तं क्षणंमां
आकिञ्चन्यग्लपितमनघैरार्द्रयेथाः कटाक्षैः ॥

ஸாநுப்ராஸ ப்ரகடிததயை : ஸாந்த்ரவாத்ஸல்யதிக்தை :
அம்பஸ்நிக்தை ரம்ருதலஹரீ லப்த ஸப்ரஹ்மசர்யை : |
கர்மேதா பத்ரயவிரசிதே காடதப்தம் க்ஷணம்மாம்
ஆகிஞ்சந்ய க்லபித மநகைரார்த்ரயேதா : கடாக்ஷை : || (21)

ஸாவேரி — ஆதி 2 களை

லகு	த்ருதம்	த்ருதம்
ஸ் ; ; ்ரி ஸ் ஙி த தா ; பா , ஙி த ப மா தா பா தா ;	; மா பா தா , ்ரி ஸ் ஙி தா தா ;	பா , ஙி த ப மா கா ரி ரீ ;
ஸா நு ப்ரா ஸ	ப்ரக டி த	த யை
ரீ மா பா தா , ஙி பா த ம கா ரி ஸா , ரி ஸ ஙி தா ரீ ஸா ரீ	; ரி மா ; பா ; தா ;	பா , த த ப ப ம ப த ப த பா ;
ஸா ந்த்ர	வா த்ஸ ல்ய	தி க்தை
பா தா , ஙி ப தா ம ்ரி ்ரி ஸ் ஙி தா மா கா ரி ஸா ரி ம ப த ப தா ;	; பா தா ; க்ா ்ரி ஸ்ா ்ரி	ஸ்ா , ஙி த ம தா ரீ ஸ்ா ்ரீ ;
அ ம்ப ஸ்நி க்தை	ர ம்ரு த	ல ஹ ரீ
த ப தா க்ா ்ரி க ர் ்ரீ ஸ்ா ்ரி ; ஸ்ா ; ஸ் ஙி தா ்ரி ஸ்ா ்ரி க ர் ;	; க்ா ்ரி ; ்ரி ஸ் நீ த ம த்ரி	ஸ் ஙி த ம க ரி ஸ ஙி தா ரி ஸா ;
ல ப்த ஸ	ப்ர ஹ்ம ச	ர்யை

மத்யம கால நடை

தா மா கா ரி ஸா ரீ மா பா தா பா ; பா ப ம த ப தா ;	பா தா நீ பா தா மா பா ;	பா மா பா , த பா தா மா ;
க ர்மே தா ப த்ர ய வி ர சி தே	கா ட த ப்தம்	க்ஷ ணம் மாம்
பா தா ஸ்ா ; ்ரீ ஸ்ா ்ரீ ; ்ரீ நீ தா மா கா ரீ ஸா ;	ஸா ; ; நீ தா நீ தா மா	கா ரீ ஸா ரீ ; மா பா தா
ஆ கிஞ் ச ந் ய க்ல பி த ம ந கை	ரா ர்த்ரயே தா	க டா க்ஷை

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; மா பா தா ்ரி நீ தா மா கா ரீ ஸா ஸ ஙி தா ரீ	ஸா ; ; ரீ ஸா ; மா ரீ	பா மா தா பா ; மா பா தா
ஸா மா பா தா ரீ நீ தா மா கா ரீ த க ஜ ணு	தாம் த ஜம் மா ரீ	பா மா தா பா மா பா தா
ஸ்ா ்ரீ க்ா ்ரீ ; நீ தா மா கா ரீ ; தா ஸா ரீ மா தா	்ரீ ; ; தா ; ; ரீ ;	; ஸா ; ரீ ; மா பா தா
ஸா ரீ கா ரீ நீ த தி மி தா ம்த்ா ஸா ரீ மா தா	ரீ தா ரீ	த தி ஙி ண தொம்

सम्पद्यन्ते भवभयतमी भानवः त्वत्प्रसादात्
भावास्सर्वे भगवति हरौ भक्तिमुद्वेलयन्तः ।
याचे किंत्वामहमिह यतः शीतलोदारशीला
भूयोभूयो दिशसि महतां मङ्गलानां प्रबन्धान् ॥

ஸம்பத்யந்தே பவபயதமீ பாநவ: த்வத் ப்ரஸாதாத்
பாவா: ஸர்வே பகவதி ஹரௌ பக்தி முத்வேலயந்த: |
யாசேகிம் த்வா மஹமிஹயத: சீதளோ தாரசிலா
பூயோ பூயோ திசஸிமஹதாம் மங்களாநாம் ப்ரபந்தாந்|| (22)

ஸஹாநா **ஆதி 2 களை**

லகு	த்ருதம்	த்ருதம்
ஸ்ா ; ; ; தா, நி ஸ் ·ரீ ஸ் ஸ்ா ·ரி ஸ் ஸ் நி நீ ஸ் தா ஸ நி நீ த தா பா	; மா பா ; நி த ப ம கா ;	கா, ம க மா ரி ரீ, ம க கா ரி ஸா ;
ஸம் ப த்ய ந்தே	ப வ ப ய	த மீ
ரீ, க ஸா, ரி ரீ ஸா நீ நீ ஸா ; தா ; த நி ஸ ரி கா ரீ	; ரீ கா ; மா ப த பா மா	கா, ம ரீ, க ரீ ஸா நீ ஸா
பா ந வ ஸ்த்வ	த்ப்ர ஸா	தா த்
ம பா, ; ; மா ப த நி த ப ம கா ; மா ரீ கா, ம பா ;	; ரீ ரீ ; நி த தா, ஸ் நி த பா	ப த ப த ப ம தா நீ நீ ஸ்ா ;
பா வா ஸ்ஸ ர்வே	ப க வ தி	ஹ ரௌ
·ரீ ஸ்ா நீ ·ரீ ஸ·ா ; ; ; ஸ்ா, க் நீ நீ தா நி த ப ம த நி	ஸர் பா பா ரீ கா மா நி த ப ம	கா ம க ரீ, க ரி ஸ நீ ஸா ;
ப க்தி மு த்வே	ல ய	ந்த

மத்யம கால நடை

பா, த ப ம மா கா ; கா மா ரீ ரீ ரீ பா ; மா பா ரீ	ரீ கா மா தா நீ ஸ்ா ·ரீ ஸ்ா	த நி தா ப த ப ம தா நீ ஸர் ;
யா சே கிம் த்வா ம ஹமிஹய த	ஶீ த ளோ	தா ர ஶி லா
·ரீ ஸ்ா நீ ஸ்ா ·ரீ, க் ·ரி ஸ்நீ தா நீ ஸ்ா ஸ்ா தா நி த பா மா	; தா நீ ஸ·ா ஸ்ா பா பா ரீ	ரீ கா மா பா மா தா தா நீ
பூ யோ பூ யோ தி ச ஸி ம ஹ தாம்	ம ங்களா நாம்	ப்ர ப ந் தா ந்

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; ஸர் தா பா மா நீ தா பா மா கா ; மா ரீ ஸா	ரீ ; ; தா ; ; ·ரீ ;	; நீ ; தா பா மா தா நீ
ஸா ஸா தா பா த க த தி ன தொம் த கி ட	ரீ தா ரீ	நீ தா பா மா தா நீ
ஸ்ா ·ரீ ; ரீ கா மா தா நீ ; நீ ஸா ரீ கா மா தா நீ	ஸ்ா ஸ்ா ; பா பா ; ரீ ரீ	; நீ ஸா ரீ கா மா தா நீ
ஸா ரீ ரீ கா மா தா நீ த் தி மி த க தி ன	ஸா ஸா பா பா ரீ ரீ	த க த தி கி ண தொம்

(தொடரும்)

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது !

S. 151-50 TM

மூன்றாவது பிறந்த நாள்

முத்து-சுப்ரமணியன்

ஐந்து வருடங்களுக்கு முன்

அப்போது அவன் ஒரு கலையரசன். அவன் வரைந்த சித்திரங்கள் நுழையாத இடமில்லை—அவற்றைக் கண்டு மயங்காதவரும் இல்லை. கலைத்தேவியே அவனிடம் குடிகொண்டிருந்தாளோ என நினைக்கும்படி அவன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தான்.

ஆயிரமாயிரம் மக்களுக்கு மனச் சாந்தியளிக்கும் நீலக்கடல் அவன் திரையிலே உருவாகும்—அப்போது கடலலையின் ஓசை கேட்கலாம்!

மேற்கு வானம் சிவந்திருக்கும்—இடையன் பசுக்களை ஓட்டிக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருப்பான். மனோஹரமான தென்றல் மெல்ல வீசும். இந்தக் காட்சியை அவன் சித்திரிப்பான். அப்போது அந்தத் தென்றல் காற்று பார்ப்பவர் உடலையும் தழுவிச் செல்வது போலிருக்கும்!

இப்படி எவ்வளவோ! அவன் வரையும் ஒவ்வொரு சித்திரத்திலும் ஜீவகளை ததும்பி நிற்கும். அவனுக்கே உரித்தான ஒரு பாணி—அதை யாராலும் கைப்பற்றமுடியவில்லை!

அவன் பெயர் குமார்.

ஆனால் இன்று—

அந்தப் பெயர் கலைஞர்கள் மத்தியிலிருந்து மறைந்துவிட்டது. அவனுக்குத் திறமை இல்லாமல் போய்விடவில்லை. ஆனால் அவனே தன்னிடமிருந்த கலையை விரட்டிவிட்டான். ஆண்டாண்டுகளாகத் தவம் கிடந்தாலும் கிடைத்தற்கரிய பொக்கிஷத்தைத் தன்னிடம் வலியவந்து சேர்ந்தும் உதைத்துத் தள்ளிவிட்டான்! அதோடு நில்லாமல் அந்தக் கலையை நினைவூட்டும் சின்னங்களையெல்லாம் அழித்துவிட்டான் — பித்தனைப் போல. அன்பு மனிதனைப் பித்தனாக்கமுடியும் என்பதற்கு அவன் வாழ்வு சான்று.

அவன் புகழேணியின் உச்சியில் இருந்த நாட்களிலே அவன் வாழ்வில் கவலைக்கே இடமில்லாமல் இருந்தது. அவன் குடும்ப வாழ்வின் இன்பத்தைப் பூரணமாக்குவதற்காகப் பிறந்திருந்தான் அவன் மகன் ரவி. வெளியுலகிலே புகழ். வீட்டிலே அன்பு மனைவியும் அவர்கள் அன்பில் விளைந்த அமுதமும்! வேறு என்ன வேண்டும் இன்ப வாழ்விற்கு?

குழந்தை ரவியின்மேல் அளவற்ற அன்பு கொண்டிருந்தான் குமார். அக் குழந்தைக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தான் அவன். எவ்வளவு முக்கியமான சித்திரமாயிருந்தாலும் ரவிக்காக அந்த வேலையைத் தள்ளி வைத்துவிட்டு, குழந்தையின் மனதைக் களிப்பிக்கச் சிறிய சித்திரங்கள் வரைந்து கொடுப்பான்.

அன்று ரவியின் மூன்றாவது பிறந்த தினம். குழந்தை அன்று என்றுமில்லாத சோபையுடன் விளங்கினான். அதைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போனார்கள் அந்தத் தம்பதிகள். அப்போது அவன் மனைவி சொன்னாள்.

“இவ்வளவு படம் வரைகிறீர்களே நம் ரவியைப் பார்த்து ஒரு படம் போடக் கூடாதா?”



ஆஹா! என்ன அற்புதமான யோசனை. அவன் உள்ளம் துள்ளிக் குதித்தது.

"என்ன யோசிக்கிறீர்கள்? குழந்தை அசையாமல் உட்கார்ந்திருக்க மாட்டானே என்று?......"

"இல்லை இல்லை. குழந்தையைப் பார்த்து வரைய வேண்டுமென்ற அவசியமே இல்லை" ரவிதான் என்றென்றும் அவன் உள்ளத்தில் இருந்துகொண்டு அவன் மனக்கண் முன் களிநடனம் புரிந்து கொண்டிருந்தானே!

மிக மிக ஜாக்ரதையாகச் சித்திரம் உரு வாயிற்று. மனதை மயக்கும் அந்த முல்லைச் சிரிப்பு. கருத்தைக் கவரும் கரு விழிகள். முத்தமிட அழைக்கும் ரோஜாக் கன்னங்கள்! அப்படியே தத்ரூபமாக!

"ஐயோ! குழந்தை வர்ணத்தைத் தொடுகிறானே! விஷமாயிற்றே!" என்று கத்திக் கொண்டு ஓடி வந்தாள் அவன் மனைவி. சட்டென்று திரும்பினான் குமார். ரவி விஷங் கலந்துள்ள வர்ணத்தை எடுக்கும் சமயத்தில் அவன் மனைவி அவனைக் காப்பாற்றிவிட்டாள். நல்ல வேளை!

விட்ட சித்திரத்தைத் தொடரத் திரும்பினான் குமார். ஆ! இதென்ன! அவன் மனைவி கூச்சலிட்டபோது திரும்பிய வேகத்தில் அவன் கையிலிருந்த சிவப்பு வர்ணம் சித்திரத்தில் ரவியின் வாய்க்கு அருகில் தெறித்துப் பெரிதாகப் பரவி நின்றது—சிவப்பாக ரத்தம்போல்!

விளங்காத மனக்கிலேசத்துடன் புதிய சித்திரம் ஒன்று வரைய ஆரம்பித்தான் குமார். ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாக இரண்டாவது சித்திரம் முன்னிலும் சிறப்பாக அமைந்தது. ஒரு இரண்டாவது உயிருள்ள ரவியை அவன் சிருஷ்டித்துவிட்டான்!

பொங்கும் குதூகலத்துடன் சித்திரத்தை ரவியுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் திரும்பினான்.

"ஐயோ! ரவி ...."

அவன் கதறவேண்டுமென்று நினைத்தான் ஆனால் முடியவில்லை. அவன் மனைவி முதல் தடவை பயந்து தடுத்த காரியம் நடந்தேவிட்டது. விளக்கினால் வசீகரிக்கப்படும் விட்டிலைப்போல வர்ணத்தினால் வசீகரிக்கப்பட்டு ரவி, விட்டிலின் கதியை அடைந்துவிட்டான். விஷ வர்ணத்தை விளையாட்டாகக் குழந்தை உட்கொண்டுவிட்டது.

வைத்தியர் வந்தார்—எவ்வளவோ சிகிச்சைகள்!

ஆனால் ரவி பிழைக்கவே இல்லை. ஒரு இரண்டாவது ரவி உருவான உடனேயே முதலாவது இருந்த ரவி மறைந்துவிட்டான்!

ரவி இரத்தம் இரத்தமாக வாந்தியெடுத்து இறந்தான். அதைப் பார்க்கச் சகியாமல் கண்ணை மூடிக்கொண்டபோது, குமாரின் முன்பு முதலில் வரைந்த சித்திரம்—ரவியின் வாயின் அருகில் சிவப்பு வர்ணத்தோடு—பயங்கரமாக வந்து நின்றது!

அதற்கப்புறம் அவன் சித்திரம் வரையவே இல்லை. தன்னிடம் இருந்த கலையின் சின்னங்கள் ஒவ்வொன்றையும் உருத்தெரியாமல் அழித்தான். அவன் அமர சிருஷ்டிகள் தீக்கு இரையாயின.

ஒரே ஒரு சித்திரம்தான் மிருந்து நின்றது. —அவன் ரவியின் படம்—அழிந்துபோன ரவியின் அழியாத பிம்பம்— மனதை மயக்கும் அந்த முல்லைச் சிரிப்புடன் அது என்றென்றும் சாசுவதமாக இருந்தது!

அன்பினால் பித்தனான அவன் கலையைக் கொலை செய்துவிட்டான். கலை செய்த கொலைக்காக—அவன் அப்படித்தான் எண்ணினான்—அவன் பழி வாங்கிவிட்டான். அவன் வாழ்வு இருண்டுபோயிற்று!

* * *

காலதேவனின் சக்தி கணக்கிட முடியாதது. ரவியின் மறைவினால் ஏற்பட்ட சோகம் எங்கே தன் வாழ்வையே குலைத்து விடுமோ என்று அவன் எண்ணியதுண்டு, ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அந்த வருத்தம் அவன் மனதிலிருந்து மறையத் தொடங்கியது. மானசீகமாக அவன் ரவி உயிரோடு வாழ்ந்து கொண்டேயிருந்தான்—சிரஞ்சீவியாக மார்க்கண்டேயனைப்போல!

தன் வாழ்விலே ஜகஜ்ஜோதியாக ஒளி வீசட்டும் என்று தன் முதல் குழந்தைக்கு அவன் 'ரவி' என்று பெயரிட்டழைத்தான். அந்த ஆதவன் தன் முழுப் பிரகாசத்தை அடையுமுன்பே மறைந்துவிட்டான்.

ஆனால் இருண்டுபோன அவன் வாழ்வை ஒளியுறச் செய்ய ஒரு சந்திரன் தோன்றினான். சந்திரன் குமாரின் இரண்டாவது குழந்தை—ரவியின் பிரதி பிம்பம். அவனுக்கும் ரவி என்று பெயரிட அவன் மனைவி விரும்பினாள். ஆனால்.........குமாருக்கு அது ஏதோ பயங்கரமாகத் தோன்றியது! அதன் பயன்தான் சந்திரன் என்ற பெயர்.

முன்பு ஒரே நாளில் அவன் இரண்டு மணிகளைப் பறிகொடுத்தான். ஒன்றைத் தெய்வம் அவனிடமிருந்து வலியப்பிடுங்கிச் சென்றது. மற்றொன்றை

அவனே தூக்கி எறிந்தான். அந்த இரண்டு மணிகளில் ஒன்றை இப்போது திரும்பப் பெற்று விட்டான். ஆனால் இன்னென்றைப் பற்றி அவன் நினைக்கவே இல்லை.

சந்திரன் வளர்ந்தான்—ரவியைப் போலவே வளர்ந்தான்—உருவம்—பேச்சு—நடை— ஆசைகள் எல்லாவற்றிலும் ரவியைப்போலவே! ரவியின் ஒவ்வொரு செயலும் குமாருக்கு எல்லையில்லா இன்பத்தைக் கொடுக்கும், ஆனல் இன்று அதே போன்ற செய்கை சந்திரனிடமிருந்து வெளிப்பட்டது. அவன் பரவசமடையவில்லை,-பதிலுக்கு அவன் உள்ளம் துணுக்குற்றது. எவ்வளவுக்கெவ்வளவு சந்திரன் ரவியை ஒத்திருந்தானே அவ்வளவுக்கவ்வளவு குமாரின் உள்ளம் குழம்பிக் குழம்பித் தவித்தது.

குழப்பத்திற்கிடையே பயங்கரமான எண்ணங்கள் அவன் மனதிலே தோன்றும். ரவி-சந்திரன் சூரியன்-சந்திரன். சூரியன் பிரகாசிக்கும் அதே நேரம்தானே சந்திரனும் ஒளி வீசுகிறன். அதே போல் சந்திரனும் ரவி வாழ்ந்த அளவே....... இதைப்போல் இன்னும் எவ்வளவோ பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள். சந்திரனின் மூன்ருவது பிறந்த தினம் நெருங்கிக்கொண்டிருந்தது. கூடவே இனம் தெரியாத குழப்பம் குமாரின் மனதை நெருக்கிக்கொண்டு வந்தது. இரவில் வெகுநேரம் தூங்காமல் குழந்தை சந்திரனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பான். பிறகு ரவியின் சித்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு கண்ணீர் பெருக்குவான். தவறித் தூங்கிவிட்டாலோ கணக்கில்லாமல் பிதற்றல்கள்! ரவி-சந்திரன்-கலை இம்மூன்றும் மாறி மாறிச் சுழன்று வந்து அவனைக் குழப்பும்.

அவன் மனைவி பயந்துவிட்டாள். வைத்தியரிடம், ஜோசியரிடம், மாந்திரீகரிடம் எல்லோரிடமும் அவனைக் காட்டினள். அவன் எல்லாவற்றிற்கும் இசைந்தான். ஆனல் அவன் முகத்தில் படர்ந்து நின்ற அந்தச் சோகம் மறையவே இல்லை. ஒளியிழந்துபோன அவன் கண்கள் வெறித்து வெறித்துப் பார்க்கும். சந்திரனைப் பார்க்கும்போது மட்டும் அந்தக் கண்களில் ஒரு கணம் பிரகாசம் தோன்றி மறையும். ஒரே கணம்தான். பிறகு எப்போதும்போல் அந்தச் சோகம்!

அந்தத் தினம்-சந்திரனின் மூன்ருவது பிறந்த தினம் வேகமாக நெருங்கிக்கொண்டே வந்தது. குமாரின் நிலை இன்னும் மோசமாகப் போய்க்கொண்டே இருந்தது.

அதற்கு முந்தின இரவு அவன் மனக் குழப்பத்தின் எதிரொலிகளென ஆவன் அதிசயமான கனவுகளைக் கண்டான்.

ரவியும் சந்திரனும் கைகோத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆனந்தம் அவனுக்குத் தேவாமிர்தமாக இருக்கிறது. அவர்களை இழுத்து அணைத்துக்கொள்ளக் கிட்ட நெருங்குகிறன். ஆனல் அவர்கள் அருகில் செல்லவே முடியவில்லை. அவர்கள் போய்க்கொண்டே இருக்கின்றனர். அவனுக்கும் அவ்விருவருக்கும் இடையிலுள்ள தூரம் அதிகமாகிக்கொண்டே போகிறது. பிறகு அவர்கள் மறைந்தே போகின்றனர்கள்!

மற்றெரு காட்சி—

சந்திரனைத் தோளில் சாத்திக்கொண்டு அவன் விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறன். அப்போது எங்கிருந்தோ வருகிறன் ரவி. சந்திரனின் கையைப் பிடித்து இழுக்கிறன். குமார் சந்திரனை இன்னும் இறுகப் பிடித்துக்கொள்கிறன். ஆனல் அவனுக்கே புரியவில்லை. ஒரு குழந்தையின் பலத்தை அவனல் எதிர்க்க முடியவில்லை! ரவி சந்திரனை அழைத்துக்கொண்டு போய்விடுகிறன். குமார் தன்னந்தனியாக அழுதுகொண்டு நிற்கிறன்!

இன்னெரு கனவு.

பூலோகத்திலிருந்து ஒரு படிக்கட்டு மேலே மேலே வளைந்து செல்கிறது—மேக மண்டலத்தினுள்ளே புகுந்துசெல்கிறது. குமார் அதில்ஏறிக்கொண்டே போகிறன். கீழிருந்து எல்லோரும் சந்தோஷத்தால் ஆர்ப்பரிக்கிறர்கள் ஆனல் திடீரென்று அவன் திரும்பிப் பார்க்கிறன். ஏதோ நினைத்துக்கொண்டவன்போலப் படிக்கட்டைக் காலால் உதைக்கிறன்—தானும் அங்கிருந்து உருண்டுவிழுகிறன்—வெகு வேகமாக அப் பாதாளத்தை நோக்கி. முதலில் சந்தோஷத்துடன் கூச்சலிட்டவர்கள் இப்போது அவனைக் கவனிக்கவே இல்லை. ஆனல் இன்னும் அவர்கள் ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர்—அந்தப் படிக்கட்டுகளில் ஏறிச்சென்றுகொண்டிருந்த வேறு சிலரைப் பார்த்து!

அந்த இரவு அவனுக்கு அப்படிக் கழிந்தது.

மறு நாள்—அவன் வாழ்விலே இரண்டாவது பயங்கரமான தினம்!.........அதுவராமலே போய் விடக்கூடாதா என்று அவன் எண்ணி ஏங்கிய அந்தத் தினம்—கடைசியில் வந்தேவிட்டது. தன்னுடனே பெரிய குழப்பத்தையும் கூட்டி வந்து குமாரின் மனதில் புகுத்தியது. அன்று காலையிலிருந்தே அவன் மனம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. முந்திய இரவு கண்ட கனவுகள் ஒவ்வொன்ருக மறுபடி அவன் முன்பு தோன்றின. சந்திரன் கடலில் அலைகளை எழுப்புவதுபோல். அவன் சந்திரனின் எண்ணம் அவன் உள்ளக் கடலைக் கொந்தளிக்க வைத்தது.

அவன் வேண்டியது ஒன்றேதான்—அமைதி!

மனதை அடக்குவதற்காக ஏதோ ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தான் குமார். அதுவும் குழப்பத்தையே பறை சாற்றியது—ஆம்! உலகம் முழுவதும் எப்போதும் கொந்தளிப்பு. உணவு—உடை—போர்—இப்படி ஆயிரமாயிரம் பிரச்னைகள்!

பத்திரிகையிலிருந்த ஒரு படம் அவனைச் சட்டென்று கவர்ந்தது. எங்கோ பார்த்ததுபோலிருந்தது அந்தப் படத்திலிருந்த முகம். கீழே பெய

ரைப் பார்த்ததும் அவனுக்கு நினைவு வந்தது — சேகர்! அவனிடம் சித்திரம் பழகிக்கொண்டிருந்தவன் அல்லவா! பத்திரிகையில் எழுதியிருந்ததை மேலும் படித்தான் குமார். அது சேகரை மிகவும் புகழ்ந்து எழுதியிருந்தது. சேகர் அகில இந்திய சித்திரப் போட்டியில் முதற் பரிசு பெற்றிருந்தான். பல தேசத்தவர்களும் அவன் சித்திரங்களைக் கண்டு புகழ்ந்து சென்றதாகப் பத்திரிகை கூறியது.

குமார் அதைத் திரும்பத் திரும்பப் படித்தான். சேகர்! ஐந்து வருடங்களுக்கு முன் அவனிடம் சித்திரம் பயின்றவன். எவ்வளவு முறை அவனே சொல்லியிருக்கிறான். "குமார்! எவ்வளவு முயன்றாலும் உன் சித்திரங்களில் உள்ள ஜீவனை என்னால் கைப்பற்றவே முடியவில்லை. நீதான் உண்மை ஓவியன்!" என்று.

இன்று அதே சேகர் புகழேணியின் உச்சியில் இருக்கிறான். ஆனால் குமார்! அவன் பெயர் இன்று மறைந்துபோய்விட்டது! ஏன்? அவனிடமிருந்த திறமை மறைந்துவிட்டதா?

குமார் சட்டென்று எதிரே இருந்த பென்சிலை எடுத்துக் காகிதத்தில் ஏதோ வரைய ஆரம்பித்தான். ஆனால் அவன் மனச் சஞ்சலத்தின் எதிரொலிபோல் கோடுகள் தாறுமாருகச் சென்றன. அவன் மனதிலிருந்த சிக்கலைப்போல் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு – சிக்கிக்கொண்டு நின்றன. மனம் அமைதியுடன் இருந்தாலல்லவோ சித்திரம் வரைய முடியும்!

ஆனால் அவன் வேறுவிதமாக நினைத்தான். தன்னிடம் இருந்த அரிய பொக்கிஷம் அடியோடு போய்விட்டதாக நினைத்தான்! அவன் கலைக்குச் செய்த அவமதிப்பிற்காக அது பழி வாங்கிவிட்டது. அவனிடமே கல்வி பயின்றவன் – அவனை விட எவ்வளவோ கீழே இருந்தவன் இன்று உலகப் பிரசித்திப்பெற்ற ஓவியன்!

முதலிரவு அவன் கண்ட கனவு அவனுக்கு நினைவு வந்தது—படியிலிருந்து அவன் உருண்டு விழுந்த காட்சி!

ஆம், அவன் உருண்டு விழுந்துவிட்டான். புகழேணியின் உச்சியிலிருந்து உருண்டு விழுந்துவிட்டான்; எதனால்? அவனுக்குச் சக்தியில்லையா?— இருந்தது—கடவுளாகக் கொடுத்த அரிய சக்தி இருந்தது.

இப்போது அவ்வளவும் போய்விட்டது! எப்படிப் போகமுடியும்? அவனே கலையைக் கொலை செய்துவிட்டாள். வலிய வந்த கலைத்தேவியை துரத்திவிட்டாள்!

எல்லாவற்றிற்கும் காரணம் யார்? விதி!......... விதியா?

குழம்பித் தவித்துக்கொண்டிருந்த அவன் மனம் அவனுக்கு ஒரு பயங்கரமான பதிலைக்கொடுத்தது!

"ரவி!—உன் ரவி! குமார்! கண்ணின் கருமணியெனக் காத்து வளர்த்தாயே, அந்த ரவிதான் இதற்குக் காரணம். விதியில்லை! ஆனால் ரவிதான் உன்னை உருட்டிவிட்டவன்!"

குமார் தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

"இல்லவே இல்லை! என்னருமை ரவி ஒரு காலும் குற்றவாளியல்ல! நான்தான் ஒரு மடையன். அஜாக்ரதையினால் என் ரவியை இழந்தேன். மடமையினால் என் கலையை இழந்தேன்!" அவன் கத்தவேண்டுமென்று நினைத்தான்.

அவன் மனம் மறுபடியும் பேசிற்று.

"யோசித்துப்பார்! ஒவ்வொருவருடைய குழந்தையும் இவ்வாறு விஷத்தைத் தின்று தானும் செத்து, தன் தகப்பனின் வாழ்வையும் குலைக்கின்றதா? ஆனால் உன் ரவி மட்டும் ஒரு தனிப் பிறவி. உன் துரதிர்ஷ்டத்திற்கென்றே பிறந்தவன்!"

அதை மறுத்து மறுத்துப் பார்த்தான் குமார்! ஆனால் அந்த எண்ணம் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தது. அவனை மயக்கி ஆட்டிவைத்தது!

கடைசியில் அது உண்மையென்று அவனுக்குத் தோன்றியது. ஆம்! ரவிதான் எல்லாவற்றிற்கும் ஆரம்பம். இன்பமாகச் சென்றுகொண்டிருந்த அவன் வாழ்வில் குறுக்கிட்டு ஒரு சிறிது காலம் அதைத் தேவலோகமாக்கி, பிறகு அவனைச் சோகக் கடலில் ஆழ்த்திவிட்டுப் போய்விட்டான்.

ரவி! ஆம்! அவன் கொடியவன்! அவன் தகப்பனின் புகழைக் குலைத்தவன். இன்று அவன் கலைஞர்களின் அரசனாக இருக்கவேண்டியவன் சாதாரண மனிதனாக இருக்கிறான். திறமை இருந்தும் கட்டுண்டு கிடக்கிறான்!

சூறவளியில் சிக்கிய கப்பலைப்போல் அவன் மனம் தத்தளித்தது. வேண்டாத திசையிலே வேகமாகச் சென்றது. பாறைகளில் மோதி அதிர்ந்தது. பல இடங்களில் பொத்துக்கொண்டது.

குமாரின் மனதில் அவள் 'கண்மணி' ரவியின் மேல் என்றுமில்லாத ஆத்திரம். துவேஷம் பொங்கி நின்றது.

அறையில் காலடிச் சப்தம் கேட்டது. குமார் தலை நிமிர்ந்து பார்த்தான்.

யார் வருவது? ரவி!

அவன் வாழ்வைக் குலைத்த ரவி!

"அட பாவி! என் கலை புகழ் எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கியது போதாதென்று மறுபடி ஏன் என் முன்னே வந்து நிற்கிறாய்? போ! போய்விடு! கண்காணமல் போய்விடு! உன் பாப முகத்தை எனக்குக் காட்டாதே!" குமார் இவ்வாறு கத்தியதாக நினைத்தான். ஆனால் அவன் உதடுகள் அசையவில்லை.

'ரவி' அவன் கதறல்களைக் கேட்கவில்லை. சிரித்த முகத்துடன் அவன் இன்னும் அருகில் வந்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் அந்த மனதை மயக்கும் முல்லைச் சிரிப்பு மிளிர்ந்தது!

அந்தச் சிரிப்பு குமாரைப் பித்தனாக்கியது. கோபம்—துவேஷம் எல்லாம் கலந்து கூவின. "பழி''

"போகமாட்டாய்? இதோ நானே உன்னைத் தொலைத்துவிடுகிறேன். என் வாழ்வைக் குலைத்ததற்குப் பழிவாங்கிவிடுகிறேன்!''

சிவந்த அவன் கண்கள் மிரள மிரள விழித்தன. வெறியனாகிவிட்ட அவனுடைய கைகள் 'ரவி' யின் கழுத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டன....!

"பழிக்குப் பழி!''

அப்போது ஒரு சப்தம் கேட்டது! குமாரின் இருதயத்தை யாரோ ஓங்கி அடிப்பதுபோல்......! அவன் கைகள் விறைத்து ஸ்தம்பித்து விட்டன.

அறையில் மாட்டியிருந்த ரவியின்படம் அறுந்து கீழே விழுந்திருந்தது. குமார் படத்திலிருந்த ரவியையும் கையிலிருந்த 'ரவி'யையும் மாறி மாறிப் பார்த்தான். கண்கள் பிதுங்க விழித்துப் பார்த்தான். குழந்தையை உற்றுப் பார்த்தான்!

யார்! சந்திரன்!

"சந்திரா!'' அவன் செய்யவிருந்த பயங்கரமான காரியம் ஒரு நிமிடம் அவன் இதயத் துடிப்பை நிறுத்தியது. அடுத்த கணம் கொல்லவிருந்த கரங்கள் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டன. அவன் கண்கள் அருவியென நீரைப் பெருக்கின. சிறு குழந்தையைப்போல் விக்கி விக்கி அழுதான் குமார்!

குழந்தையை மெள்ளக் கீழே விட்டுவிட்டு, ரவியின் படத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கண்களில் ஒற்றிக்கொண்டான். அன்று அவனையும் சந்திரனையும் ஒரு பெரிய அபாயத்திலிருந்து காத்ததற்காக அவன் மனம் ரவிக்கு ஆயிரமாயிரம் வந்தனங்கள் தெரிவித்தது.

சித்திரத்திலிருந்த ரவி ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்ட பெருமையோடு புன்னகை பூத்துக்கொண்டிருந்தான்.

மனதை மயக்கும் அந்த முல்லைச் சிரிப்பு — கருத்தைக் கவரும் கருவிழிகள் — முத்தமிட அழைக்கும் ரோஜாக் கன்னங்கள்!

* * *

அந்தத் தினத்திற்குப்பிறகு குமாரின் முகத்தில் படர்ந்து நின்ற சோகம் மறைந்துவிட்டது. பதிலுக்கு அவனுக்கு வழக்கமான மந்தஹாசம் நிறைந்திருந்தது.

அவன் மனைவிக்கு அது ஆனந்தத்தைக் கொடுத்தாலும் இந்தத் திடீர் மாறுதலின் காரணம் விளங்கவேயில்லை!

நிலையும் நிழலும்

வெங்கடராமன்

காலையில் உதித்த கதிரவனது செவ்வொளியைக் கண்டு கடல் கொந்தளித்துத் தனது அலைகளைக் கோரமாக வீசியது. அதை லட்சியம் செய்யாதவன்போலக் கதிரவன் தனது பணியைச் செய்யப் பவனியைத் துரிதமாக நடத்திக்கொண்டிருந்தான்.

கடலின் அமைதியற்ற அலைகளின் பேரொலியைப்போல அரண்மனை மாடத்தில் நின்றுகொண்டிருந்த ஊமைத்துரையின் மனமும் கொந்தளித்துக்கொண்டிருந்தது. அவனுடைய அகன்ற மார்பு அடிக்கடி விம்மித் தணிந்தது. வெற்றியின் வெண்மதியைக் கண்டு களித்த அவன் கண்கள் கடலின் கரையில்லாது வீசும் அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தன.

ஊமைத்துரையின் நீண்ட நாசியிலிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது. அதன் வேகத்தில் அவனைச் சுற்றியிருந்த காற்று அனலெனச் சுட்டது.

எங்கோ ஓரிடத்திலிருந்து பாஞ்சாலங்குரிச்சி வீரர்கள் பாடும் வெற்றிப்பண் கேட்டுக்கொண்டிருந்தது.

ஊமைத்துரையின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

வீரர்கள் !

தன்மானமுள்ள தமிழர்கள் !

தாய்நாட்டில் நுழைந்து தலைவிரித்தாடும் தறிதலைகளைத் தரைமட்டமாக்கிய வீரர்கள் !

ஊமைத்துரையின் மனம் சுரங்கமானது. எண்ணம் நிழற்படமாக ஓடியது.

சூறாவளியெனச் சுழன்று வந்த வீரன் ஊமைத்துரையைப் பிடித்துவிட்டோம் என்ற பூரிப்பில் ஆங்கிலேயர்கள் கூட்டம் மகிழ்ச்சிக் கரையில் உலாவிக்கொண்டிருந்தது.

அண்ணனை அருமைத் தமிழகத்திற்குக் காணிக்கை கொடுத்துவிட்டு, அறப்போரை நடத்திய ஊமைத்துரை, பரங்கியர்களின் பாதுகாப்பில், பாஞ்சாலங்குரிச்சியின் விடுதலையின் எண்ணமாகப் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்தான்.

ஆங்கிலேயரை எதிர்த்து, அண்ணனை இழந்து, அருமைத் தமிழகத்தைக் காப்பாற்ற வழியில்லாமல் சிறைவைக்கப்பட்டிருந்தான் சிங்கம் ஊமைத்துரை. அவனுடைய குறிக்கோளின் அஸ்திவாரத்தை ஆட்டிய ஆங்கிலேயக் கூட்டம் களைபிடுங்கிவிட்டோம் கழனியில் என்று களிப்புடன் கவனித்துக்கொண்டிருந்தது.

எந்த இடத்தில் கோட்டை கட்டி, அரண் அமைத்து, நாடாண்டானோ, அதே இடத்தில் வீரன் ஊமைத்துரை ஊமையாக்கப்பட்டிருந்தான், ஆக்கம் தேடவந்த இடத்தில் ஊக்கம்கொண்டு தம் பக்கத்தில் வெற்றியின் சுவையை விருந்தாக்கிக்கொண்ட ஆங்கிலேயர்களால்.

சிறையில், சிந்தனைப் பாதையில் வெகுதூரம் சென்ற ஊமைத்துரையின் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது வெளியேயிருந்து வந்த சங்கின் ஓசை !

விடுதலை ! விடுதலை ! விடுதலை !

ஊமைத்துரை சிறையின் சாளரத்தின் வழியாக வெளியே பார்த்தான். சங்கின் ஒலி விடுதலை, விடுதலை என்று சப்தமிடுவது போலிருந்தது. தெளிவு பெற்ற ஊமைத்துரை ஆவல் ததும்பும் முகத்துடன் ஒலி வந்த திக்கை நோக்கினான்.

காவடி எடுத்துச் செல்லும் அந்தக் கூட்டம் சிறையின் எதிரே வந்ததும் தனது ஒலியை அதிகமாக முழக்கியது.

உவகை நிரம்பிய மனதுடன் திரும்பிய ஊமைத்துரையின் செவிகளில் வந்து மோதிய வாசகங்கள் அவன் சிந்தனைக்கு உயிர் ஊட்டின.

" அநியாயமாயிருக்குதே முத்தப்பா! வைக்கோலும் புல்லும் இடைக்காமே மாடு கன்றுகளெல்லாம் சாவுது; இந்தப் பயல்

களைப் பாரேன்! கொஞ்சம் புல்லை வைச்சுக் கிட்டு கோட்டை விலையில்லே சொல்ருன்."

ஊமைத்துரை நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் சாளரத்தருகில்.

"ஆட்களைப் பார்த்தாலும் இந்தப் பிழைப்பைச் செஞ்சு பிழைக்கிறவங்க மாதிரியும் தெரியல்லே. கல்லுமாதிரி இருக்காங்க!...... என்னமோ தெரியலே.........காலம் கெட்டுக் கிடக்கு!"

ஊமைத்துரை விடுதலையின் கீதம் கேட்கத் தயாரானன். சோர்ந்து கிடந்த அவன் விடுதலை உணர்ச்சி அடிபட்ட புலிபோல் சீறிற்று.

அருணன் அஸ்தமித்ததை அறிவிப்பது போல, அரசாங்க அலுவலக மணி ஆறு அடித்து ஓய்ந்தது. கூட்டை நாடிச் செல்லும் பறவைகள் கூட்டம் கூட்டமாக வான வெளியில் பறந்து கொண்டிருந்தன. காலமெல்லாம் வானில் பவனிவந்த கதிரவனது களைப்பிற்கு விடுமுறை கொடுப்பதுபோல் இருள் தனது போர்வையை வீச ஆரம்பித்தது.

ஊமைத்துரை இரண்டு கைகளையும் கட்டிக்கொண்டு உலாவிக் கொண்டிருந்தான் சிறைக் கூடத்தில் "அண்ணு, அறுந்த பணியைத் தொடர இதோ புறப்படப் போகிறேன்" என்று அவன் மனம் மானஸீகமாக வீர பாண்டிய கட்ட பொம்முவிடம் கூறி மகிழ்ந்தது.

காவலிருந்த வெள்ளையர்கள் இருவரை நித்திராதேவி, உண்மை வீரனது உலகப் பணிக்குச் சிறைக் கதவு திறக்கட்டும் என்ற கருணையால்—அவர்களைத் தனது வசிகர சக்தியால் கவர்ந்தாள்.

தூரத்தில் நின்றிருந்த நாலைந்து போர் வீரர்கள் கையிலுள்ள துப்பாக்கியைப் பிடித்த வண்ணம் தூக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்தனர்.

ஆங்காங்கு நிற்கும் ஆங்கிலேயர்கள் சிறைக் கூடத்தின் மேன்மையைக் கண்காணிப்பது போல அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தனர்.

ஆந்தை ஒன்று நடுநிசியைக் கிழித்துக் கொண்டு அலறியது. சிறைக்கூடம் அதை ஏற்றுக்கொண்டதுபோல் நீண்டு ஒரு முறை ஒலித்தது.

டக்!

வேகமாக வந்த ஒரு கல் ஊமைத்துரையின் கால் பக்கத்தில் வந்து விழுந்தது. ஊமைத்துரை சிறைக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வெளியே பார்த்தான்.

நூற்றுக்கணக்கான தீப் பந்தங்கள் இரவைப் பகலாக்கின. காவல் காத்துக் கொண்டிருக்கும் பட்டாளத்திடையே கவண் கற்கள் சரமாரியாக வந்து விழுந்தன.

ஊமைத்துரை சிறையின் கிராதியைத் தனது இரும்புக் கைகளால் வளைத்தான். தூரத்தில் நின்ற காவல் வெள்ளையன் தனது கைத்தடியைக் கம்பியை வளைக்கும் ஊமைத்துரையின் கைகளை நோக்கி உயர்த்தினன்.

டக்!

கம்பை உயர்த்தியவன் கவிழ்ந்தான் மண்ணை. குருதியின் ஓடை பெருக்கெடுத்தது. 'ஹா' என்ற துயரத்தின் ஒலி அலறியது.

ஈட்டிகளும் வேல்களும் தீவட்டிகளின் முன்பு மின்னின. வெள்ளையனை வீழ்த்திய பாஞ்சால வீரன் சிறையின் கதவைத் தகர்த்தெறிந்தான்.

குருதி பாயும் ஓடைகளைத் தாண்டிக் கொண்டு பாஞ்சைப் படைகள் தங்கள் தலைவனை அழைத்துக்கொண்டு தூத்துக்குடி நோக்கி விரைந்தன.

பிணக் குவியலைப் பார்க்கவிரும்பாத இருள் தாய் தனது பிரயாணத்தை முடித்துக் கொண்டு கதிரவனை வரவேற்ருள்.

ஊமைத்துரையின் நெஞ்சு விம்மியது. அவன் கண்களில் தளும்பிய ஆனந்தக் கண்ணீர் கடமையைச் செய்த வீரர்களின் செயலுக்கு நன்றி கூறுவது போல முத்து முத்தாக உதிர்ந்தது.

ஆரவாரத்தின் ஒலியைக் கேட்டுத் திரும்பினன் ஊமைத்துரை. பாஞ்சைப் படைகளின் சப்தம் அந்த இடத்தை அலற அடித்தது.

ஊமைத்துரை கீழே இறங்கி ஒலி வந்த திக்குநோக்கி நடந்தான், வீரர்களின் மத்தியில் கந்தலுடுத்திய ஆடைகளுடன்—கலங்கும் கண்களுடன் ஒருவன் வந்து கொண்டிருந்தான்!

ஊமைத்துரையின் உள்ளம் துடித்தது.

வெள்ளையன்!

வாணிபஞ் செய்ய உரிமையளித்து, வாழ வழி வகுத்தளித்து, அதன் வரலாற்றை வளம் படுத்திய பாஞ்சாலங்குரிச்சியின் பண்பையே சிதறவடித்த பரங்கியனது இனத்தான்!

சுதந்திரமாகத் திரியும் கிளியை அதன் கூட்டிலிருந்து பிரித்துக் கூண்டிலடைத்து பரவசப்படும் பரங்கியன்!

நின்ற இடத்திலிருந்து பாய்ந்தான் ஊமைத்துரை. உணர்வற்று ஊசலாடிக் கொண்டிருந்த வெள்ளையன் ஊமைத்துரையின் இரும்புக் கரங்களால் தாக்குண்டு கீழே விழுந்தான். வீரர்கள் தங்களது ஈட்டி முனையால் அவனைத் தூக்கி நிறுத்தினர். அனல் கக்கும் தன் விழியைப் புனல் கக்கும் வெள்ளையனது விழிகள்மீது செலுத்தினன் பாஞ்சையின் பாதுகாவலன் ஊமைத்துரை.

பாதாளத்திலிருந்த செவ்விழிகளிரண்டும் கருணையே நோக்கி, கண்ணீரைச் சொரிந்துகொண்டிருந்தன. கிறல்விழுந்த அவனது உதடு துடிதுடித்தது. நடுங்கும் கரங்களை ஒன்ருகச் சேர்த்துக் குவித்தான்.

ஊமைத்துரை அவனது மார்பு அங்கியைப் பிடித்துக் குலுக்கினன். "அபயம்! மாநிலம் ஆளும் மன்னன் என மதியாது நாடு நாடாகக் கூட்டிச் சென்ருயே! ஊர் ஆள்பவன் என எண்ணுது ஊர், ஊராக நாடோடிபோல் நடத்திச் சென்ருயே! தஞ்சம் புகுந்த இடத்தில் வஞ்சக வலைவீசி மதிகெட்ட மன்னர்களைத் தாய்நாட்டின் பணிக்குத் துரோகியாக்கினீர்களே! வந்தவர்களை வாழ்வித்தோமே! ஊதியம் தேட வந்தவர்களுக்கு உறங்க இடம் கொடுத்தோமே! நன்றிகெட்ட நாய்களாக இன்று உங்கள் நாயகர்களையே கடிக்கிறீர்களே! அபயம்! அல்லலையே அடிப்படையாகக்கொண்ட உங்களுக்கு அபயம்!" ஊமைத்துரையின் மனம் பாம்புபோல் சீறியது.

வெள்ளையன் மன்னனின் காலடியில் விழுந்தான். ஊமைத்துரை அவனை உதறித்தள்ளிவிட்டு, பொங்கிவரும் கடலலைகளைக் குமுறிய நெஞ்சுடன் பார்த்தான். கரைசென்று திரும்பும் அலைகள் அவன் நினைவையும் பின்னேக்கி இழுத்தன.

* * *

"பேட்டி! வஞ்சக வலையில் மர்மமாக விழச் செய்யும் நிகழ்ச்சிக்குப் பேட்டி! வம்சத்திற்கே இழுக்கு வராமுடியாதென எழுதிவிடுவோம்"—ஊமைத்துரை சினத்தால் ஓங்கிநிற்கும் வீரபாண்டியனிடம் கூறிவிட்டு அவனைப் பார்த்தான்.

கையிலிருந்த கடிதத்தைக் கசக்கி எறிந்தான் கட்டபொம்மன். "கும்பெனியார்களைக் குலை தெறிக்க ஓடச்செய்து குவலயம் ஆளவேண்டியது நமது கடமை." கட்டபொம்மு சிறிது நிறுத்திப் பெருமூச்சுவிட்டான். மீண்டும் தொடர்ந்தான். "குருதிபாய விரும்புகின்றனர் கும்பெனியார். அதை மறவர் வீரம் மறுக்கிறது. ஆனல் போர் என்ருல் கார்மேகம்போலப் புறப்படவேண்டும். வீரத்தின் விளைச்சலை மேனிகாண தகுதியான நேரம் வாய்க்கப்போகிறது. சமரஸத்தில் செல்வோம். சண்டையை விலக்கிக்கொண்டு, உண்மைக்காகவும், உடைமைக்காவும், பாடுபடுவோம் உரிமையைக் கொள்வதற்காக. அமைதியை விரும்பாமல் அமருக்கழைத்தால் ஆண்மையுடன் போரிடுவோம்.

அதை ஆமோதிப்பதுபோல் வீரர்கள் கூட்டம் தங்களது மகிழ்ச்சியைக் காட்டியது.

திருநெல்வேலியில் பாண்டியன் படைகளைப் பார்க்கமுடியாதபடி திருகுதாளம் செய்தான் கலெக்டர் ஜாக்சன்.

குற்ருலம் போனுர்கள் படையுடன். அதற்குள் கம்பெனியான் சொக்கம்பட்டி போய்விட்டான்.

சிவகிரி, கம்பெனியின் காம்ப் ஸ்ரீவில்லிபுத்தூர்.

பேரையூர்...பாவாலி...பள்ளிமடை...கமுதி...?

தளர்ச்சியடையாத பாண்டியனது படை ராமநாதபுரம் சேர்ந்தது–பேட்டிகண்டு முடிவுகாண,

"கும்பெனியின் ஆட்சியிலே மன்னனுக்கு மதிப்புக்கிடையாது. எல்லோரும் சமம். நீ எங்கள் நாட்டின் பிரஜை. வரிகொடுக்க மறுக்கிருயே; மன்னன் என்று மார்தட்டுகிருய்!"—கலெக்டர் ஜாக்சன் கையிலிருந்த சிகரட்டைத் தூர எறிந்தவாறே பாண்டியனிடம் அலட்சியமாகக் கூறினுன்.

"குற்றம்?" — வெள்ளையத்தேவன் அலக்ஷியமாகக் கேட்டான் ஆருயிரம் மைல்களுக்கப்பாலிருந்துவந்த ஆங்கிலேயனிடம்.

"கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வரி செலுத்தாதது ஒரு குற்றம்! தூதராகவந்த ஆலரை அவமதித்தது இரண்டாவது குற்றம்! எங்களது ஆட்சிக்குட்பட்ட எட்டப்பருக்கு இணங்காதது மூன்ருவது குற்றம்! எங்களிடம் அனுமதி பெருமல் எங்கள் நாட்டில் வரி வசூலித்தது நான்காவது குற்றம்! இவ்வளவு குற்றங்களைச் செய்த நீ மன்னனு? உனக்கு மரியாதையா!"—ஜாக்சன் இதற்கிடையில் அலட்சியப் புன்னகை நெளிய அள்ளிவீசினுன் குற்றப்பட்டியலை.

"குற்றங்களின் அடுக்கு நன்ருக இருக்கிறது. நாற்பத்தேழு தலைமுறைகளாகச் சுதந்திரமாக வாழ்கின்ருேம். இனியும் வாழ்வோம். வியாபாரஞ் செய்ய அளித்திருக்கும் உரிமை ஒரு தானப்பசு. அதன் பல்லையே பிடித்துப் பார்க்க

துவங்கிவிட்டீர்கள். பரம்பரை பரம்பரையாக நாடாள்கிறோம் நாங்கள். வாணிபஞ் செய்ய வந்த உங்களுக்கு வரியா? சுதந்திரஜோதி சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பச்சைப் பசேலென்ற கிரைப் பாத்திகளின் நடுவே புல்லுருவிகள் முளைப்பதுபோல இந் நாட்டைக் கெடுக்க எங்கிருந்து முளைத்தீர்கள்?" கட்டபொம்மன் கனல் கக்கும் கண்களுடன் கலெக்டரை நெருங்கினான்.

"மரியாதை கெட்ட மடையர்களே! மயிலே மயிலே என்றால் இறகு போடுமா என்ன? உங்களை எல்லாம் உருத்தெரியாமல் ஆக்குகிறேன். ......குற்றம் செய்துவிட்டுக் கொக்கரிக்கிறாயோ?" —பற்களை நறநறவென்று கடித்தான் ஜாக்சன். அச்சத்திற்கு அடிமையான அவன் தற்காப்பிற்காக இடையிலிருந்த ரிவால்வாரைக் கையிலெடுத்தான்.

"குற்றம்!"—அண்டமே நடுங்கும்படி சிரித்தான் கட்டபொம்மன். எங்களது ஆட்சிக்குட்பட்ட நாட்டில் எங்களிடமே வரி கேட்டனர், எதிர்த்தோம் இது குற்றமா? தூதுவந்த தூர்த்தன் துடுக்குத்தனமாகப் பேசினான். எதிர்த்தோம் இது குற்றமா? மரபுக்கில்லா மாசைக் கற்பிக்க மனம் கொண்டது கம்பெனி; மறுத்தோம், இது குற்றமா? தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்காக—வீட்டினுள் நுழைந்து வேட்டையாடும் வீணர்களை–தான்தோன்றிகளை எதிர்த்தோம் இது குற்றமா? சுதந்திரமாகச் சுற்றித் திரியும் கிளியைக் கூண்டினுள் அடைக்க விரும்பியது கம்பெனி. கிளி சுயேச்சையை விரும்பியது. இதில் எது குற்றம்? நன்றிகெட்டு நாட்டை நசுக்க எண்ணுகிறதே கம்பெனி அதுதான் குற்றம். அன்ன மிட்ட வீட்டிலே கன்னமிடுகிறதே கம்பெனி, அதுதான் குற்றம்........."

"ஷட் அப்!.........கட்டபொம்மு......... கம்பெனியை அவமதித்துத் தாறுமாறாகப் பேசுகிறாய்! கலெக்டருக்குரிய மரியாதைகளைக் காற்றுவாக்கில் விட்டாய்......அதனால் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆணையாக உன்னை இப்பொழுது கைது செய்கிறேன்.......சோல்சர்ஸ்!......."—ஜாக்ஸன்.

அமைதியாக இருந்த இடம் அமர்க்களமானது அடுத்த கணத்தில். வீரம் தனது விளையாட்டை மறவர்களுடன் மனங்குலாவி வழிந்தோடியது.

வேலும் வாளும் துப்பாக்கியுடன் மோதின. கம்பெனியின் கிளார்க் சாய்ந்தான்.

கட்டபொம்மூவும் வெள்ளையத் தேவனும் ஆணவப் பேய்க்கு ஆங்கிலேயனைப் பலி கொடுத்துவிட்டுக் கோட்டையை விட்டுத் தப்பினர்.

* * *

ஓய்வில்லாமல் வீசும் கடலலைகளைக் கண்கொட்டாது பார்த்து நின்ற ஊமைத்துரையின் செவிகளில் வெள்ளையனின் வேதனைக் குரல் கேட்டது.

திரும்பினான்.

வெள்ளையன் கண்களின் கண்ணீர் வழிந்தோடியது. அத்துடன் அவனது அகன்ற நெற்றியிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

ஊமைத்துரை தன் பார்வையைக் கடலின்மீது செலுத்தினான்.

கட்டுமரம் ஒன்று அலைகளினிடையே மோதி, கரையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

ஊமைத்துரையின் மனம் கட்டுமரத்தின்மீது ஏறியது. இது மரமாக இருந்திருக்கும்பொழுது மலைமீது வரும் மேகங்கள் நீராகப் பொழியச் செய்யத் தன் குளிர்ந்த காற்றை வீசி உதவியிருக்கும். பின் அது மனிதனால் கட்டுமரமாக மாற்றப்பட்டுத் தண்ணீரில்—தன் தோழனின்மீது—மிதந்து மகிழ்கின்றது.

கப்பலில்லை கவலையற்று, கரையை நாடக் கட்டுமரம்! மரத்துண்டு. கடல் தான் பூமியை விழுங்குவதற்கு மரம்தான் காரணம் எனத் தெரிந்தும் தன் கடமையைச் செய்கிறது அதைக் கரையில் சேர்ப்பதற்கு.

ஒரு மரத்தைப் பழிவாங்கிவிட்டால் கடலின் செய்கை கரைந்துவிடுமா? கட்டுமரம்! வெள்ளையன்.

எண்ணற்றபேர்கள் இழைத்த அநீதிக்கு ஒருவனைப் பலிவாங்கிவிட்டால் சுமந்தபழி சுருண்டுவிடுமா?

காவிரிப்பூம்பட்டினத்தை விழுங்கிய கடல்கூட, தான் அப்படி நீராகப் படையெடுத்ததில் இந்த மரம்தானே காரணம் என எண்ணாமல் கரைசேர்க்கிறதே!

ஒருவன்! உழைக்க வந்தவன்! ஊதியம் தேட வந்தவன்! கடல் கடந்திருக்கும் மனைவியுடன் காதல் கீதம் பாடமுடியாமல். வாழ்க்கைக்கு வளம் தேட வந்த ஒருவன்!

ஒருவன்! தனிப்பட்டவன்!

இந்த ஒருவனைப்போல!...அந்த ஒருவன்—டேவிசன் துரைமட்டும் இருந்திராவிட்டால் அன்று தானாபதிப்பிள்ளை தப்பியிருப்பாரா?

ஊமைத்துரையின் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த கடந்தகால நிகழ்ச்சி கண்ணாடியாக மாறியது.

* * *

"நாங்கள் கும்பெனியை வெறுக்கவில்லை. அதன் குடிகாரப் போக்கையே வெறுக்கிறோம். வாணிபஞ் செய்ய உரிமையளிப்போம், எங்கள் வம்சத்தைத் தொலைக்க வழிகோல விடமாட்டோம்" என்று பரணி பாடிய பாண்டியன் படைத் தலைவர் தானாபதிப்பிள்ளை பரங்கியரது

மன்றத்தின் முன் கம்பெனியின் கைதியாக நின்று கொண்டிருந்தார்.

அதிகார போதையில் ஆழ்ந்திருந்த ஜாக்ஸன் குற்றக் கூண்டினருகே வந்து நின்றான்.

"பெயர் ?"

"பாளையத்தின் நிர்வாக அதிகாரி தானாபதிப் பிள்ளை"

"நீர் யாருக்காவது அடிமையா?"

"சுதந்திர நாட்டில் அடிமையே கிடையாது!"

"கேட்ட கேள்விக்குப் பதில்... நீர் அடிமையா இல்லையா ?"

"இல்லை"

"அரசருக்கு?"

"இல்லை. அவர் ஆணைக்கு!"

"சபாஷ்! அப்படியென்றால் அவர் கூறியபடி எல்லாம் நடப்பீர். ஏன் அப்படித்தானே ?"

"நிர்வாக அதிகாரி என்ற காரணத்தினால்!"

"நல்லது! இப்பொழுது நான் கூறுகிறேன், பாஞ்சாலங்குரிச்சியானுக்கு எங்களிடம் பகையை வளர்த்தது நீங்கள் என்று !"

"நாடோடிகளுக்கு நாவு நாலுவிதம் !"

ஜாக்ஸன் கோபமாக நீதிபதியின் பக்கம் திரும்பினான். தனது ரிப்போர்ட்டைக் கூற ஆரம்பித்தான் கடுமையாக.

"கடன் பாக்கியைக் கொடுக்க முடியாத காரணத்திற்காக இந்நாட்டில் வரி வசூலிக்கும் உரிமையை எங்களுக்கு அளித்திருக்கிறார் ஆற்காட்டு நவாப். ஆதலால் நாட்டில் வரி வசூலிக்கும் உரிமை எங்களுடையதாயிற்று. உரிமையுள்ள எங்கள் நாட்டில் இந்தப் பாஞ்சாலங்குரிச்சி மன்னன் எங்களிடம் அனுமதி பெறாமல் வரி வசூலிக்கத் தொடங்கினான். நாங்கள் அதை வெறுத்துத் தூது அனுப்பினோம். அவனை அடித்துக் கோபித்து விரட்டிவிட்டார். கடைசியில் இராம நாதபுரத்தில் சந்திக்க— பேட்டிகாண— வருகிறேன் என்று வந்தார் பெரும்படையுடன். சண்டை வேண்டாம், சமரஸத்தில் செல்வோம் என்றேன். உள்ளே வந்தார். மரியாதைகள் செலுத்தினேன். அப்படியிருந்தும் அலட்சியமாகப் பேசினார். அவர் செய்த குற்றங்களை அமைதியான முறையில் கூறினேன். கேள்விகளுக்குப் பதிலாக வாளை உருவினார். கூட வந்த வெள்ளையத்தேவன் கம்பைக் கழற்ற ஆரம்பித்தான். மறைத்து வைத்திருந்த இவர் படைகள் மள மள வென்று வரத் தொடங்கின. நமது படைகளை நிர்மூலமாக்கினார்கள். கம்பெனியின் காவலாளாகவிருந்த கிளார்க்கைக் கொன்றனர். நாட்டின் அமைதியை அழித்தனர். நியாயத்தை மறுத்தனர். கம்பெனியின் மதிப்பைக் குலைத்தனர். நமது படைக்குப் பெருத்த சேதம் விளைவித்தனர். இதுவே அவர்கள் மேலுள்ள குற்றங்கள். இக் குற்றங்களைச் செய்யக் காரணமாயிருந்தவர் தானாபதிப்பிள்ளை, அரசனின் ஆலோசகர். இவரது ஆலோசனையின் பேரில் தான் அவர் நம்முடன் வீம்பு கொண்டார். நீதியின் பெயரால் அவருக்குத் தண்டனை கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்"—நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைத்துடைத்துக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்தான் ஜாக்ஸன். நீதிபதியின் கட்டளைப்படி தானாபதிப் பிள்ளை கூறத் தொடங்கினார்.

"அடைக்கலம் வந்தவர்கள் ஆள உரிமை கேட்டால் வீட்டிலுள்ளவர்கள் வீணர்களாக இருப்பார்களா? ஆதலால் மறுத்தோம்! கடல் கடந்த மன்னரெல்லாம் திறைசெலுத்துவதை மறையென எண்ணிய மரபில் வந்த பாண்டியன் வயிறு வளர்க்க வந்த அன்னியனுக்கு வரி செலுத்த மறுத்தது தமிழ் மரபின் மானத்தைக் காக்கவேயாகும். நாட்டாலும் அன்னியன்! குலத்தாலும் அன்னியன்! பேசும் மொழியாலும் அன்னியன்! அப்படிப்பட்டவனுக்கு நாங்கள் பணிவதா? இதே எங்களது கொதிக்கும் உள்ளத்தில் எழும் கேள்வி. பேட்டிகாண அழைத்தார்கள். தட்டிக் கழிக்காது சென்றோம். நாடாள்வோரை நாடோடி போல் நடத்தினர். சமரஸம் பேசவந்த இடத்தில் கைது செய்யக் கட்டளையிட்டான். புலியிடம் மோதியது இந்தச் சிறிய எலி. பயன்?......அறிந்ததே.........ஆங்கிலேயக் கிளார்க்கைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அமர் முனையில் பகைவரைஅணுகும் பொழுதெல்லாம் வெற்றியையன்றி வேறொன்றையும் காணாத பாண்டியன், மண்ணாள நினைத்த வெள்ளையனை விண்ணுக்கிரையாக்கினார்? இதில் தவறென்ன? பயிரை அழிக்க வரும் வயலெலியை வா என்று அழைப்பார்களா? பாம்பின் படத்தைக் கண்டு மார்போடணைத்துக் கொள்வார்களா? துரைமார்களே, நீதியின் களத்திலே நீலித்தனம் செய்யும் நீசர்களுடன் போர் செய்கிறோம். தாயிடம் பால் குடிக்காதே என்று சட்டம் செய்கிறது கம்பெனி. இருக்க இடம் கொடுத்தால் இருப்பதெல்லாவற்றிற்குமே சொந்தம் கொண்டாடுகிறது............"

வெளியே ஓடிவரும் குதிரையின் குளம்பொலி மிகச் சமீபத்தில் கேட்டது.

"உமது அரசன் வேறு ஆள் வலியின்றி தம் தோள்வலி ஒன்றாலேதான் அன்று அப்படையை வென்றாரா?"—நீதிபதி தானாபதியினிடம் திரும்பினார்.

"சுருட்டுவாள் மட்டும்தான் அவரிடம் இருந்தது!"

"பிடிவாளால் அவ்வளவு படைகளை வெல்ல முடியுமா?"

"நீதிபதியவர்களே, அரசன் தம் கைவாளைப் பார்த்தால் காலன் எதிரியின் வாழ்நாளைப் பார்ப்பான்."

குதிரையில் வந்தவீரன் கையிலிருந்த கடிதத்தை நீதிபதியிடம் கொடுத்துவிட்டு, தானாபதிப்பிள்ளையைப்பார்த்துச் சிரித்தான்.

நீதிபதியின் முகத்தில் தோன்றும் வினாக்குறிகளைக் கண்டு அஞ்சிய ஜாக்ஸன் "யாராவது பொய்க்கடிதம் எழுதியிருப்பார்கள். நீதிநிலவ ஆலோசனை தேவை!" என்றான் புருவத்தை நெரித்தபடி.

"ஜாக்சன், அன்னியன் எழுதவில்லை இந்தக் கடிதத்தை! உம்முடைய ஆள்-உம்முடைய குலம்-உம்முடைய வர்க்கத்தைச்சேர்ந்த டேவிசன் துரை எழுதியிருக்கிறார், படிக்கிறேன் கேளுங்கள்"—நீதிபதி கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

கனம் நீதிபதியவர்களே,

பரம்பரையாக இத்தென்னாடில் சிறப்புடன் தனி அரசு புரிந்துவரும் இனியமரபில் உள்ளவர் பாஞ்சாலங்குரிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன். வஞ்சனையும் சூதும் இல்லாதவர். வையகம் போற்றும் பண்பினர். அவரைநயமாக அழைத்துத் தமக்குத் துணை செய்துகொள்ளாமல் நமது ஜாக்ஸன் அவர்மேல் கோபங்கொண்டு மறவர் குலத்தையே தமது வைரியாக்கிக்கொண்டார். நன்றாக அரண் கொள்ளுமுன் முரண்கொண்டார் ஜாக்ஸன்! பாளையக்காரருள் தலைமையாயுள்ள அக்குலவீரரை இவ்வேளையில் நாம் இதமாய் வணங்கித் துணையாகக் கொண்டால் நம் ஆட்சி மிக மாட்சிமை அடையும். அதற்கில்லாது அமருக்கழைத்தால் அடிபணிய நேரிட ஆயிரமாயிரம் ஜாக்ஸன் நம்மிடம் உண்டு. உண்மையை அறிந்து நிர்வாக அதிகாரிக்கு நீதி வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நண்பன்
டேவிஸன்.

நீதிபதி தம் இடத்தைவிட்டு எழுந்தார் "ஜாக்ஸன், இப்பொழுது என்ன சொல்கிறீர்? குற்றமற்ற இவரைக் குற்றக்கூண்டில் ஏற்றினீர்களே?......... தானாபதிப் பிள்ளை......உம்மை விடுதலை செய்கிறேன்......நீங்கள் சுதந்திரமாக உங்கள் நாடு போகலாம்"—நீதிபதி அறையைவிட்டு வெளியே நடந்தார்.

வெளியே சென்றுகொண்டிருந்த தானாபதிப் பிள்ளையைப் பார்த்துப் பற்களைக் கடித்தான் ஜாக்சன்.

* * *

டேவிசன்! ஒருவர்!

அவர் அன்று கடிதம் எழுதியிராவிட்டால் தானாபதி தப்பியிருக்க முடியுமா? அவர் நினைத்திருந்தால் பிள்ளையைத் தூக்கு மேடைக்கு அனுப்பியிருக்கலாம்?

ஊமைத்துரை பாய்ந்து ஓடினான். சுருண்டு கிடக்கும் வெள்ளையனை இரு கைகளாலும் வாரியெடுத்துக் கட்டிக்கொண்டான் தமிழ் நாட்டின் சிங்கம்.

ஊமைத்துரையின் கருணை நிரம்பிய கண்களின் கண்ணீர் பெருகியது. பேசமுடியாமல் வெள்ளையன் இரத்தம் கசியும் நெற்றியை மெதுவாகத் துடைத்தான்.

கடற்கரையில் வந்து நின்ற அவர்கள்மீது கடற்காற்று வீசியது. ஊமைத்துரை வெள்ளையனைப் படகிலேற்றினான். தனது ஆள்காட்டி விரலை உயர்த்தி, கடலின் நடுவே யிருக்கும் தீவைச் சுட்டிக் காட்டினான்.

வெள்ளையன் அந்தப் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான்.

பாஞ்சாலங்குரிச்சிப் படைகளுக்குப் பயந்து பரங்கியர்கள் கடலின் நடுவே யிருக்கும் தீவு,

படகு தீவு நோக்கிப் புறப்பட்டது. வெள்ளையனது ஒளி இழந்த கண்களில் நன்றி பிரதிபலித்தது.

"இரக்கம் எனது நிழல்"—ஊமைத்துரையின் உள்ளம் பன்முறை கூறியது.

அதை ஆமோதிப்பதுபோல் படகு அலைகளின் மீது மேலும் கீழும் அசைந்தபடி தீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. ●

கோல்முரியில்

காவேரி விற்பனைசெய்ய

V. P. சாரதி - 7 ஜம்னுரோடு

199328

எது இன்பம்

DEVAN

வே. ரங்கராஜன்

அத்: 50. காப்பி மகாத்மியம்

தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மறுபடியும் மாடியறைக்கு வந்தபொழுது சரசு இன்னும் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள், லீலா. மாடிக்கு வரும்பொழுது பங்களா ஹாலில் சற்றுமுன்தான் மணி எட்டு அடித்து, பத்து நிமிஷம் கழிந்திருப்பதைப் பார்த்துவிட்டு வந்தாள். சரசு உறங்கிய நிலையில் அவளை எழுப்ப மனம் வரவில்லை.

மாடிக் கைப்பிடிச் சுவர் அருகில் சென்றாள், காலை இளம் காற்று ஹிதமாகத் தவழ்ந்து வந்தது. காலை ஸ்நானத்தின் பிறகு அள்ளிச் செருகியிருந்த தன் கூந்தலை இலேசாக அவிழ்த்துவிட்டு உலர்த்தினாள், லீலா.

அப்பொழுது மாடிப்படிகளில் காலடிச் சப்தம் கேட்டது, திரும்பிப் பார்த்தாள். இரண்டு டம்ளர்களில் காப்பி எடுத்துக்கொண்டு சாமா வந்தான். நேரே சரசுவின் படிக்கும் அறையுள் நுழைந்து அவைகளை மேஜைமேல் 'நக்' கென்று வைத்துவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காமல் போய்விட்டான். காப்பி ஆவி எழுந்துகொண்டிருந்தது; 'கம்' மென மணம் வீசியது. நல்ல காப்பி பௌடரில் கவனத்துடன் கலக்கப்பட்ட காப்பி என்பதை அதன் மணம் சொல்லாமல் சொல்லியது. 'காப்பி ஆறிவிட்டால்!............சரசுவை எழுப்பலாம்!' என்று எண்ணிக்கொண்டு படுக்கையறைக்குச் சென்றாள் லீலா.

அப்பொழுது சரசுவும் எழுந்து வெளியே வந்துகொண்டிருந்தாள். காலையில் குளித்து முழுகி, குங்குமம் வைத்த முகத்துடன் லீலா எதிரே வருவதைக் கண்ட சரசு, "இன்று எனக்கு எதிர்பாராத சந்தோஷங்கள் உண்டாகப்போகின்றன. இன்று முழுதுமே நான் குதூகலத்தில் மூழ்கியிருப்பேன்! லக்ஷ்மிகளை வீசும் உன் முகத்தில் விழித்த எனக்கு, திடீரென. அம்மா தன் கனவுகளில் காண்பதைப்போல், பம்பாய் வீக்லி பகுத்தறிவுப் போட்டியில் முதல் பரிசுத் தந்தி கிடைத்தால்கூட நான் ஆச்சர்யப்படமாட்டேன்!" என்று சொல்லி லீலாவின் கைகளைப் பிடித்துக்கொண்டாள், சரசு.

இதையெல்லாம் சரசு உபசாரமாகச் சொல்லவில்லை. காலையில் அவள் மனம் அதிக சந்தோஷத்தில் மூழ்கியிருந்தது. இரவெல்லாம் என்ன இன்பக்கனவுகள் கண்டாளோ! காலையில் எழுந்தவுடன் பாடிப் பறந்து செல்லும் வானம்பாடியைப்போல் சிரித்துக்கொண்டு பேசினாள்; மனம் களங்கமற்று இருந்தது.

"என்ன சரசு! ஏளனம் செய்கிருயா என்ன? துர்ப்பாக்கியம் செய்த என் முகத்தில் விழித்ததால் ஏதேனும் கெடுதல் சம்பவிக்காது இருக்க வேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்! எது எப்படிப்போனாலும் முதலில் காப்பியைச் சாப்பிடு; ஆறிவிடப் போகிறது!" என்றாள் லீலா.

"கடிகாரம் சற்று தாமதமாகப் போனாலும் போகும், நம் சாமா நேரம் தவறமாட்டான்! ரொம்ப 'கரெக்ட்' டான பேர்வழி!" என்று சொல்லிச் சிரித்தாள், சரசு. லீலா புன்முறுவல் செய்தாள்.

இருவரும் சரசுவின் அறையுள் நுழைந்து நாற்காலிகளில் உட்கார்ந்தனர். சரசு காப்பியைச் சுவைத்து ஒவ்வொரு மொணராக உறிஞ்சிக் குடித்தாள். இடையிலே காப்பி டம்ளரை மேஜை மேல் வைத்து, "லீலா! இந்த அருமையான பானத்தைக் கண்டுபிடித்தவன் பெரிய விஞ்ஞானி என்றுகூடச் சொல்லலாம்!"

சரசு மேலும் பேசிக்கொண்டே போயிருப்பாள். ஆனால் சாமா அங்கு வந்து நின்றான்.

"அப்பா இன்னும் எழுந்திருக்கவில்லை. காப்பி ஆறிப்போகிறது. எழுப்பிவிடுகிறீர்களா?" என்று சொன்னான்.

"இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே காப்பியை அவசரத்துடன் குடிக்கத் தொடங்கினாள், சரசு.

சாமா விநயத்துடன் நின்றான். அவனை ஏற இறங்கப் பார்த்தாள், லீலா. அவன் நீண்ட நாட்களாகச் சரசுவின் வீட்டில் நிலைத்து இருக்கிறான். ஸ்ரீமதி சபேசன் மனோபாவத்தைக்கூட அவன் அனுயாசமாக ஏற்றுப் பணிந்து பழகிக்கொண்டிருக்கிறான். ராஜபார்ட் போட்டுக்கொள்பவன் போல் தலைமயிர் கழுத்து வரையில் தொங்கி, தோள்களின்மீது புரண்டுகொண்டிருந்தது. கன்னங்கறுத்த அவன் மேனியில் இளமை மறைந்துவிட்டது. வெற்றிலைக் காவியேறிய உதடுகள் தடித்துக் கறுத்திருந்தன. புகையிலை அடக்கி வைத்திருக்கும் பழக்கத்தாலோ என்னவோ வலது கன்னம் நீர்க் குமிழியைப்போன்று சற்றுப் பருத்து இருந்தது. வெள்ளை வெளுக்க உடை உடுத்தியிருந்தான், தோள் மீது போட்டிருந்த கைப்பிடி துணிதான் கரியும் அழுக்குமாக இருந்தது.



அவனைப் பார்ப்பவர்கள் நாற்பது வயது இருக்கும் என்று மதிப்பிடுவார்கள், ஆனால் வயது இருபத்தைந்துதான் ஆகிறது. முகத்தில் படிந்திருக்கும் பாப நிழல்களுக்குச் சாமா தன்னைக் குறைகூறிக்கொள்வதில்லை. 'எங்கள் தொழிலே அப்படித்தான். இந்த இன்பங்கூட இல்லாவிட்டால் இந்தத் தொழிலிலே இருக்க முடியுமா? மிக்க கேவலம்! கரண்டியாபீஸ் உத்தியோகம்!' என்று அலுத்துக்கொள்வான்!

சாமாவை மட்டும் தனித்து மதிப்பதற்கில்லை. பொதுவாகச் சமையல் தொழிலில் ஈடுபட்டவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் ஐம்புலவின்பங்களில் தாராளமாக இறங்கி விடுகிறார்கள். இவர்கள் வாழ்வும் வாழ்வுக் கொள்கைகளும் தனியானவை. நாகரிகம் வளர்ந்துள்ள பெரும் நகரங்களில் மனைவிக்கு அடுத்த ஸ்தானத்தில் இவர்கள் இருக்கிறார்கள். சமையல்காரன் சரியாக அமையாத குடும்பத்தில்

சந்தோஷம் இருக்காது என்றே சொல்லிவிடலாம்!

காப்பி முழுவதையும் லீலா குடித்துவிட்டு வைத்ததும் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு சாமா போகக் கிளம்பினன்.

"இதோ இந்தப் புத்தகத்தை படித்துக்கொண்டிரு, லீலா. ரொம்ப நன்ருக இருக்கிறது!" என்று சொல்லி, மேஜையுள்ளிருந்து ஒரு புத்தகத்தை மேலே எடுத்து வைத்துவிட்டுச் சாமாவைப் பின்தொடர்ந்தாள், சரசு.

'பசியும் அமைதியும்' என மகுடமிட்டிருந்த அந்த ஆங்கிலப் புத்தகத்தில் என்ன சொல்லியிருக்கக்கூடும்? முதல் அத்தியாயத்தைப் படித்தாள், லீலா. அதில் வர்ணித்திருந்த பசி அவள் எதிர்பார்த்த பசியாக இல்லை. 'காதல், கண்டதும் காதல், காணுமலே காதல்!' எனப் பிதற்றிக்கொண்டு, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் விடர்கள் அடையும் பசி! அதை எப்படி நிவர்த்தித்துக்கொண்டு மன அமைதி அடைவது என்பதற்கான வழிகள் அப்புத்தகத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தன!

"நல்ல பெண்!" என முணுமுணுத்துக்கொண்டு சிரித்தாள். இதைப்போல் மற்றவர்களின் காரியங்களும் லீலாவின் நினைவிற்கு வந்தன.

நாள் முழுவதும் உழைத்து, நெற்றியில் துளிர்க்கும் வியர்வை நிலத்தில் விழும்படி பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தைக் கொண்டுபோய், அறிவைக் குலைத்து ஆண்மையை அழிக்கும் கள்ளில் செலவிடுகிருன் ஏழைத் தொழிலாளி.

பூசாரம் பூத்துக் கிடக்கும் பணத்தை எப்படிச் செலவு செய்வது என்று தெரியாமல், மிதமிஞ்சிய உணவும் போகங்களுமாக அனுபவித்து, எண்ணற்ற புத்தம் புது வியாதிகளைச் சிருஷ்டித்துக்கொண்டு தினம் மருந்தும் ஊசியுமாக அலைகிறது ஒரு கூட்டம்.

இதற்கு இடையே உள்ள மத்தியதரக் கூட்டம் ஒன்று. கிடைப்பதை வைத்துக்கொண்டு செட்டும் சீருமாகக் குடித்தனம் செய்தால் மன நிறைவுடன் வாழலாம். ஆனல் பணக்காரர்களின் டாம்பீக வாழ்வைக் காப்பியடிக்க விரும்புகிறது இக்கூட்டம். எவ்வளவு சம்பாதித்தும் திருப்தியில்லை, பணம் மேலும்மேலும் வரவர வாழ்க்கைத்தேவைகள் பல்கிக்கொண்டு போகின்றன. வரவுக்குள் தேவைகளைச் சுருக்குவதா? தேவைகளுக்குத் தக்கபடி வரவை விரித்து நிறைப்பதா? என்ற பெரும் பொருளாதாரப் பிரச்னை! எப்போதும் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் இடையே தத்தளிக்கும் ஒரு அமைதியற்ற நிலை! பசிக்கும் 'புளியேப்ப'த்திற்கும் இடையே உள்ளே பயங்கர முள்முனை!

புத்தகத்தை மேஜையின் ஒரு மூலையில் வீசியெறிந்தாள், லீலா. தன் மனக் கசப்பை வெளியே காட்டிக்கொள்ள வேறு ஒன்றும் மார்க்கமில்லை. தொண்டையின் அடிப்பாகத்தில் கசந்த காப்பியைப்போல் அவள் மனமும், மனிதர்கள் செய்யும் விஷப் பரீக்ஷைகளால் விளையும் கேடுகளில் நிலைத்தது.

தன் தந்தை, சிவஞானம் அவர்கள், சேகரித்து வைத்திருந்த புத்தகங்களை எப்போதாவது ஒழிந்த நேரங்களில் புரட்டியதால் லீலாவின் மனநிலையே மாறிவிட்டது, ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்களையும் தெய்வ நெறிக் கழகத்து வெளியீடுகளையும் படித்துவிட்டு வாழ்வில் 'தோல்வி'யடைந்து மனமுடைந்து இறந்து போய்விட்டார். அந்தப் புத்தகங்களைக் கொஞ்ச நஞ்சம் படித்ததின் விளைவாகத்தானே என்னவோ லீலாவுக்கும் நடைமுறை உலகு கசந்தது. அறிவுடன் வாதம் செய்து உண்மையைக் காண எண்ணும்போது, வாழ்வு வெறும் கண்கட்டு விளையாட்டாகப் பட்டது அவளுக்கு. இது நல்லது, இது தீது, இது இனியது, இது உயர்வானது எனக் கண்ணலே கண்டும்; கேட்டதையும் இனியதையுமே நாடி அலைந்துகொண்டிருப்பது கண்களை மூடிக்கொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு ஒப்பாகத் தான் பட்டது அவளுக்கு.

சுகாஸனத்தில் சாய்ந்துகொண்டு சாலேகத்தினூடே தெரிந்த வானவெளியைப் பார்த்துக்கொண்டு தன் எதிர்கால வாழ்வைப் பற்றிய சிந்தனையில் மூழ்கிவிட்டாள், லீலா.

அத்: 51. வேதனை

"சரசு! வேதனை என்றல் பொறுக்கமுடியவில்லை. இதை இரண்டில் ஒன்று முடித்துவிடவேண்டும். நான் நேரே டாக்டர் வீட்டுக்குப் போய் அவரை 'கன்ஸல்ட்' பண்ணிவிட்டு வந்துவிடுகிறேன்!" என்று சொன்ஞர், சபேசன், காப்பியைக் குடித்த பிறகு.

"ஆமாம் அப்பா, அதுதான் நல்லது. இதை நான் எப்போதோ சொன்னேன். நீங்கள் தான் பயப்பட்டீர்கள். இது என்ன பிரமாதம்! 'பைல்ஸ்' ஆப்பரேஷன் 'ஸர்ஜரி'யிலே ஒரு 'மைனர்' கேஸ். எத்தனை 'மேஜர்' ஆப்பரேஷன்களை மிகச் சுலபமாகச் செய்து சுகப்படுத்திவிடுகிருர்கள் தெரியுமா?

"என் சினேகிதி தெரெஸ்ஸாவின் அப்பாவை உங்களுக்குத் தெரியாது. அவருக்குக் 'கிட்னி' வியாதியாம். ஆப்பரேஷன் செய்து பார்த்ததில் கிட்னியில் ஏதோ பூச்சிகள் கூடுகட்டி அரித்துவிட்டிருந்தனவாம். அதை அப்படியே அப்புறப்படுத்திவிட்டு வேறு 'கிட்னி' வைத்துவிட்டார்களாம்! இப்போது அவர் சௌகர்யமாக இருக்கிருராம். ஏனப்பா! ஸர்ஜரியிலே 'க்ரேப்டிங்'ன்னு ஒண்ணு இருக்காமே! செடிகளை ஒட்டுப் போடுவதைப்போல் சதையை எடுத்து வைத்து ஒட்டுப் போட்டுவிடுகிருர்களாமே! எனக்கென்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி	ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

னவோ அதெல்லாம் விசித்திரமாகத்தான் படுகிறது!.........''

விடாமல் பேசிக்கொண்டு போன சரசு தன் தந்தையின் மனதில் என்ன எண்ணங்கள் எழுகின்றன என நிதானிக்கவில்லை. தான் ஓரிரு மாதங்கள் இல்லாவிட்டால் உத்தியோக வட்டாரத்திலே ஏற்படும் மாறுதல்களையும், நஷ்டங்களையும், அத்துடன் புதுப் பங்களாவிற்கு வந்த பொழுது வாங்கிய கடன் பாபத்துக்களையும் அவர் மனம் எண்ணிக்கொண்டிருந்தது.

காப்பியைக் குடித்துவிட்டு டம்ளரை கட்டில் காலின்மீது வைத்தார், அது சற்றுத்தவறி கீழே விழுந்து கணீரென்ற ஓசை கிளப்பியது. அந்தப் புது வெள்ளி டம்ளரின் வாய்ப்புறம் நெளிந்து விட்டது. அது சபேசனின் மனதிலே ஒரு எண்ணத்தை எழுப்பியது.

'எல்லாம் ஒழுங்குடன் சற்றும் சமநிலை பிசகாமல் நடந்தால் சரிதான். சற்றே தவறினாலும் பலாபலன் விபரீதமாகத்தானே போய்விடுகிறது. ஆப்பரேஷன் செய்து வைப்பதில்கூட டாக்டர்கள் எத்தனை தவறுகள் செய்கிறார்கள்! அதன் பலாபலன்களை அனுபவிப்பவர்கள் பிறர் ஆனதால் அவர்கள் அதைப்பற்றி அதிகக் கவலைப்படுவதில்லை போலும்!'

ரணச்சிகிச்சை செய்துகொள்வதற்குச் சபேசன் அவர்களுக்கு முழு மனமும் இல்லாததால் அதன் குறைகளைப்பற்றியே பேசினார். இந்த டாக்டர்களை நம்பி இறங்குவதற்கு இல்லையே அம்மா! நோய் குணமாவதற்குள் நாம் சித்திரவதைக்கல்லவா ஆளாகவேண்டியிருக்கிறது! அதைக் காட்டிலும் நோயின் உபத்திரவத்தையே தாங்கிக் கொண்டு இருந்துவிடலாமே! ஏதோ மாதம் ஓர் முறை அல்லது இருமாதங்களுக்கோர் முறை தானே இப்படித் தாளமுடியாத தொந்தரவு வந்து விடுகிறது.'' என, தம் மனதில் எழுந்த பலஹீனமான எண்ணத்தை வெளியே சொன்னார், சபேசன்.

''இல்லையப்பா, உடலில் வியாதி இருந்தால் மனதில் அமைதி இருக்காது. அதைத் தொலைத்து விட்டுத்தான் மறுகாரியம் பார்க்கவேண்டும். நீங்கள் டாக்டரைப்போய்ப் பார்த்துச் சோதனை செய்துகொண்டு அவர் சொல்வதைப்போல் செய்யுங்கள். இரண்டு வாரங்களில் ஆப்பரேஷன் குணமாகிவிடும். பிறகு நோயின் உபத்திரவமே இருக்காது!'' எனச் சபேசனுக்கு தைரியமூட்டினாள், சரசு.

''உம்!...... பார்ப்போம்...'' என 'மென்று விழுங்கிவிட்டு' ஸ்நான அறைக்குச் சென்றார், சபேசன்.

* * *

குடும்ப விவகாரத்திலே ஒரு முக்கியமான காரியம் செய்துவிட்ட எண்ணம் உண்டாயிற்று சரசுவுக்கு. அப்பாவுக்கும் தைரியம் சொல்லக்கூடிய தன் மனோ நிலையை வியந்து கொண்டாள். அம்மா இல்லாத குறை தெரியாமல் அப்பாவுக்கு வேண்டியவைகளைச் செய்வதில் அவளுக்குத் திருப்தி இருந்தது.

அப்பாவின் ஆபீஸ் அறைக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த பிறகுதான், இரவு நீண்ட நேரம் கண்விழித்திருந்ததினால் முகம் வெளுத்துச் சுருங்கியிருந்தது தெரிந்தது அவளுக்கு. புத்தகத்தை மூடிவைத்துவிட்டுக் கண்ணயரும்போது மணி இரண்டல்லவோ ஆயிற்று!

முகத்திலே உண்டாகியிருந்த மாற்றத்தைப் போக்க ஸ்நானம் செய்துவிட்டு, 'பாண்ட்ஸ்க்ரீம்' போட்டுக்கொள்ள வேண்டும் என நினைத்தாள்.

அத்: 52. வாழ்வின் நடனம்

ஸ்நானம் செய்து உடுத்து வெளியே வந்த சரசு தோட்டக்காரன் வரவை எதிர்பார்த்து நின்றாள். காலையில் தபாலாபீசுக்குச் சென்று கடிதங்கள் வாங்கிவருவது அவன் வேலைகளில் ஒன்று. பர பரப்புடன் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள், சரசு. மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பங்களா 'போர்ட்டிகோ'வைக் கடந்துபோய், கேட்டின் முன் நின்று பார்த்தாள். கையில் நான்கைந்து கடிதங்களுடன் தோட்டக்காரன் சற்றுத் தூரத்தில் ஆடி அசைந்து நடந்து வந்துகொண்டிருந்தான்.

'இவன் தாமஸத்திற்கும் அம்மா வாய்க்கும்தான் சரி! வேலைக்காரர்கள் தன்னிச்சையாக—சுறு சுறுப்பாக—வேலை செய்தாலல்லவோ சந்தோஷமாக இருக்கும். மாட்டுக்குத் தார் போடுவது போல் எப்போதும் யாராவது நொட்டுச்சொல் சொல்லி இடித்துக் கொண்டே இருந்தால்தான் இவர்கள் சரியாக வேலை செய்கிறார்கள். இவர்களை வேலை வாங்க அம்மாவைப் போன்றவர்கள் அவசியந்தான்! என்று நினைத்தாள், சரசு.

தெருவில் சைக்கில்கள் கனவேகத்தில் சென்றன. ட்ராம்கள், பஸ்கள், கார்கள், லாரிகள் எல்லாம் அதிவேகத்தில் இப்படியும் அப்படியும் 'பறந்து' கொண்டிருந்தன! நடந்து செல்பவர்களும் இறக்கை கட்டிக்கொண்டு பறந்து செல்பவர்களைப்போல் அந்தரத்தில் நடந்தார்கள்! அவ்வளவு வேகமும் அவசரமும்! இதற்கு நேர்மாறாக, சாவதானமாக நடந்து வந்துகொண்டிருந்தான் 'தோட்டக்காரன். சரசுவுக்குக் கோபம் வராமல் இருக்குமா?

அவன் பங்களாவை நெருங்கியவுடன், ''ஏண்டா முனிசாமி! ரோட்டு எத்தனை ஜாதியடி நீளம் இருக்கிறது என்று அளந்துகொண்டு வருகிறாயா! வீட்டுக்குப் போகும்போது நடக்கிறாயே அவசர நடை, அந்த நடை வேலை செய்யும்போது வராதோ!'' என்று சிடுசிடுத்தாள்.

''இல்லேம்மா...... உடம்பு ஒண்ணும் சரியாயில்லிங்க...... வந்து......'' என்று சொல்லிக்

கொண்டு கையிலிருந்த கடிதங்களைக் கொடுத்தான், அவன்.

மேல் விலாசங்களைப் பார்த்த சரசு முதல்முதலாகத் தன் அண்ணாவின் கைப்பட விலாசமிட்டிருந்த கடிதத்தை எடுத்தாள். படிக்கும் பொழுதே அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. மற்றொரு கடிதம் மயிலை கான ரஞ்சன சபாவின் காரியதரிசியிடமிருந்து வந்திருந்தது. அன்று இரவு நடக்கவிருக்கும் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு அழைப்பும் இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகளும் இருந்தன. மூன்றாவது கடிதம் சரசுவின் சிநேகிதி ஒருத்தியிடமிருந்து; நான்காவது கடிதம் ஸ்ரீரங்கத்தில் சுகவாசம் செய்யும் ஸ்ரீமதி சபேசனிடமிருந்து வந்திருந்தது.

சென்ற பதினைந்து நாட்களாக மண்டையிடியே இல்லை என்றும் எப்போதும் வராமல் இருக்க ஆயுர்வேத பூஷணம் நாகசேஷ சர்மாவிடம் சிகிச்சை செய்துகொண்டு வருவதாகவும் எழுதியிருந்தாள். குடும்ப நிலவரங்களைப்பற்றி விசாரித்துவிட்டு, கடைசியாக, ‘சேம்பர்ஸ்—டிக்ஷனரி’ அங்கே கிடைக்கவில்லை என்றும், பம்பாய் பகுத்தறிவுப் போட்டிக் கூப்பன்கள் போடுவதற்குக் கஷ்டமாயிருக்கிறதென்றும், வீட்டில் உள்ளதை உடனே ரயில்வே பார்ஸலில் அனுப்பும்படியும் எழுதியிருந்தாள்!

இதைப் படித்துவிட்டு உதட்டைப் பிதுக்கினாள், சரசு. போன மண்டையிடியோடு இந்தப் பித்தமும் போகவில்லையே! தினம் தவறாமல் காலையில் காவேரியில் ஸ்நானம் செய்து வந்தால் இது போகலாமோ என்னவோ! என நினைத்தாள் சரசு.

பிறகு அண்ணாவின் கடிதத்தை எடுத்து மற்றக் கடிதங்களின்மேல் வைத்துக்கொண்டு அப்பாவின் அறைக்குச் சென்றாள்.

சபேசன் உடை உடுத்துக்கொண்டு டாக்டர் வீட்டுக்குப் போகத் தயாராகிக்கொண்டிருந்தார்.

"அப்பா! அண்ணா நாளன்றைக்கு வருகிறானாம்! பரீக்ஷை நடந்த பிறகு செய்த சுற்றுப்பிரயாணத்தின்போது கல்கத்தாவில் நந்தலால் என்ற சித்திரக்காரர் அவனுக்கு நண்பரானாராம். அவரும் சென்னைக்கு வருகிறாராம். சென்னை ‘ரிஷிவன் ஸ்டுடியோ’வில் ஆர்ட் டைரெக்டராக வேலை பார்க்கப் போகிறாராம். தங்கியிருக்க வேறு வசதி கிடைக்கும்வரை நம் பங்களாவிலேயே வசிப்பாராம்! வேண்டிய சௌகர்யங்களைச் செய்து வைக்கும்படி அண்ணா கேட்டுக்கொண்டிருக்கிறான்! – கடிதங்கள் இதோ இருக்கின்றன, பாருங்கள்!" என்று கடிதங்களைக் கொடுத்தாள், தன் சிநேகிதியிடமிருந்து வந்த கடிதத்தை மட்டும் தன்னிடமே வைத்துக்கொண்டு.

தன் மகன் வரவு அவ்வளவாக அவர் முகத்தில் சலனத்தை உண்டாக்கவில்லை. ‘அவனுடன் வரும் நந்தலால் எப்படி இருப்பானோ! எவ்வளவு நாள் இங்கே தங்குவானோ! என்ன செலவுகள் நடக்குமோ!—தன்னைக் கவர்னரின் மகன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறான். பையன்!’ என நினைத்தாரோ!

கான ரஞ்சன சபைக் காரியதரிசியின் கடிதத்தையும் டிக்கட்டுகளையும் சரசுவிடம் கொடுத்து, "நீ வேண்டுமானால் லீலாவை அழைத்துக்கொண்டு போய்விட்டு வா, சரசு! நான் இன்று எங்கும் போவதற்கு விரும்பவில்லை!" என்று சொன்னார்.

பிறகு தம் மனைவியின் கடிதத்தைப் படித்ததும் அவர் மனசில் விருப்பும் வெறுப்பும் குழம்பிய ஒரு பாவம் உண்டாகியது. சரசுவைப் பார்த்து, "அந்த அகராதியை அனுப்பிவிடு சரசு! இல்லாவிட்டால் அவள் தலைவலி திரும்பி வந்தாலும் வந்துவிடும்! அவளுக்கு வராமற்போனாலும் நம்மைச் சும்மா விடமாட்டாள். இங்கு வந்ததும் வராததுமாக வாயைத் திறந்துவிடுவாள்!" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார், சபேசன். காரின் மோட்டார் சப்தம் அவரைத் தொடர்ந்து சென்று மறைந்தது.

அண்ணா வருகிறான் என்பது ஒரு சந்தோஷச் செய்தி. அத்துடன் அன்று பரதநாட்டிய அரங்கேற்றத்திற்குப் போக அழைப்புக் கிடைத்தது மற்றொரு சந்தோஷ சமாச்சாரம்! சரசுவின் உள்ளம் குமிழிட்டது ‘இன்று காலேஜுக்குப் போவதா வேண்டாமா?’ என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டாள். இன்று போனால்தான் நல்லது. நேற்றே மேகநாதன் நான் வராததைக் கண்டு என்ன நினைத்துக்கொண்டாரோ! இன்றும் போகாமல் இருந்தால் என்ன சமாச்சாரம் என்பதைத் தெரிந்துகொள்ள நேரே பங்களாவுக்கே வந்தாலும் வந்துவிடுவார்! அவருக்கு அவ்வளவு தைரியம்!

‘இருந்தாலும் நான் எங்கே அவர் எங்கே! அவர் ஜமீன்தார் மகன்! எத்தனை ஜமீன்தார்கள் அவர் மீது வலை வீசிக்கொண்டிருக்கின்றனரோ! ஜமீன்தார் குடும்பங்களில்தான் தகுந்த ஆடவர் கிடைப்பது அரிதாக இருக்கிறதே!......எது எப்படி இருந்தபோதிலும் இன்றும் காலேஜிலிருந்து நிற்பதற்குக் காரணம் இல்லை. லீலாவிடம் சொல்லிக்கொண்டு போகவேண்டியதுதான்!’ என எண்ணி, சபேசன் அறையைவிட்டு வெளியே சென்றாள், சரசு.

* * *

மாலை காலேஜிலிருந்து வீடு திரும்பியதும் தன் மாடியறைக்கு விரைந்தாள், சரசு. லீலாவை அங்கே காணவில்லை. புத்தகங்களை மேஜைமீது வீசிவிட்டு அவளைத் தேடப் புறப்பட்டாள்.

பங்களாத் தோட்டத்தின் ஒரு மூலையில் இருந்தாள், அவள். அருகில் இருந்த மாமரத்தில் இரு சிட்டுக் குருவிகள் காதல் புரிவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இவைகள் காதல் புரிவதில்

தான் எவ்வளவு நாகரிகம் இருக்கிறது! அவை எவ்வளவு முறைகளைக் கையாளுகின்றன! மனிதர்களைப்போல் மிருக இச்சை மட்டுமே அதிகமாக இருக்கவில்லை, பட்சிகளின் காதல் கூட்டுறவிலே! அதீத தெய்விக அன்பின் விளைவால் அவை பிணைந்து மகிழ்கின்றனவோ! அவைகள் அடையும் இன்பத்திற்கு விண்ணுலக இன்பமும் ஈடாகக் கூறமுடியுமோ! என எண்ணியது லீலாவின் மனம்.

தான் வந்த அவசரத்தில் இதை யெல்லாம் பார்க்கவில்லை சரசு. "லீலா! என்ன பகற்கனவு கண்டுகொண்டிருக்கிறாய்! எழுந்திரு! வா! உள்ளே போய் உடை மாற்றிக்கொள்! வெளியே புறப்படவேண்டும்!" என்றாள்.

அவள் குரலைக் கேட்டதும் மரத்திலிருந்த சிட்டுக்குருவிகள் பறந்தோடிவிட்டன.

"என்ன சரசு! எங்கே போகிறாய்? நானும் வரவேண்டுமா என்ன?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள், லீலா.

"ஆமாம். ஏன் எப்போதும் எதையோ நினைத்துக்கொண்டு வேதனைப் படுகிறாய்? நேற்று நடந்ததை நினைத்துப் புண்பட்டுக் கொண்டிருந்தால் இன்றைய வாழ்வை இழந்துவிட வேண்டியது தான். நாளை வரப்போவதும் இன்பமற்ற சூன்யமாகத்தான் தோற்றும்! சற்றுமுன்பு இங்கிருந்து பறந்தோடிய சிட்டுக்களைப் போல் வாழவேண்டும். நம் சக்திக்கு மீறி நடந்துபோன காரியங்களை நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதால் என்ன பலன்?"

"இல்லையே சரசு! நான் எதையும் நினைக்கவில்லை. சும்மா படிப்பதற்கு மனம் ஓடவில்லை. இப்படி வந்து தோட்டத்தில் உள்ள செடிகளையும் பறவைகளையும் பார்த்துக்கொண்டிருந்தேன். வா! உள்ளே போகலாம்!" என எழுந்தாள். தன் மனக்கவலையை வெளியே காட்டி, சரசுவையும் சஞ்சலிக்கவைக்க அவள் விரும்பவில்லை. அந்தப் பங்களாவில் இருக்கும் வரையில் சரசுவின் மனம் நோகும்படி நடந்துகொள்ளக்கூடாது, சிட்டைப் போல் தன் மனம் போன போக்கில் திரிந்த சரசுவைத் தன் போக்குக்குத் திருப்புவது எளிதல்ல, வெற்றி நிச்சயமில்லாத அந்த முயற்சியில் ஈடுபடுவதைவிடப் பங்களாவில் இருக்கும் வரையில் அவளுடன் சுமுகமாகப் பழகிவிட்டுப் போய் விடுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.

* * *

சரசுவும் லீலாவும் தங்களை அலங்கரித்துக் கொண்டு அரைமணி நேரத்திற்கு முன்பே கான ரஞ்சன சபையை அடைந்துவிட்டனர்.

முதல் வகுப்பின் ஒவ்வொரு நாற்காலியாகப் பார்த்துக்கொண்டே வந்தாள், சரசு. வலது கோடியில், 'ரிஸர்வ்ட்' — 'மேகநாதன்' என்ற அட்டை தொங்கிக்கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள், சரசு. அவளது இடது பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள் லீலா.

ஆடரங்கு மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்று சென்னை போலீஸ் டெபுடி கமிஷனர் சந்தானம் அவர்கள் குமாரியின் பரதநாட்டிய அரங்கேற்றம். சபாவில் மாதத்திற்கு ஒரு அரங்கேற்றம் நடப்பது வழக்கம். ஆனால் அன்று மட்டும் என்னவோ விசேஷ கவனத்துடன் மிக உயர்வான முறையில் ஏற்பாடுகள் நடந்திருந்தன. சபையின் முன் பக்கத்தில் விசேஷ சோபாக்கள் போடப்பட்டிருந்தன.

நேரம் நெருங்கவே ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். மடிப்புக் கொஞ்சங்கூடக் கலையாத சூட்டுடன், முத்துமுத்தான வியர்வை நெற்றியிலும் கழுத்தோரத்திலும் துளிர்க்க, தன் புது மனைவியை இழைய அழைத்துக்கொண்டு வந்து, தன் காலேஜ் தமிழ் இலக்கியப் பேராசிரியர் அன்பழகன் பின்புற ஸீட்டில் உட்காருவதைப் பார்க்காததுபோல் பார்த்துக்கொண்டாள், சரசு.

லீலாவுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. அன்பழகன் எங்கே தன்னை அடையாளம் கண்டு கொண்டு குடும்ப விவகாரங்களைக் கேட்டுவிடுகிறாரோ என்று அவள் அஞ்சினாள். அவளிடம் தமிழ்ப் பேராசிரியருக்குத் தனியான நல்லெண்ணம் உண்டு. திரும்பிப் பார்க்காமல், ஆடரங்கையும் அங்கே தொங்கிய சித்திரச் சீலையையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள், லீலா.

சரசு சும்மா இருக்கவில்லை. தமிழ்ப் பேராசிரியரை அவருடைய மறுமனைவியின் முன் கிண்டல் செய்யவேண்டுமென்று அவள் நினைத்தாள். பின்புறம் திரும்பி, அப்பொழுதுதான் அவரைப் பார்ப்பதுபோல் நடித்து, "நமஸ்காரம், சார்! இல்லை......தவறு......excuse me!......தப்பு!....தப்பு!......மன்னித்துக் கொள்ளுங்கள்!.,....உம்... வணக்கம்!" என்று சொல்லி, கண்களில் குறும்பு தவழப் பார்த்தாள், சரசு.

அன்பழகன் உள்ளூரச் சிரித்துக்கொண்டு, "வணக்கம்!" என்று சொல்லிவிட்டு, "இவர்தான் என் மனைவி; இந்தக் குறும்புக்காரப் பெண் என் மாணவி! திரு. சபேசன் ஐ. ஸி. எஸ். அவர்களின் குமாரி" என அறிமுகம் செய்து வைத்தார்.

"அம்மையார் அவர்களுக்கும் நமஸ்.......ஓ! ஸாரி!......வணக்கம்!" என்று அஞ்சலி செய்தாள், சரசு.

அந்தப் புதுப்பெண் 'களுக்' கென்று சிரித்து விட்டாள். பின்புறத்தில் இருந்தவர்கள்கூட அவர்களையே பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

தன் கைக்குட்டையை எடுத்து நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்த வண்ணம் தம் உதடுகளைக் கடித்துக்கொண்டார் அன்பழகன்.

சபையில் இடங்கள் ஒவ்வொன்றாக நிரம்பிக் கொண்டு வந்தன. முன் பக்கத்தில் இருந்த பிரத்தியேக ஸோபாக்களில் உத்தியோக வட்டாரத்தின் உயர்ந்த தூண்கள் வந்து குழுமின.

சென்னைப் போலீஸ் பிரதம கமிஷனர், தம் டெபுடியின் சொந்த அழைப்பின்பேரில், தம் பல அலுவல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, அங்கே பிரசன்னமாயிருந்தார். அவர் மனைவியும் வந்திருந்தாள். கார்மேகத்தின் வர்ணத்தைப் பழிக்கும் ஒருவித பட்டுக் கௌன், புத்தம்புதிய நாகரிக முறையில், மலையாள நம்பூரி போடுவதைப் போன்ற கொண்டை, உதடுகளில் தீட்டியிருந்த செவ்வண்ணம், இப்படியும் அப்படியும் மருண்டு சுழன்ற அவள் பூனைக் கண்கள், கொட்டுமேளம் கொட்டுவதைப்போல் ஆடி அலமலந்த மார்பகங்கள்-இவைகளுடன் ஸ்ரீமதி போலீஸ் கமிஷனர் சூழ்ந்திருந்த மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்தாள். அன்பழகனும் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக்கண்டு அவருடைய புது மனைவி அருவருத்தாள்.

வண்ண மலர்களைப்போல் பலர் வந்து சூழ்ந்திருந்த அந்த அரங்கிலே பெரும் குறை இருப்பதாகப்பட்டது சரசுவுக்கு, தன் வலது பக்கத்து இடம் காலியாக இருக்கும்பொழுது அவளால் எதையும் ரஸிக்கமுடியும்போல் தோன்றவில்லை. சபையில் குழுமியிருப்பவரின் நடையுடை பாவனையைக் கவனித்துக்கொண்டு லீலா ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. 'மேகநாதன் ஏன் இன்னும் வரவில்லை?' என்ற கேள்வியே மீண்டும் மீண்டும் அவள் மனதில் எழுந்துகொண்டிருந்தது.

'கம்!'மென இளிய மணமும் அதைத் தொடர்ந்து 'ட்வீட்' இழையும் ஓசையும் கேட்ட சரசு திரும்பிப் பார்த்தாள். மேகநாதன் வந்தான்! அவன் வலது கை வைரமோதிரங்கள் டால் வீசின, ஒழுங்காக வாரிவிட்டிருந்த கிராப் பிரதிபலித்தது. அத்துடன் சரசுவின் மனமும் மலர்ந்தது.

மேகநாதன் தன் இடத்திற்கு அருகில் வந்ததும் தன் கைக் கடிகாரத்தை அவன்முன் நீட்டினாள், சரசு. கையைப் பிடித்துக் கடிகாரத்தைப் பார்த்த மேகன், "பதினைந்து நிமிஷங்கள்தானே! இந்தப் பசங்க'ளுக்குப் போக்குக் காட்டிவிட்டு வருவதற்குள் போதும் போதுமென்றாய்விட்டது!" என்று தன் கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டு உட்கார்ந்தான்.

"போகட்டும்! ஒருவிதமாக வந்து சேர்ந்தீர்களே!" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஆடரங்கில் மிருதங்க தாள சப்தத்தைக் கேட்டு, அந்தப் பக்கம் திரும்பினாள்.

* * *

பத்து வயதுச் சிறுமி. இடையில் அணிந்திருந்த தங்க ஒட்டியாணம் தெறித்து விடும்போல் அதிதமாகப் பருத்திருந்தது உடல். சற்றுக் கறுத்திருந்த அவள் உடல்மீது பௌடர் முதலியவைகளை அப்பி 'மேக்கப்' செய்திருந்தார்கள். அவள் கண்களில் தீட்டியிருந்த மை அதை எடுத்துக் காட்டியது. ஆடரங்கின் முன் வந்து நமஸ்கரித்தாள், சிறுமி. தன்னையே பார்த்த சபையோரின் கண்களைக் கண்டு சிறுமி கணநேரம் பிரமித்து நின்றாள். நெற்றியில் முத்து முத்தாகத் துளித்த வியர்வைத் துளிகள் அவள் இடையில் உடுத்தியிருந்த பகட்டான ஜரிகை வஸ்திரத்துடன் போட்டியிட்டுக்கொண்டு பளபளத்தன.

சிறுமியின் பிரமிப்பைக் கண்ட நட்டுவனார் தாளத்தைச் சற்று அழுத்தமாக அடித்து அவள் கவனத்தைத் திருப்பினார். சமாளித்துக்கொண்டு அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள். நட்டுவனார் பதம் பாடினார். எப்போதும் பாடிய பதந்தான். இதை எத்தனையோ முறை ஆடிப் பழகியிருக்கிறாள். ஆனால் அவள் கால்கள் இப்போது நகர மறுத்தன! அவளையே பல கண்கள் பார்த்துக் கொண்டிருப்பதை மறுபடியும் பார்த்தாள், சிறுமி. பின்புறம் எழுந்த மத்தள முழக்கமும் தாள ஒலியும் அவளுக்கு நாட்டியத்தை நினைவூட்டின. ஒருவாறு சமாளித்துக்கொண்டு தொடர்ந்து அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள்.

வலதுபுறம் திரும்பினாள், சிறுமி. ஸ்ரீமதி கமிஷனர் தன்னையே பார்ப்பதைக் கண்டு அவள் உடல் குன்றியது. தாளம் பிசகியது, அபிநயம் தப்பியது. நட்டுவனார் சமாளித்தார். ஒருவழியாக முதல் பதத்தை ஆடி முடிக்கும்படி செய்தார்.

இரண்டாவது பதம் அபிநயிக்கத் தயாராய் நின்றாள், சிறுமி. அப்போது மேடையின் பின்புறமிருந்து தன் அம்மா கூப்பிடுவது அவள் காதில் விழுந்தது. உள்ளே போனாள்.

அம்மாவின் கடுகடுப்பான முகத்தைப் பார்த்தவுடன் கொஞ்சநஞ்சம் இருந்த தெம்பும் குறைந்துவிட்டது சிறுமிக்கு. ஏதோ ஒரு பெரும் தவறைச் செய்துவிட்டு விழிப்பவளைப்போல் தலை குனிந்துகொண்டாள். அவள் உடல் முழுவதும் குப்பென வியர்த்துக் கொட்டியது.

"ஜாக்கிரதையாக ஆடு. அப்பாவுக்குத் தெரிந்தவர்கள் எல்லாரும் வந்திருக்கிறார்கள். கமிஷனரும் அவர் மனைவியும்கூட வந்திருக்கின்றனர். அவர்கள் பிரமிக்கும்படி ஆடவேண்டும், அசடு மாதிரி விழிக்காதே!" என்று சொன்னாள், ஸ்ரீமதி சந்தானம்.

'ஹூம்!' எனத் தலையசைத்தாள், சிறுமி.

அவள் வியர்வையைத் துடைத்துவிட்டு ஒரு கப் சூடான காப்பி கொடுத்தாள், ஸ்ரீமதி சந்தானம். அதைக் குடித்ததும் சிறுமிக்குச் சற்றே தெம்பு வந்தது. மறுபடியும் ஆடரங்குக்கு வந்து சேர்ந்தாள்.

சமிஷனரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தன் தந்தையின் முகத்தைப் பார்த்தாள். அது வாடியிருந்தது. 'தன் மீது அப்பா கோபித்துக்கொண்டாரா என்ன? நன்ருக ஆடவில்லை என்று அடிப்பாரோ!' மின்னல் போல் அவளுக்கு அப்பாவின் அறையில் தொங்கிக்கொண்டிருக்கும் நீளப் பிரம்பின் ஞாபகம் வந்தது. நன்ருகப் படிக்கவில்லை என்று அவள் அந்தப் பிரம்பால் பட்ட அடிகள் நினைவிற்கு வந்தன. அவள் உடலில் என்னவோ செய்தது.

இவ்வித நினைவுத் தொடர்பினிடையே மத்தள முழக்கமும் தாள சப்தமும் அவளைக் கவர்ந்திழுத்தன. நட்டுவனரின் பதம் அவளை இயக்க ஆரம்பித்தது. பெரிய பதம். வேறு கவனமின்றித் தன்னை மறந்து ஆடினல்தான் ஆடமுடியும். அரை மணி நேரம் ஆட வேண்டியிருக்கும். கிருஷ்ணனின் லீலையை விவரிப்பது பதம். சிறுமி ஆடினள். பதமும் தாள மத்தள ஓசையும் அவளுக்கு ஒரு மன மயக்கத்தை உண்டுபண்ணின.

கண்ணன் சகடாசுரனை வதம் செய்யும் கட்டம். சகடத்தை உதைத்து நொறுக்கும் பாவத்தை அபிநயித்தபொழுது தடாலென்று மேடைமீது விழுந்துவிட்டாள், சிறுமி.

தாள மத்தள முழக்கம் நின்றது. ஆடரங்கின் திரை விழுந்தது. அலை ஓசையைப்போல் சபையில் பேச்சுக் குரல் எழுந்து விட்டது.

கமிஷனர் தம் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். "இன்னும் கொஞ்ச நேரம்... சற்றே பயந்த சுபாவத்தினல்......" என்று குழறினர், சந்தானம். கமிஷனர் மீண்டும் ஆஸனத்தில் அழுந்த அமர்ந்தார்.

மேகநாதன் சரசுவைப் பார்த்து, "நான் போய் வருகிறேனே! ரொம்ப முக்கியமான சில காரியங்கள்......" என எழுந்தான். அவனுடைய அவசரம் சரசுவுக்குப் பிடிக்கவில்லை. "சரி, போங்கள்!" என்று சற்றுக் கடுப்பாகச்

சொன்னாள். மேகநாதனின் முகம் சற்று வெளிறியது. "இல்லை. கோபித்துக் கொள்ளாதே; முடிந்த பிறகே போகிறேன்!" என்று மீண்டும் உட்கார்ந்தான்.

அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்த பிரமுகர் எழுந்து பேச ஆரம்பித்தார். அவள் சிறுமி என்றும், அவள் உள்ளம் மலரினும் மிருதுவானது என்றும், சிறுமிகளின் மனம் இளம் மான் குட்டிகளைவிட மருட்சியுடையதென்றும் சொன்னார்.

"பரத நாட்டியத்தின் நுட்பங்கள் அவள் ஆட்டத்தில் இருக்கின்றன. தொடர்ந்து ஆடினால் கற்பனைகள் கொட்டலாம். குழந்தைக்குக் கால் சுளுக்கிக் கொண்டதால் மேலும் ஆடுவதற்கு இயலாது. சபையோர் மன்னிக்க வேண்டும்." என்று சொல்லிவிட்டு, அழைப்பிற்கு இணங்கி அரங்கேற்றத்தை அமோகமாக நடத்திக் கொடுத்ததற்காகச் சிறுமியின் தந்தை சார்பாகவும் பரத நாட்டியக் கலையின் சார்பாகவும் வந்தனம் கூறி முடித்தார்.



எதையோ பிரமாதமாக எதிர்பார்த்து வந்த சிலருக்குப் பெருத்த ஏமாற்றமாக முடிந்தது! மணி எட்டரைதான் ஆகியது. எல்லோரும் குழம்பிய உள்ளத்துடன் எழுந்து போய்க்கொண்டிருந்தனர். சரசு லீலா இருவரும் முன்னே செல்ல, மேகநாதன் பின்னே போனான்.

அத்: 53. பித்தமா? பேதைமையா?

கான ரஞ்சன சபாவின் வெளியே நின்று எங்கே போவது என்று யோசனை செய்தாள், சரசு.

"என்ன சரசு! ஏன் தயங்குகிறாய்? வீட்டுக்குப் போவோமே!" என்று கூறினாள், லீலா.

"இதற்குள் பங்களாவுக்குப்போய் என்னசெய்கிறது? ஒன்பதரை மணிக்கு வருவதாகச் சாமாவிடம் சொல்லிவிட்டு வந்தேன். அவன் மெதுவாகச் சமைத்துக்கொண்டிருப்பான். வாருங்கள்! மெரினாவுக்குப்போய் கொஞ்சநேரம் காற்றாட இருந்துவிட்டுப் போகலாம்!" என்று சொல்லி, காரில் உட்கார்ந்தாள், சரசு.

லீலாவுக்கு வேறு எங்கே செல்லவும் பிடிக்கவில்லை. சரசுவைத் தடுத்துச் சொல்ல மனமின்றி, காரில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்,

மேகநாதன் தயங்கி நின்றான். இதைக் கவனித்த சரசு, "அடடா! எவ்வளவு அடக்கமான பிள்ளை! உங்களைத் தனியே அழைக்கவில்லை என்று கோபமாக்கும். வாருங்கள் மிஸ்டர் மேகன்! நீங்களும் காரில் எழுந்தருளவேண்டும்!" என்றாள், சிரித்துக்கொண்டே.

இந்த அதிகப்பிரசங்கிப் பெண் இன்னும் எப்படியெல்லாம் ஆட்டிவைப்பாளோ என்று எண்ணியபடி காரின் முன்பக்கத்தில் இருந்த மற்றொரு ஸீட்டில் ஏறி உட்கார்ந்துகொண்டான், மேகன். கார் நகர்ந்து மெரினாவை நோக்கிச் சென்றது.

* * *

தூரத்தில் எரிந்த ரஸ்தா மின்சார விளக்குகளைத் தவிர வேறு ஒளி ஒன்றும் இல்லை. பளிச்சிட்டு மின்னிய நட்சத்திரக் கூட்டம் இருட்டை மிகைப்படுத்தியது. கடல் ஓயாது அலைத்த ஓசை எழுந்து வியாபித்துக்கொண்டிருந்தது. கலங்கரை விளக்க ஒளிப்பிழம்புகள் மாறி மாறி ஜலமட்டத்தை வெள்ளி மயமாக்கிவிட்டு மறைந்தன. சரசுகூட ஒன்றும் பேசாமல் ஹிதமாக வீசிய காற்றை அனுபவித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு, "நல்ல அரங்கேற்றம்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

"பாவம், சிறுமி. பூதாகாரமான அவள் உடலைத் தூக்கிக்கொண்டு நடப்பதே கஷ்டம். அவளுக்குப் பரதநாட்டியம் கற்றுக்கொடுத்துவிட்டு" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே சிரிப்புத் தாங்காமல் தன் வாயைப் பொத்திக்கொண்டான் மேகன்.

"பாவம் அவளுக்கு நன்ருக அடிபட்டிருக்கும். அத்துடன் விழுந்தவுடன் வெட்கி மனம் வெதும்பிப் போயிருப்பாள்! தாங்கள் பெற்ற பிள்ளை என்ற உரிமையை வைத்துக்கொண்டு வீணை தெரியாத சிறுமிகளைச் சித்திரவதைக்கு உள்ளாக்கக் கூடாது!" என்று தன் மனதில் இருந்ததை அடக்கமாட்டாமல் சொன்னுள், லீலா.

"ஆம்! நீங்கள் சொல்லுவதுதான் சரி. சிறுமிகள் பரதநாட்டியத்தில் உள்ள உயர் நோக்கங்களை என்ன கண்டார்கள்? தனியே வீட்டுள் ஆடுவதென்ருல் அது அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும். இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தின் முன்னே பலஹீன மனமுள்ள குழந்தை என்ன செய்யும்? மூர்ச்சித்து விழாமல் இருந்ததே பெரும் காரியம்!" என்று லீலாவின் கட்சியை ஆமோதித்துப் பேசினுன், மேகன்.

லீலாவின் கட்சியை மேகன் ஆதரிப்பது சரசுவுக்குப் பிடிக்கவில்லை.

"இல்லை. நீங்கள் இருவர் நினைப்பதும் தவறு. பரதநாட்டியம் புனிதமான கலை. அதிலே அபிநயங்கள்தான் பிராதான்யம். ஆடுபவரின் உருவமோ அங்க அழகு இவைகளோ அல்ல. சற்று வயது வந்த பெண்கள் ஆடும்போது மின் வெட்டுப்போன்ற அவர்கள் அங்க நெளிவுகளில் கண்கள் போகின்றனவேதவிர, கைவழியே செல்லும் நயனத்தையும் அவை வழியே செல்லும் மனதையும் கண்டு ரசித்து அதில் குறித்துக் கூறப்படும் அபிநய சூசகத்தைப் புரிந்துகொள்ள நினைப்பதில்லை. சிறுபெண்கள் நடனமாடும்போதுதான் நாம் அபிநய சூசகங்களில் மனதைச் செலுத்துகிருேம். அத்துடன் பால் வழியும் அவர்கள் முகத்தைப் பார்க்கும்போது கலையின் உயர்ந்தகருத்தைத் தவிர நம் மனதில் கீழான எண்ணங்கள் எழுவதில்லை. ஆகையினுல்தான் சிறுபெண்கள் ஆடும் பரதநாட்டியங்களை எல்லோரும் கண்டு ரசிக்க முடிகிறது. இந்தச் சிறுமி அசாத்திய பயங்கொள்ளி! டெபுடி போலீஸ் கமிஷனரின் பெண் என்று சொல்ல வெட்கமாக இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு லீலாவைப் பார்த்தாள், சரசு. 'நீ ஒன்றும் பேசாதே! மேகன் இதற்கு என்ன பதில் சொல்கிருர் பார்ப்போம்!' என்ற பாவனையாய்.

"இல்லை. தப்பு. சிறு பெண்களின் அபிநயங்களில் பொருள் பொதிந்து இருக்கமுடியுமா என்ன? பதத்தின் கருத்தை நன்கு உணர்ந்து, தானே முழுவதும் அனுபவித்து அபிநயம் பிடிக்கும் போதுதான் அவை காண்பவருடன் பேசாத பேச்சில் பேசுகின்றன. அப்பேச்சு இதயத்தின் உள்ளே சென்று உணர்ச்சி மழை பொழிகிறது.

"ஆனுல் சிறு பெண்கள் அபிநயம் பிடிப்பது பாஷை தெரியாத சினிமாப் படங்களைப் பார்ப்பதைப் போலத்தான் இருக்கிறது. வெறும் கண் காட்சியே தவிர உள்ளத்திற்கு உணவு கொடுப்பதாகச் சொல்ல முடியாது!" என்ருன், மேகன்.

அவன் மறுபடியும் இப்படிப் பேசியது சரசுவுக்குப் பிடிக்கவில்லை. சரியோ தப்போ அவன் தன் கக்ஷியை முழுதும் ஆதரிக்கவேண்டுமென்று அவள் விரும்பினுள். அவள் மனக் கசப்பை முகக் குறியால் கண்டுகொண்டாள், லீலா.

"நாம் இதைப் பற்றி வீணுகப் பேசி, சண்டை போட்டுக் கொள்வானேன்? உலகில் நடப்பவை எல்லாம் புனிதமான நோக்கங்களை உத்தேசித்துத் தானேயா நடக்கின்றன? சிறுமியின் தந்தை கலையின் நோக்கத்துடனு இந்த அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்தார்?" என்று கேட்டு வைத்தாள், லீலா.

லீலாவின் பேச்சு அதிகப் பிரசங்கமாகப் பட்டது சரசுவுக்கு. தம் சொந்த வாழ்வில் தோல்வியடைந்தவர்கள் எதையும் கோணியான பார்வையிலிருந்து பார்த்து, தங்கள் எண்ணந்தான் உண்மையானது மற்றவை எல்லாம் தவருனது என்று சொல்லி விடுவதாகச் சரசுவின் எண்ணம். "ஏன்? அவருக்குக் கலையுணர்ச்சி இல்லை என்பது உனக்கு எப்படித் தெரிந்தது!" என்று கேட்டாள்.

"பரதநாட்டியம் என்ன என்பதையே அறியும் சக்தியில்லாத ஆங்கிலேயப் பிரதம கமிஷனரை முதல் இடத்தில் உட்காரவைத்து அவரைக் 'காக்காய்' பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்ததிலிருந்தே தெரியவில்லையா? நாட்டியத்திற்குத் தலைமை வகித்த பிரமுகரை அவர் வெறும் கருவியாகத்தானே நினைத்துக் கொண்டிருந்தார்!"

"தனக்கு உயர்ந்த அதிகாரியாயிற்றே என்று உபசரித்திருக்கலாம். அதற்காக அவருக்குக் கலையுணர்ச்சி இல்லை என்று கூறிவிடலாமா என்ன?"

"உலகம் பலவிதம். நமக்கேன் இந்த விவகாரமெல்லாம். பொழுது போக்காகப் பார்க்க வந்தோம்; பார்த்தோம். வீண் சண்டை எதற்கு?" என்று சொல்லி, பேச்சுக்கு முடிவைக்கட்ட ஆரம்பித்தாள், லீலா.

"இல்லை, லீலா! நம்மைப்போன்ற படித்தவர்கள் உண்மை காணுவிட்டால் வேறு யார்தான் தெளிவது? அவருக்குக் கலையுணர்ச்சி இல்லை என்பதற்கு நீ சொல்லும் ஒரு காரணம் மட்டும் போதாது. வேறு ஏதேனும் இருந்தால் சொல், சரியா தவரு என்ற முடிவுக்கு வரலாம்!" என்று தொடர்ந்தாள், சரசு.

மேகநாதன் இங்கே குறுக்கிட்டான்.

"ஏன் இல்லாமல்? முதலில் உருளைக் கிழங்கைப் போல் இருக்கும் தன் பெண்ணுக்குப் பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்க அவர் நினைத்திருக்கக் கூடாது. பரத நாட்டியத்திற்கு வேண்டிய உடல் அமைப்பு இன்னது என்றுகூடத் தெரிந்து கொள்ளாத அவர் கலா ரசிகர் அல்ல என்று சொல்லிவிடக்கூடாதா?" என்றான்.

"அப்படியானால் அவ்வளவு செலவு செய்து கற்றுக் கொடுத்து, இந்த அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்ததின் நோக்கம்தான் என்னவாம்? அவருக்குப் பைத்தியமா என்ன?" என்று தொடர்ந்தாள், சரசு.

"பைத்தியமா?" என்று அழுத்தத்துடன் சொன்னது லீலாவின் நெஞ்சில் நன்றாக உறுத்தியது. "ஆமாம். காரியப் பைத்தியம். பலர் பலவிதங்களில் முன்னுக்குவர முடியாதவர்கள் உயர்ந்த வட்டாரத்தில் உள்ளவர்களைக் "காக்காய்" பிடிக்கிறார்கள்! அதற்கு உபயோகமாகும் சாதனங்கள் பல. அதில் தற்கால நாகரிகமாய்ப் பரத நாட்டியம் இருக்கிறது. தங்கள் சிறு குழந்தைகளின் உணர்ச்சி நாடிகள்மீது தங்கள் மன மாளிகையைக் கட்ட டெபுடி கமிஷனரைப் போன்ற பதவி வேட்டைக்காரர்கள் தயங்குவதில்லை! அவ்வளவுதான்! இதெல்லாம் வெள்ளைக்காரனிடம் கற்றுக்கொண்ட பித்தலாட்டங்களில் ஒரு பகுதி. வெள்ளைக்காரர்கள் காரண காரியமின்றி விருந்துக்கு அழைத்து வேண்டியவரை, 'காக்காய்' பிடித்துக்கொள்ளலாம். நம் நாட்டில் அப்படிச் செய்வது நாகரிகமில்லை; ஏதேனும் காரணம் வேண்டும்! அதற்காக இப்படி ஏதேனும் நாடகம் நடத்தவேண்டியிருக்கிறது!" என்றாள் சரசு.

தூரத்தில் அலறிக்கொண்டிருந்த ரேடியோவில் ஆங்கிலச் செய்தியறிக்கை நடந்துகொண்டிருந்தது

"மணி ஒன்பதாய்விட்டது!" என்றான் மேகன்.

"சரி! நீங்கள் போகலாம். நடையைக் கட்டுங்கள்! நானும் லீலாவும் காரில் போய்விடுகிறோம்!" என்றாள், சரசு. "லீலாவை ஆதரித்துப் பேசியதற்கு இதுதான் உங்களுக்குத் தண்டனை!" என மனதிற்குள் எண்ணிக்கொண்டாள்.

"நன்றாக இருக்கிறது! பாவம்! அவர் இந்த இருட்டிலே எப்படிப் போவார்? நாம் போகும் வழியிலேதானே அவர் பங்களா! வழியில் இறக்கிவிட்டுப் போனால் போகிறது!" எனப் பரிந்து பேசினாள், லீலா.

"ஓ!...உம்...சரி!" என்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு எழுந்தாள், சரசு. அதன் அர்த்த புஷ்டியை மேகனும் லீலாவும் புரிந்துகொண்டார்களோ என்னவோ!

(தொடரும்)



சித்தப்பா

SANJEEVI

"ராசு"

"இத்தப்பா" என்ற மழலைச் சொல், சிந்தனையில் மூழ்கி, சிலைபோல் அமர்ந்திருந்த சாரங்கனை, தன் நிலைக்குக் கொண்டு வந்தது. கீழே குனிந்து பார்த்தான். குழந்தை மாதவன் அவனது கால்களைப் பிடித்துக் கொண்டு, பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தான். குழந்தையை வாரியணைத்து முத்தமாரி பொழியவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது சாரங்கனின் மனதில். அதையடுத்து ஒருவித பயமும் தோன்றியது. குழந்தையின் தாய் பார்த்து விட்டால்..............?

சட்டென்று குனிந்து குழந்தையைக் கீழே உட்காரவைத்தான். குழந்தை அவனது துணியைப் பிடித்துக்கொண்டு, "இத்தப்பா"

என்று கெஞ்சியது. யாரும் வருவதற்குள் அந்தச் சங்கடமான நிலையிலிருந்து விடுபட்டு விடவேண்டுமென்று முயற்சித்தான். குழந்தையோ துணியை விடமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தது. தன்னை எடுத்துக் கொள்ளும்படி கெஞ்சியது. குழந்தையின் கையை வெடுக்கென்று பிடுங்கி நிமிருவதற்கும் நீலா உள்ளே நுழைவதற்கும் சரியாயிருந்தது.

ஒரு வினாடியில் அவள் முகம் உக்ரமாய் விட்டது. இடுப்பிலிருந்த குடத்தை 'நக்' கென்று கீழே வைத்தாள்,

தரை அதிர்ந்து விடும்போல விடுவிடு என்று வந்தாள். குழந்தை அவளைக் கண்டதும் சாரங்கனின் கால்களோடு ஒட்டிக் கொண்டது. குழந்தையின் ஒரு கையைப் பிடித்து இழுத்து, இடுப்பிலே தூக்கிவைத்துக்கொண்டாள். சாரங்கன் பிரமை பிடித்தவன்போல இதைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பக்கம் திரும்பி எரித்து விடுபவள்போலப் பார்த்துவிட்டு உள்ளே போய் விட்டாள்.

குழந்தை, "தித்தப்பா......" என்று கூப்பிட்டபடியே தாயின் கையிலிருந்து திமிறியது. நீலா அதன் பச்சை முதுகில் ஓங்கி அறைந்தாள்.

"சனியனே! ஒரு நாழி உள்ளே உட்கார்ந்திருக்க முடியாதா? அதுக்குள்ளே சித்தப்பா உறவு பாழ் போறதா?" என்று இரைந்தாள். குழந்தை வலி தாங்காமல் அலறினான்.

சாரங்கனின் உள்ளம் வேதனையடைந்தது. குழந்தையின் அழுகை அவனை என்னவோ செய்தது. கண்களில் நீர் துளித்தது. அவ்விடத்தில் உட்கார்ந்தவாறு குழந்தையின் அழுகையைச் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. எழுந்து வாசல் திண்ணைக்கு வந்தான்.

பகவான் எவ்வளவோ பேர்களைச் சோதனை செய்கிறார். ஆனால் அவனைப்போல் மற்றவர்களைக் கடும் சோதனைக்குட்படுத்தவில்லை. அறியாக் குழந்தைமீது அவனுக்கு அவ்வளவு பாசம் உண்டாகும்படி ஏன்தான் செய்தாரோ? குழந்தையும் அவன்மீது உயிரையல்லவா வைத்திருக்கிறது.

உள்ளே குழந்தை இன்னமும் விசித்துக் கொண்டிருந்தது.

"தித்தப்பா......" என்று அவன் மழலைக் குரலில் கூப்பிடும்போது, சாரங்கனின் மனம் உருகிவிடும். அப்படியே தூக்கி அணைத்துக் கொண்டு, மூச்சுவிட முடியாதபடி முத்தங்கள் பொழிய வேண்டும் என்று தோன்றும், அடக்க முடியாத ஆசை ஏற்படும், அந்தப் பாக்கியத்தைக் கடவுள் அவனுக்குக் கொடுக்கவில்லை.

கடந்த நான்கு நாட்களாக அவனால் சகிக்க முடியாதபடி நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. ஒவ்வொரு நாழிகையும் அங்கே தங்குவது நரக வேதனையாயிருந்தது, எங்கேயாவது ஓடிப்போய்விடலாமென்று நினைத்தால், சின்னஞ்சிறு மாதவனின் பால் மாறாத முகம் அந்த எண்ணத்தை ஒரு நொடியில் சிதறடித்து விடுகிறது. ஆனால் மற்றொன்றும் அவனுக்குத் தெரியாமலில்லை. எந்தக் குழந்தைக்காக அவன் அங்கே கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டு தங்கியிருக்க விரும்பினானோ, அந்தக் குழந்தைக்கு அவன் இருக்கும்வரை கஷ்டம்தான்.

நான்கு நாட்களுக்கு முன் நடந்தது இதுதான்.

அன்றும் இது போல்ச் சாரங்கன் பெஞ்சியின்மீது அமர்ந்தவாறு சிந்தனையில் லயித்திருந்தான். மன்னி நீலாம்பாள் குளத்திற்குப் போயிருந்தாள். குழந்தை சமையலறையில் தூங்கிக்கொண்டிருந்தது.

தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட குழந்தை சுற்றுமுற்றும் பார்த்திருக்கிறது. தாயைக் காணவில்லை. அழுது கொண்டே கூடத்திற்கு வந்தது. குழந்தை அழுவதைக் கவனித்த சாரங்கன் அதைச் சமாதானம் செய்ய, "மாது! இங்கேவா" என்று கூப்பிட்டான்.

"அம்மா......"

"அம்மா 'ஓ' போயிருக்கா; பாலு வாங்கிண்டு வந்துடுவா! நீ இங்கே வா" என்று கூப்பிட்டான்.

அவ்வளவுதான். தாயின் நினைவு மறந்து போய்விட்டது. சித்தப்பாவிடம் ஓடி வந்தான். சித்தப்பாவின் மடிமீது ஏறிப் படுத்துக் கொள்ள வேண்டுமென்று குழந்தை விரும்பியது. கீழே கிடந்த விசிறியை எடுத்து, காம்பினால் அதன் கைகளைத் தடுத்தான்.

"மாது! கீழே உக்காந்துக்கோ! வேடிக்கை பண்ணட்டுமா?"

சித்தப்பாவும், குழந்தையுமாக விளையாட ஆரம்பித்தனர். அவர்களது விளையாட்டில் குளத்திலிருந்து திரும்பிய நீலாவைக் கவனிக்கவில்லை.

நீலாம்பாள் இதைத்தான் வெகுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது.

குடத்தைத் தரையில் 'நக்' கென்று வைத்தாள். மண் குடமாயிருந்தால் அவள் வைத்த வேகத்தில் நொறுங்கிப் போயிருக்கும். விடுவிடென்று வந்தாள். குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

பாதி விளையாட்டில் பிறர் தலையிடுவதைக் குழந்தை விரும்பவில்லை. அழுதது. ஓங்கி அறைந்தாள்.

"கண்ணுக்குள்ளே வைச்சு காக்கற மாதிரி காப்பாத்திண்டுவறேன். பெரியவாளே இப்படிக் கருதிக் கருதிக் குழந்தையைச் சுத்தினா என்ன பண்றது? இந்தச் சனியனுக்கும் சொன்னாத் தெரியலே? சித்தப்பா கிட்டே போய் உரையாட்டா தூக்கம் வராதா?" என்று வைதாள். மேலும் குழந்தை அழவே இரண்டறை வைத்தாள்.

சாரங்கனால் இதைப் பொறுக்க முடியவில்லை.

"மன்னி! குழந்தை என்ன செய்யும்? அவனைப் போய் ஏன் அடிக்கிறாய்? அவன் இப்போதுதான் எழுந்திருந்தான். உன்னைக் காணவில்லையென்று அழுதான். சமாதானப் படுத்தி வேடிக்கை காட்டினேன்......"

அவன் சொல்வதை அவள் பொருட்படுத்தினால்தானே! வாயில் என்னவெல்லாம் வந்ததோ அவளுக்கே தெரியாது.

"............ஜாடை மாடையாய் எவ்வளவு நாள் சொல்லுகிறது? பச்சைக் குழந்தையிடம் இப்படியா விளையாடுவது. ஏதடா, நாம்தான் இப்படி கஷ்டப்படுகிறோமே; குழந்தைக்கும் பிடித்துக்கொண்டால் என்ன செய்வது? இதையெல்லாம் யோசிக்க வயதாகவில்லையா?......தூங்கற குழந்தையையும் எழுப்பிவிட்டால் என்ன பண்றது?.........நான் அப்பவே அடிச்சிண்டேன், இந்த எழவெல்லாம் நமக்கெதற்கு என்று, கேட்டால்தானே, தம்பிப் பாசம்! இருக்கட்டும்...... எப்போது தன்னாலே கஷ்டம்னு தெரிஞ்சதோ தானாகவேன்னா ஒதுங்கணும்......"

"மன்னி! நீ எதையெல்லாமோ சொல்லிக் கொண்டு போகிறாயே! குழந்தையை என் கையால் தொடவில்லையென்று நான் சத்தியம் செய்யட்டுமா? தூரத்திலேயே உட்காரவைத்திருந்தேன்......"

"ஆமாம்! காலணாவுக்கு நூறு சத்தியம்! என்னாலே இனிமே பொறுக்க முடியாது. குழந்தையை விட்டுவிட்டு இந்தண்டை அந்தண்டை போக முடியவில்லை. குழந்தையா வந்தாலும் தான் ஒதுங்கணும்......"

"மன்னி! நீங்கள் சொல்வதை என் காதுகளைக் கொண்டு சகிக்க முடியவில்லை......"

நீலாம்பாள் அவனைச் சட்டை செய்யவில்லை.

"......இன்று வரட்டும். இரண்டில் ஒன்று முடிவு செய்துவிட வேண்டும். தம்பி வேணுமா? பெண்டாட்டி வேண்டுமா? அவரே சொல்லட்டும்"

சாரங்கனின் உள்ளம் குமுறியது. கண்கள் நீரைச் சொரிந்தன.

அவன் வியாதியஸ்தன்தான். தீராத தொத்து நோய்க்காரன்! அவன் தாயோ, தகப்பனோ இருந்தால் இவ்விதம் அனாதையாகக் கிடக்கமாட்டான். எவ்விதமாகிலும் வைத்தியம் பார்த்துவிடுவார்கள்.

நீலாம்பாள் சொல்லுவதும் சரிதான். குழந்தையைத் தொட்டு விளையாடுவது கூடாதுதான். வியாதியஸ்தனுடன் குழந்தைகளை அதிகமாகப் பழகவிடக் கூடாது.

அவ்வளவு வயதான அவனுக்கு அது தெரியாதா? வேண்டுமென்றே—குழந்தைக்குத் தன் வியாதி பரவ வேண்டுமென்றே—அவன் செய்வானா? அதை நினைத்துப் பார்க்காமல், தொத்து நோய்க்காரன் என்ற வெறுப்பில் இல்லாதவைகளையும், பொல்லாதவைகளையும் சொல்லி விடுவதா? அவளுடைய கூரிய வார்த்தைகள் அம்பு போலத் தைத்தன. கொல்லைப்புறம் சென்று அரைமணி நேரம் அழுது தன் வருத்தத்தைத் தீர்த்துக்கொண்டான்.

நீலாம்பாள் சொன்னபடி அவன் மனதிலும் தீவிர முடிவு ஏற்பட்டிருந்தது. அண்ணன் வந்தவுடன் ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும். அண்ணனை விட்டுவிட்டு எங்கேயாவது கண் காணாத இடத்தில் ஆஸ்பத்திரியில் படுத்துக்கொண்டுவிட வேண்டும். மாதவனைக் கண்டதும் அவையெல்லாம் மறந்துவிட்டன. சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தபடி, "தித்தப்பா?" என்று கூப்பிட்டது அவனது முடிவை ஒரேயடியாகக் கவிழ்த்துவிட்டது.

நீலாம்பாளும் தன் கணவனிடம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவளுக்குப் பயம். அவள் கலியாணமாகி, புருஷன் வீடு வரும்போது இதேமாதிரி சண்டை நடந்திருக்கிறது. வியாதிக்கார மச்சினன் வீட்டிலிருக்க அவள் விரும்பவில்லை. அவனை வேறு யாராவது உறவினர்

பொறுப்பில் அனுப்பிவிடவேண்டுமென்று முயற்சித்தாள்.

ராகவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. தம்பிக்கு அவனை விட்டால் வேறு ஆசிரயிக்கக்கூடியவர் கிடையாது. "இஷ்டமிருந்தால் இருக்கலாம்; இல்லையேல் பிறந்த வீட்டுக்குப் போய்விடலாம்" என்று அவளையே கோபித்துக்கொண்டு விட்டுவிட்டான்.

மறுபடியும் இதேமாதிரி கோபித்துக்கொண்டு விட்டால் என்ன செய்வது? ஆகவே அவள் வேறு விதத்தில் தன் வஞ்சத்தை ஆரம்பித்தாள். சாரங்கனைக் கண்டபோதெல்லாம், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோலக் கடுமையாக வைத்துக்கொண்டு, ஏதாவது வார்த்தைகளை வெடுக்கென்று சொல்லி மனதைப் புண்படுத்த ஆரம்பித்தாள். குழந்தை மாதவன்மீது சாரங்கன் உயிரை வைத்திருந்தானல்லவா? குழந்தையை இல்லாததற்கும் பொல்லாததற்கும் அடித்து இம்சை செய்ய ஆரம்பித்தாள். அப்போது சித்தப்பாவிடம் போய், அவன்மீது ஏறி விளையாடியதாகப் பொய் சொல்லி வைவாள். இவைகளைச் சாரங்கனல் சகிக்கமுடியவில்லை. அவன் மனம் சல்லடைக் கண்களாகிவிட்டது.

இன்னமும் குழந்தை அலறிக்கொண்டிருந்தது நீலாம்பாள் அடித்துக்கொண்டிருந்தாள்.

சாரங்கனின் மனம் நெகிழ்ந்துவிட்டது. ஒரு பாபமுமறியாத குழந்தை அடிபட்டு அலறுகிறது. அவன் அந்த வீட்டில் இருக்கும்வரை குழந்தைக்கு விமோசனமில்லை. மனதை மிகவும் கட்டுப்படுத்தி ஒரு முடிவுக்கு வந்தான். ராகவன் ஆபீசிலிருந்து திரும்பிவர இன்னும் இரண்டு மணி நேரமிருக்கிறது. அதற்குள் கிளம்பிவிட்டால் யாரும் பார்க்க மாட்டார்கள். ராகவன் வந்துவிட்டால் தப்ப முடியாது.

திண்ணையிலிருந்து இறங்கி உள்ளே வந்தான். குழந்தை விசித்தபடி தரையில் கிடந்தது. நீலாம்பாள் சமையலறையில் காரியமாய் இருந்தாள். பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டு கொல்லைப்புறமாக நடந்தான்.

* * *

ஆபீசிலிருந்து வந்த ராகவன் கூடத்தில் சாரங்கனைக் காணுததால்," நீலா, சாரங்கன் எங்கே? என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாதே! சாயந்தரத்திலிருந்தே என் கண்ணிலே தென்படவில்லை. தோப்புப் பக்கம் எங்கேயாவது போயிருக்காரோ, என்னமோ"

இரவு பத்துமணியாகியும் சாரங்கன் திரும்பவில்லை. ராகவன் விளக்கை எடுத்துக்கொண்டு தேடக் கிளம்பினன். பன்னிரண்டு மணிவரை சுற்று வட்டாரம் முழுவதும் தேடியும் பிரயோஜனமில்லை.

குழந்தை மாதவன் சித்தப்பாவைக் காணுததால் அழ ஆரம்பித்துவிட்டான். தினந்தோறும் ராகவன் ஆபீசிலிருந்து வந்ததும், சாப்பிட்டுவிட்டுச் சாரங்கனுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அப்போது மாதவனும் தகப்பனரின் மாடியில் உட்கார்ந்தபடி சித்தப்பாவுடன் விளையாடிக்கொண்டிருப்பான். இல்லாவிட்டால் தூக்கம் வராது.

அவனைச் சமாதானப்படுத்த ராகவனல் முடியவில்லை. தம்பியைக் காணவில்லையே யென்று கவலை.

"அப்பா! தித்தப்பா?" என்று கேட்கும் குழந்தையை அவனல் சமாதானம் செய்யமுடியவில்லை.

"சித்தப்பா வெளியிலே போயிருக்கிருர். கார்த்தாலே நீ எழுந்திருக்கச்சே வந்துடுவார்" என்ருன்.

மாதவன் அன்றிரவு சரியாகத் தூங்கவில்லை. ஏன், ராகவன், நீலா இருவருங்கூடச் சரியாகத் தூங்கவில்லை. "எங்கே திண்டாடுகிருனே? என்ன சாப்பிட்டானே?" என்ற கவலை ராகவனுக்கு. தன்னைப் பிடித்த சனி விலகிவிட்டது என்ற சந்தோஷம் நீலாம்பாளுக்கு. இருந்தாலும் பயம் தோன்ருமலில்லை. சாரங்கன் வீட்டை விட்டுப் போவதற்கு முக்கிய காரணகர்த்தா அவள்தானே. அவளுடைய வார்த்தைகளின் தாக்குதலைத் தாங்காமல்தானே அவன் ஓடிப்போனுன். ராவனுக்கு இது தெரிந்தால் அவளை வீட்டை விட்டுத் துரத்தி விடுவான்.

மறுநாளும் சாரங்கன் வீட்டிற்கு வரவில்லை. என்ன செய்வது? எங்கே போய்த் தேடுவது? தனக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் கடிதங்கள் எழுதினன். தபாலாபீஸுக்குப் பணத்தைக் கொட்டினனேயொழிய, சாரங்கன் இருக்குமிடத்தைப் பற்றி ஒரு தகவலும் வரவில்லை.

மாதவன் நிலைமைதான் மாறிவிட்டது. சித்தப்பாவை மறக்க முடியவில்லை. அடிக்கடி "தித்தப்பா" என்று புலம்பினன். முதலில் ராகவன் இதைப் பொருட்படுத்தவில்லை. நாளடைவில் இதே ஏக்கத்தில் மாதவன் நோய்வாய்ப்பட்டுவிட்டான்.

சாதாரண ஜ்வரம் என்று ஏதோ மருந்துகளை வாங்கிக் கொடுத்தான். வியாதி குணமடையவில்லை.

"மிஸ்டர் ராகவன், குழந்தைக்கு வியாதி ஒன்றும் இல்லை. மனதில் ஏக்கம்தான். அடிக்கடி புலம்புவதிலிருந்து, சித்தப்பாவைக் கண்டால் தான் அவன் குணமடைவான் என்று தோன்றுகிறது. அவன் சித்தப்பாவிற்குக் கடிதம் எழுதி வரவழையுங்கள்" என்ருர் டாக்டர்.

சித்தப்பாவுக்கு எந்த ஊருக்குக் கடிதம் எழுதுவது?

அப்போதுதான் நீலாம்பாளுக்குத் தன் தவறு விளங்கியது. குழந்தைக்கும் தகப்பனுக்கு மிடையே இருந்த உறவைப் பிரிக்க அவள் செய்த காரியம் மிகுந்த மோசத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டது. கணவனிடம் எல்லாவற்றையும் தெரிவித்து, தன்னை மன்னித்துவிடும்படி கெஞ்சினாள்.

சாரங்கனின் இருப்பிடம் தெரியாமல் போகவே தினப் பத்திரிகையில் விளம்பரம் செய்தான்.

"அன்புள்ள சாரங்கா! உனது பிரிவினால் குழந்தை மாதவன் ஏக்கமடைந்து படுத்த படுக்கையிலிருக்கிறான். நீ வந்தால்தான் அவன் பிழைக்க முடியும். உன் மன்னி தன் செய்கைகளுக்காக வருத்தப்படுகிறாள்.

"அவள் செய்தவைகளை என் பொருட்டு மறந்துவிட்டு உடனே வந்து சேரவும்."

விளம்பரத்திற்குப் பலனில்லாமல் போகவில்லை. ஒரு வாரத்தில் சாரங்கனிடத்திலிருந்து பதில் வந்தது.

"அண்ணா! பத்திரிகையில் உனது விளம்பரத்தைப் பார்த்தேன். மன்னியினால் நான் வீட்டை விட்டு வரவில்லை. எனது உடல் நிலையைச் சீர் செய்துகொள்ளத்தான் புறப்பட்டு வந்தேன். உன்னிடம் சொல்லிக்கொண்டு வர, சமயம் சரியில்லை, அதற்காக வருத்தப்படுகிறேன். மாதவனை ஜாக்கிரதையாய்க்கவனித்துக்கொள்ளவும். எனது நிலைமை சற்றே தேவலை..."

உன் அன்புள்ள

சாரங்கன்.

கடிதத்தைப் படித்த நீலாம்பாள் கண்ணீரைச் சொரிந்தாள்.

"சாரங்கனின் தங்கமான மனதை நான் உணரவில்லை. அவனுக்குச் செய்யக்கூடாத கொடுமைகளைச் செய்துவிட்டேன். இன்றே புறப்பட்டுப் போய் அவனை வீட்டுக்கு அழைத்துவந்துவிடுங்கள். நாம் ஒரேயடியாய் வைத்தியம் செய்துகொள்ளலாம்" என்று கணவனைத் தூண்டி, அன்றிரவே புறப்படச்செய்தாள்.

ரயிலை விட்டிறங்கியதும் ராகவன் ஒரு நிமிஷம் கூடத் தயங்காமல் ஆஸ்பத்திரிக்கு ஓடினான்.

உள்ளே நுழைந்து சாரங்கன் படுத்திருக்கும் அறையினுள் நுழைந்ததும் திடுக்கிட்டு நின்றுவிட்டான். கட்டில் காலியாக இருந்தது. அருகே இருந்த நர்ஸ் விஷயத்தை விளக்கினாள்.

"நேற்று இரவு நாலுமணிக்கெல்லாம் திடீரென்று யாரும் எதிர்பாராத விதமாக உயிர் போய்விட்டது. பிரேதம் கிடங்கிலிருக்கிறது." ●

SERVING AGRICULTURISTS THROUGH CHEMISTRY

செழிப்பான விளைச்சலை ஏன் உறுதிப்படுத்தக் கூடாது?



மைசூர் பெர்டிலைஸர் கம்பெனியார் தயாரிக்கும்

எல்லா சத்துக்களும் சரியான நிலையில் அடங்கியுள்ள எருக்களை உபயோகித்து உங்கள் நிலங்களுக்கு ஜீவசக்தி அளியுங்கள். சிறந்த விளைச்சலுக்கு இவர்களின் தாமரை மார்க் எருக்களை உபயோகியுங்கள்.

LOTUS BRAND MF

THE MYSORE FERTILISER COMPANY, POST BOX No. 1206, MADRAS. 1.

Offices: BANGALORE, KUPPAM, ERODE, METTUPALAYAM, COONOOR & OOTY.

FEDERALS. 582

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

டில்லியில் தற்சமயம் மிகவும் பேசப்படும் விஷயம் வரப்போகும் பார்லிமெண்ட், சட்டசபைத் தேர்தல்கள். இந்தத் தேர்தல் ஜ்வரம் நாளுக்குநாள் கடுமையாகவே ஏறிக் கொண்டு போகிறது. தேர்தலுக்குப் பொறுக்கவேண்டிய அபேக்ஷகர்கள் ஜாப்தா மத்திய காங்கிரஸ் எலக்ஷன் போர்டார்மூலம் பரிசோதிக்கப்பட்டுத் தினந்தோறும் வெளியிடப்படுவதால் அந்தந்தச் சமஸ்தான கக்ஷிப் பிரதிகக்ஷித் தலைவர்களும் டில்லிக்குக் காவடி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். தங்கள் கக்ஷிக்கு(group) பிரதிநிதித்துவம் குறைக்கப் பட்டுவிட்டது, மற்றைய கக்ஷியார் சமஸ்தானத்தேர்தல் போர்டில் இருந்ததால் அவர்களுடைய ஆள்களை அதிகம் பொறுக்கி விட்டார்கள் என்ற புகாரும் தினந்தோறும் பலமாகவே காதில் விழுகிறது.

ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு சம்பந்தப்பட்ட வரை காங்கிரஸ் ஸ்தாபனத்தில் கக்ஷிகள் இருப்பதாகத் தாம் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார். ஆனாலும் அவர் கொள்கை எவ்வளவு தூரம் நடைமுதலில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்று கேட்டால் கொள்கைக்கும் கிரியாம்சைக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டி யிருக்கிறது.

பொதுவாக எல்லாச்சமஸ்தான காங்கிரஸ் கமிட்டிகளிலும் கக்ஷிப் பிரதிகக்ஷி முறை இருந்து வருகிறது. என்பது பிரசித்தம். இந்தமுறை மிகவும் அபாயகரமாக இருந்து வரும் சமஸ்தானங்கள் பஞ்சாப், மதராஸ், பீஹார், வங்காளம், ராஜஸ்தான். பஞ்சாபில் டாக்டர் கோபிசந் பார்காவுக்கும் ஸ்ரீ பீமஸேன ஸச்சாருக்கும் உள்ள தகராறு இன்றுநாளை தீர்க்கக்கூடிய தகராறு இல்லை. ஸ்ரீ பார்காவா கோஷ்டியில் அதிகம் செல்வாக்குச் சீக்கியர்களுக்கே. இது பஞ்சாபிகளுக்குப் பிடிப்பதில்லை. ஸ்ரீ ஸச்சார் கோஷ்டியினர் பெரும்பாலும் ஹிந்துக்கள். சமீபகாலத்தில் ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையே இருந்த நல்லுறவு குன்றியதனல் தற்சமயம் பஞ்சாபில் சீக்கியர்கள் ஒரு காலத்தில் ஹிந்துக்களிலிருந்து பிரிந்து சூழ்நிலை காரணமாகக் கொஞ்சம் அமிதமான மதம்சம்பந்த நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்ற உண்மை மறக்கப்பட்டு, பஞ்சாப் ஹிந்துக்கள் சீக்கியர்களை முஸ்லீம்கள் எப்படி வெறுத்தார்களோ அப்படியே வெறுக்கிறார்கள்.

ஆகவே சீக்கியர்கள் பெரும்பான்மையாகச் சில ஜில்லாக்களில் இருக்கிறார்கள் என்பதை உத்தேசித்தே நேருஜி இரு கோஷ்டியினருக்கும் கூடிய வரையில் பிரதிநிதித்துவம் கொடுக்க விரும்பி, அப்படியே அபேக்ஷகர்களைப் பொறுக்கவும் பொறுக்கியிருக்கிறார். ஆனால் ஸ்ரீ பார்காவா, மத்திய காங்கிரஸ் தேர்தல் போர்டாருடன் ஒத்துழைக்காதது டன், தாமும் எங்கிருந்தும் தேர்தலுக்கு நிற்க முடியாது என்று சொல்லியும் விட்டார். வகுப்புவாதமும் துவேஷமும் அதிகம் உள்ள இந்தச் சமஸ்தானத்தில் சுதாவாகவே மதத்துவேஷத்தை ஆதாரமாகக் கொண்டுள்ள ஜனசங்கத்திற்கும் ஹிந்து மகாசபைக்கும் ஆதரவு உண்டு. காங்கிரஸ்காரர்களிடையே உள்ள பிளவு தேர்தலின் போதும் நீடித்தால் காங்கிரஸ் தோல்வி நிச்சயம் என்பதுடன் தேர்தலில் காங்கிரஸ் இங்கு மண்ணைக் கவ்வ நேரிடும்.

காங்கிரஸில் உள்ள பூசல்கள் காரணமாகவே, வகுப்புவாதம் மிகுந்த அகாலிதளத்துடன் போர் நடத்திய தேசிய சீக்கியர்கள் கூட, காங்கிரஸில் நம்பிக்கை இழந்து பழையபடி சீக்கியர்களின் ஜின்னுவான மாஸ்டர் தாரா சிங்கின் தலைமையின்கீழ் சேர்ந்து விட்டார்கள். இருந்தும் பழைய புலிகளான பாபா சரக்சிங், ஜதேதார் உத்தம்ஸிங் நாகோக் முதலியவர் மத வெறி என்ற கோட்டையை நிர்மூலம் செய்வதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு தேர்தல் வேலையில் இறங்கியிருக்கிறார்கள்.

காங்கிரஸ் பிரதிநிதி நல்ல ஒழுக்கமுள்ளவராகவும் சமூக சேவை செய்தவராகவும் இருக்க வேண்டும்; கள்ளமார்க்கெட்காரர்களுக்கும் வகுப்புவாதிகளுக்கும் தற்குறிகளுக்கும் இடங்கொடோம் என்று நேருஜி கூறியிருந்தார். தவிர, நேருஜி அபேக்ஷகரின

யோக்கியதையும் அவரால் சாதிக்கக் கூடிய ஆக்கும் சக்தியுமே பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டும்; மிகவும் லாயக்கு வாய்ந்த பிரபலஸ்தர் காங்கிரஸ் கொள்கையை நம்பினால் போதும், அவரை அபேக்ஷகராக எடுக்க வேண்டும் என்று நேருஜி சமஸ்தான காங்கிரஸ் கமிட்டிகளுக்கு எழுதியிருந்தார். தமிழ் நாடு சம்பந்தப்பட்டவரை இப்படிப்பட்ட காங்கிரஸ் அல்லாத பிரமுகர்களுக்குக் குறைவு இல்லை. இருந்தும் அவர்கள் ஜாப்தா ஆகஸ்ட் தியாகிகளுக்கும் செப்டம்பர் தியாகிகளுக்குமே இடம் கொடுத்திருக்கிறது.

இது தவிர, ராஜாஜி கோஷ்டி என்ற ஒரு சாராருக்கு எவ்வளவு தூரம் அபேஷகர்களிடையே பங்கு உண்டு என்பது தெளிவாகவில்லை. சென்னைச் சட்ட சபையைப் பற்றி இங்கு ஒரு வட இந்திய நண்பரின் அபிப்பிராயம், அவர்கள் பெரும்பாலும் கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட வேண்டியவர்கள் என்பது. அவருடைய காரணம் இது தான்: எம். எல். ஏ. என்றால் தேச நலனுக்கு உரு வாக்கப்படும் சட்டங்களை ஆராய்ந்து அது சம்பந்தப்பட்டவரை விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுக்காரியங்கள் சம்பந்தமாகச் சர்க்காரைச் சதா "ஸ்க்ரூ" செய்ய கேள்விகள் கேட்கவேண்டும். விவாதங்களில் பங்கெடுத்துக் கொண்டு பொதுவாக அவரால் நேரம் விரயம் ஆகாமல் சட்டசபைக்கு நன்மை உண்டாக வேண்டும். இவற்றையெல்லாம் கஜக்கோலாகக் கொண்டு அளந்து பார்த்தால் சென்னைச் சட்டசபை மெம்பர்களில் 80 சதம் சாதுக்கள்; அவர்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். ஸ்ரீ வைத்தியநாதய்யர், ஸ்ரீ தாத்தாச்சாரி, ஸ்ரீ எஸ். என். கோபாலஸ்வாமி, ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரி, ஸ்ரீ டென்னட்டி விசுவநாதம், ஸ்ரீ ராகவய்யா, சர்தார் வேதரத்னம் இன்னும் சிலர்—இவர்களைத் தவிர மற்ற யாரும் பேசி நான் கேட்டதே இல்லை என்று சென்னையில் நான்கு வருஷங்கள் பழகிய இவர் சொல்கிறார். இதில் தவறு எதுவும் இல்லை என்று நான் நினைக்கிறேன். மந்திரிகளையும் (பிரதமர் நீங்கலாக) இந்தச் சிறு நபர்களையும் விட்டால் பாக்கி யாவரும் நெருப்பு அணைக்கும் வாளிகளைத் தவிர வேறு என்ன என்று சொல்லமுடியும்?

சென்னைச் சமஸ்தான ஜாப்தா பூர்த்தியாகவில்லை என்பதுடன், சென்னை சம்பந்தப்பட்டவரையில் தமிழர்—ஆந்திரர் பிரதிநிதித்துவம் பற்றியும் ஒன்றும் நிச்சயம் ஆகவில்லை. ஆந்திரர்கள் சென்னையிலிருந்து நியமிக்கப்படும் அபேக்ஷகர்களில் தங்களுக்கும் பங்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் குட்டித்தகராறில் எப்படி முடிவு ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஆந்திரர்களின் பெரிய தலைவர்கள் யாவரும் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டதாலும் ஸ்ரீ பட்டாபி சிதாராமையாவும் தேர்தல் விஷயங்களில் அக்கரை காட்டாததாலும் சென்னை நகரத்தில் ஆந்திரர்களுக்குத் தேர்தலில் இடம் கிடைக்காது என்று அறிகிறேன்.

ராஜஸ்தானம் சம்பந்தப்பட்ட வரையில் காங்கிரஸ் ஸ்ரீ ஹீராலால் சாஸ்திரியுடன் ராஜி செய்து கொண்டுவிட்டதனால் ராஜஸ்தானத்தில் காங்கிரஸைத் தவிர வேறு எந்தக்கக்ஷிக்கும் அங்கே சான்ஸ் கிடையாது என்று தீர்மானம் செய்துவிட்டார்கள். தவிர, ராஜஸ்தானத்தில் காங்கிரஸை விட்டால் வேறு ராஜீயக் கக்ஷியும் கிடையாது.

* * *

சென்ற மாதமத்தியில், அதாவது அகில இந்திய காங்கிரஸ் டில்லியில் நடைபெறுவதற்கு முன், காங்கிரஸ் வட்டாரங்களில் அதிக ஊக்கமோ நம்பிக்கையோ காணப்படவில்லை. முதலில் டில்லி சமஸ்தான ஜில்லா போர்டு தேர்தல்கள் வந்தன. அதற்கு டில்லியைச் சுற்றியுள்ள கிராமங்கள் 21 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருந்தது. இந்த ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டவர்கள் காங்கிரஸ், ஜன சங்கம், ஸோஷலிஸ்ட் கக்ஷியாளர்களும் சுயேச்சையாளர்களும். அதற்கு ஜனசங்கம் மிகவும் காரசாரமாகக் கூடப் பிரசாரம் செய்தது. காங்கிரஸ் தரப்பில் மதராஸியும் டில்லி கிராமவாசிகளின் பூர்ண மதிப்பிற்குரிய வருமான ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் மாத்திரமே பிரசாரம் செய்தார். காங்கிரஸ் எதிர்பார்த்த ஸ்தானங்கள் ஐந்தேதான். ஆனால் எதிர்பாராத விதமாக காங்கிரஸுக்குப் பதினொரு ஸ்தானங்களும் ஸோஷலிஸ்ட்களுக்கு ஒரு ஸ்தானமும் சுயேச்சையாக நின்றவர்களுக்கு ஒன்பது ஸ்தானங்களும் கிடைத்தன.

இந்த அமோக வெற்றி காங்கிரஸ்காரர்களுக்குப் புதிய நம்பிக்கையையும் ஊக்கத்தையும டில்லி முனிஸிபல் தேர்தல்களில் கொடுத்தன. காங்கிரஸ் மிகவும் கார சாரமாகப் பிரசாரம் செய்தது. கிட்டத்தட்ட எல்லாக் கக்ஷியினர்களும் இந்தத் தேர்தலை ஒரு பரீக்ஷையாகக் கருதினர். ஆகையால்

பிரசாரம் பூராவும் ராஜீய அளவில் இருந்ததே ஒழிய, சுகாதாரத்தைப் பற்றியோ குழந்தைகளின் படிப்பைப்பற்றியோ அல்லது ஆஸ்பத்திரிகளைப்பற்றியோ இல்லை. காங்கிரஸ் தரப்பில் பிரசார முழக்கத்தை ஆரம்பித்து வைத்த நேருஜி, "நான் உயிருடனிருக்கும்வரை ஒரு மனிதன் மற்றொருவனை மதம் காரணமாக மாய்க்க முயற்சிப்பதை எதிர்ப்பேன்; வகுப்பு வாதத்தைக் குழி தோண்டிப் புதைப்பேன்" என்றார். ஹிந்து மகா சபையும் ஜனசங்கமும் நேருஜியின் அயல்நாட்டுக் கொள்கையை எதிர்த்ததுடன் பாகிஸ்தானையும் இந்தியாவையும் இணைப்பதாக உறுதி கூறின. இந்திய சுதந்திரத்திற்குக் காங்கிரஸ் மாத்திரம் பாடுபடவில்லை, ஸோஷலிஸ்ட்களும், பிரஜா கக்ஷியினரும், முன்னணிக் கக்ஷியினரும் சேர்ந்தே பாடுபட்டார்கள் என்றும், ராஜீய சுதந்திரத்திற்குப் பிறகு பொருளாதார சுதந்திரம் வேண்டும் என்றும், இது முதலாளிகள் ஆதிக்கத்தில் உள்ள காங்கிரஸ் அதிகாரத்தில் இருக்கும் வரை கிட்டாது என்றும், ஸோஷலிஸ்ட் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் கூறினார்.

பிரசார மாரிக்கும் வசைமாரிக்கும் இடையே அகப்பட்ட நாலரை லக்ஷம் வோட்டர்கள் யாருக்கு வாக்கைக் கொடுப்பார்கள் என்பது நிச்சயமாகத் தெரியாவிடினும் 50 ஸ்தானங்களில் தாங்கள் 30 ஸ்தானங்கள் வரை பிடிக்கமுடியும் என்று காங்கிரஸ் கக்ஷியினர் கூறினர்.

இங்கும் முடிவு தெரிந்ததும் யாவருக்கும் திகைப்பு உண்டாயிற்று. காங்கிரஸ் வட்டாரங்களே நம்பமுடியாதபடி அவர்களுக்கு 42 ஸ்தானங்கள் கிடைத்தன. பாதிக்குமேல் ஸ்தானங்களைப் பிடித்துவிடுவோம் என்று மார்தட்டின ஜனசங்கத்திற்கு ஐந்து ஸ்தானங்கள் பிடிப்பது வாலைப்பிடி தோலைப்பிடி என்றும் ஆகிவிட்டது. இதில் மிகவும் கேவலமான நிலைமைக்கு ஆளானவர்கள் ஸோஷலிஸ்ட்களும் கம்யூனிஸ்டுகளும். ஏனென்றால் அவர்கள் 40 அபேக்ஷகர்களை நிறுத்தினார்கள். ஆனால் ஒருவருக்காவது வெற்றி கிடைக்கவில்லை. 100-க்குமேல் நின்ற சுயேச்சை வாதிகளுக்கு மூன்று ஸ்தானங்கள்தான் கிட்டின.

காங்கிரஸ்காரர்களை இந்த வெற்றிக்குப் பிறகு கண்டே பிடிக்கமுடியவில்லை. காங்கிரஸின்மேல் ஜனங்களுக்கு இன்னும் நம்பிக்கையிருக்கிறது என்றாலும் இந்தத் தேர்தலில் மற்ற விஷயங்களுக்கும் பிரதானம் கொடுக்கவேண்டியிருக்கிறது. தேர்தல் தினம் விடுமுறை இல்லாததால் 60 சத வாக்குகள்தான் பதிவாயின. தவிர ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் சராசரி ஏழு நபர்கள் போட்டியிட்டதால் வாக்குகள் பிரிந்தன. காங்கிரஸுக்குள்ள அனுதாபிகள் திடமாகக் காங்கிரஸுக்கு வோட்டுக் கொடுத்தார்கள். தவிர 47 ஸ்தானங்களில் 30 ஸ்தானங்களுக்குமேல் உள்ள தொகுதிகளில் சராசரி 2,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மதத்தலைவர்கள் கட்டளையின்பேரில் காங்கிரஸிற்கே ஒரு முகமாக வோட்டுக் கொடுத்தார்கள். இதனால் முஸ்லிம் வோட்டர்கள் உள்ள தொகுதியில் காங்கிரஸ் கவலையே படவில்லை.

* * *

இந்த நிலையில்தான் காங்கிரஸ் சத்தியவதி நகரில் கூடியது. டில்லி முனிஸிபல் தேர்தல் அவ்வளவு பெரிய சமாசாரம் இல்லை என்றாலும் இது பெரிய பிரச்னைகளை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்ட தேர்தலானதால் வெளிச் சமஸ்தானங்களிலிருந்து வந்த காங்கிரஸ் டெலிகேட்டுகளுக்குக் காங்கிரஸ் வெற்றி மிகவும் மகிழ்ச்சியை அளித்தது.

நேருஜி அகில இந்திய காங்கிரஸைக் கூட்டியதன் காரணம் தெரிந்ததே. காங்கிரஸில் மாறுதல் உண்டாக்கி, சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்ட நேரு தம் தேர்தலுக்குப்பின் தம் கொள்கைகளைக் காங்கிரஸ் பூரணமாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அ. இ. கா. கமிட்டி, நேருவின் அபிப்பிராயத்தில், பிரதிநிதித்துவம் இல்லாதது. ஏனென்றால் சர்தார்பட்டேல் ஆந்திராவில் இருந்து பிரதிநிதிகள் இல்லாமலும் ராஜஸ்தானத்தில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட ஸ்ரீ ஜெயநாராயண விலாஸை அ. இ. கா. வில் சேர்த்துக்கொண்டும் நாஸிக் காங்கிரஸை நடத்தியது யாவருக்கும் தெரிந்ததே. டண்டன்ஜி ராஜீனமா செய்த தினம் அ. இ. கா. கமிட்டி இருந்தநிலை என்னவென்றால் நேருவிற்கும் முற்போக்குக் கொள்கைகளுக்கும் விரோதிகளாக இருந்தவர்கள் அதில் நிரம்பி இருந்தார்கள்.

சத்தியவதி நகர் பிரமாதமாக வர்ணிக்கப்பட்டு, பிரசாரமாரியில் முழக்கப்பட்டாலும் பழைய நாள்களில் இருந்த "மவுஸ்" அதற்கு இல்லைதான். காரணம், பழைய நாள்களில் அது மகத்தான தேசியக்கூட்டமாக இருந்து

வந்தது. இப்பொழுது மற்ற ராஜீயக்கக்ஷிகளைப்போல் காங்கிரஸும் ஒரு கக்ஷி ஆகிவிட்டபடியால், ஜனங்களுக்குக் காங்கிரஸில் இருந்த பழைய ஆர்வம் இப்பொழுது இல்லை.

காங்கிரஸுக்கு இங்கே செய்திருந்த ஏற்பாடுகளும் மிகவும் உயர்வு என்று சொல்ல முடியாது. நம் தமிழ் நாட்டில் த. நா. கா. கமிட்டி உருவாக்கும் கண்காட்சி பல மடங்கு நேர்த்தி என்று சொல்லவேண்டும். முக்கியமாகக் காங்கிரஸ் கூடவிருந்த காங்கிரஸ் பந்தலை நன்முக அமைத்திருந்தார்கள். தலைவர்கள் உட்காரவிருந்த மேடையில் நவயுவ சைத்திரிகர்களால் தீட்டப்பெற்ற வர்ண சித்திரங்கள் இந்திய வாழ்க்கையைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக்காட்டின. ஒலிபெருக்கிகள் மாத்திரம் ஒரு லக்ஷ ரூபாய் செலவில் பொருத்தப்பட்டிருந்தன. ஆனல் காளிதாஸன் மரம் வெட்டிய சமத்துப்போல் சீக்கிரம் தீப்பிடிக்கக்கூடிய பந்தலிலிருந்து நாலு பர்லாங் தூரத்தில் தீ அணைக்கும் இயந்திரங்கள் இருந்தன. ஆகவே முதல்நாள் மின்சாரக் கம்பிகள் தவறுதலால் பந்தல் தீப்பிடித்ததும், தீ அணைக்கும் இயந்திரங்கள் வந்து சேர மூன்றே நிமிஷங்கள் பிடித்தன. அதற்குள் பந்தல் பஸ்மீகரம் ஆய்விட்டது.

பந்தல் எரிந்தது பெரிய அபசகுனம். இருந்தும் காங்கிரஸ் விக்னம் இல்லாமல் முடிந்ததற்குக் காரணம் நேருஜியின் உறுதியான மனோவிரதமும், விடாப்பிடியுமே. பந்தல் போனல் அக்கரையில்லை, காரியம் நடக்கட்டும் என்று கட்டளையிட்டார் நேருஜி.

காரியமே பிரதானமாகக்கொண்ட நேருஜி விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தை அங்கு அமைக்கப்பட்டிருந்த சாப்பாட்டு ஹாலில் நடத்தினர். பிரதானமாகக் கவனிக்கப்பட்ட விஷயங்கள் நேருஜியின் அயல் நாட்டுக் கொள்கையும், தேசத்தில் ஏற்பட்டுள்ள வகுப்புவாதக் குழப்பமும். சமீபகாலத்தில், தாம் அடிக்கடி வற்புறுத்திவரும் விஷயத்தையே நேருஜி காங்கிரஸிலும் சுட்டிக் காட்டினர். சுதந்திரத்திற்குப்பிறகு இழந்துவிட்ட ஜனத்தொடர்பைக் காங்கிரஸ் திரும்ப அடையவேண்டும். ஜனங்கள் காங்கிரஸ் கொள்கைகளைப்பற்றியும், காங்கிரஸ் திட்டங்களைப்பற்றியும், காங்கிரஸ் சாதனைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டும் என்று நேருஜி உணர்த்தினர். தேர்தல்களில் ஜயிப்பது எனக்கு இரண்டாம் பக்ஷம்; முதல் பக்ஷம் ஜனங்களிடையே காங்கிரஸ் லக்ஷியங்களை மறுபடி பரப்பவேண்டும் என்றும் சொன்னர் நேருஜி. "கேவலம் தேர்தல்களில் ஜயிப்பதுதான் நம் குறி என்றல் எனக்குத் தேர்தல்களில் அக்கரை இல்லை" என்றும் அவர் கர்ஜித்தார்.

நல்ல நாள்களிலேயே நேருஜிக்கு மக்களிடம் அசாத்தியப் பற்றுதல் உண்டு. அது, மூன்று வருஷம் பிரதமராக இருந்து கிட்டத்தட்ட கைதியைப்போலக் கட்டுக்காப்பில் இருந்ததற்குப்பிறகு, இப்பொழுது ஜாஸ்தியாகிவிட்டது. ஆகவே தேர்தல்களினல் இஷ்டப்படி தேசம் பூராவும் சுற்றலாம் என்ற நம்பிக்கையும் அவருக்கு ஏற்பட்டு இருக்கிறது.

நேருஜியின் அயல் நாட்டுக்கொள்கையைப் பலமாகக் கண்டிப்பவர்கள் அநேகர். இவர்களின் கக்ஷி என்னவென்றல் நம் ஒதுங்கி நிற்கும் கொள்கையால் அமெரிக்காவின் நெருங்கிய உறவு கிட்டவில்லை, அமெரிக்கா டாலர் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா வரவில்லையே என்பதுதான். இந்தப்பிரலாபம் ஹிந்துமகாசபைக் காரே முதல் டாக்டர் அம்பேத்கார் வரையிலும் இருக்கிறது. இந்தத் தாபத்தைத்தான் ராஜாஜி சரியானபடி மண்டையிலடித்துப் பேசினர். அயல் நாட்டுக் கொள்கைத் தீர்மானத்தின்மேல் பேசுகையில் ராஜாஜி சொன்னர்: 'ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் உலகத்தில் யுத்தங்களை நிறுத்தவும், உலக சமாதானம் நிலை நாட்டவும் பாடுபட ஏற்படுத்தப்பட்டது. ஆனல் அதுவே இரு பெரிய பாகங்களாகப் பிரிந்து ஒவ்வொரு பாகத்திலும் சிற்சில நாடுகள் மற்ற நாடுகளுடன் எலியும் பூனையும் போல் பழகுகின்றன. உலக நாடுகளின் இடையே உறவுகுன்றிவரும் இத்தருணத்தில் உலகம் இந்தியா போன்ற நாடுகள் கையாளும் நடு நிலையைக் கொள்கையையே வரவேற்கிறது. ஆகவே நாம் கடைப் பிடிக்கும் கொள்கைதான் சிலாக்கியமானது, என்றர் ராஜாஜி.

பதவியை விட்டு விலகுமுன் ராஜாஜி செய்த அரிய பிரசங்கங்களில் ஒன்று அயல் நாட்டுக் கொள்கைப் பிரேரணையின்மேல் செய்தது. அவர் பிரசங்கத்திற்குப் பிறகு அயல் நாட்டுக் கொள்கையைப்பற்றி குறைகூறவோ அல்லது கண்டிக்கவோ பிரமேயம் இல்லாமல் போய்விட்டது. தீர்மானமும் ஏகமுகமாக நிறைவேறியது.

காங்கிரஸின் மற்ற முக்கியத் தீர்மானம் வகுப்புவாதத்தின் மேல் நிறைவேற்றப் பட்டது. இதற்காகத்தானா இவ்வளவு செலவில் காங்கிரஸ் கூட்டப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. ஆனால் விஷயங்கள் தெரிந்தவர்கள் இதைச் கேட்கமாட்டார்கள். நேருஜியின் கொள்கை முஸ்லிம்களை அமிதமாகத் திருப்திபடுத்துவது. இதனால் ஹிந்துக்களின் நியாயமான நலன்களுக்குக் குந்தகம் ஏற்படுகிறது என்று கருதும் பெரும்பாலோர் காங்கிரஸில் இருந்ததால்தான் அகில இந்திய காங்கிரஸ் மூலம் நேருஜி தம் மதப்பற்றற்ற சர்க்காரின் கொள்கையை ஊர்ஜிதம் செய்ய வேண்டி வந்தது. இந்தக் காங்கிரஸில் விசேஷம் என்னவென்றால் வகுப்புவாதத்தை ஒழிப்பது பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியவர் நேருவின் நண்பர் என்று சொல்ல முடியாத பம்பாய் உள் நாட்டு மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய்.

தேர்தல்கள் வருகின்றன. காங்கிரஸால் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது என்று பறை சாற்றுகிறார்கள் ஸோஷலிஸ்ட்கள். இதை மறுதலித்தாக வேண்டும் என்றுதான் காங்கிரஸின் மற்றத் தீர்மானம், அதன் இறுதி நோக்கம் என்னவென்பதை எடுத்துக் காட்டியது. தீர்மானம் காங்கிரஸ் எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்களும் உரிமைகளும் அளித்து உலக சமாதானத்துக்குப் பாடுபடும் ஒரு ஐக்கியக் குடியர்சை ஏற்படுத்தப் பாடுபடும் என்று சொல்லிற்று. தீர்மானம் காங்கிரஸாருக்குப் பிடித்திருந்தாலும் அது வழவழ குழகுழாத்தான் என்று ராஜீய வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

சத்தியவதி நகர் காங்கிரஸால் வேறு எந்த நலன் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் ஒரு நிச்சய பலன் ஏற்பட்டது. நேருஜியின் உபதேசங்களும் ஷேக் அப்துல்லா போன்ற அரிய தலைவர்களின் சொற்பொழிவுகளும்காங்கிரஸ்காரர்களுக்குப் புத்துயிரும் புது நம்பிக்கையும் அளித்ததுடன் வரும் தேர்தலில் காங்கிரஸ் ஜயிக்கும் என்ற திட நம்பிக்கையையும் அளித்திருக்கிறது.

* * *

ராஜாஜி அவர் வெகுகாலமாகச் சொல்லி வந்ததை நிறைவேற்றி விட்டார். சென்ற வாரம் அவர் சென்னை திரும்ப விமானநிலையம் அடைந்ததும் ஒவ்வொரு டில்லிவாசியும் வருந்தினர். ராஜாஜி பதவியை விடுவதற்கு முன்னால் டில்லி சமஸ்தானத்திற்குப் பொறுப்புள்ள சர்க்காரும் சட்டசபையும கொடுக்கச் செய்த சட்டம் டில்லி வாசிகளின் பூரண விசுவாசத்தை அவருக்குக் கிட்டும்படி செய்துவிட்டது. தவிர, அவர் பத்திரிக்கைச் சட்டமசோதாவைப் பார்லிமெண்டில் பிரேரேபித்து, எதிர்ப்பைச் சமாளித்து, அதைச் சட்டமாக்கியது அவருடைய புகழை வெகுவாகப் பெருகச் செய்துவிட்டது.

விமான நிலயத்தில் எல்லா மந்திரிகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஸ்தானிகர்களும் வந்திருந்தார்கள். ராஜாஜி எல்லோருடனும் தனிப்பட்ட ஹாஸ்ய பாணியில் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார். ஜனாதிபதியும் ஆஸாதும் வந்தபிறகு ராஜாஜி மிகவும் ஹாஸ்யமாகப் பேசி அவர் போகப் போகிறாரே என்ற தாபத்தை உண்டாக்கினார்.

ராஜாஜி முக்கியமாகத் தேக சௌக்கியம் காரணமாக விலகினாலும் அவர் இறுதிப் பதவிக் காலத்தில் அவருக்கும் நேருஜிக்கும் இடையே இருந்த கெட்டியான உறவு கொஞ்சம் குறைந்தது என்று ராஜீய வட்டாரங்களில் கருதுகிறார்கள். ராஜாஜிக்கு நேருஜி டண்டன்ஜி பதவியை நீக்கக் கையாண்டமுறை பிடிக்கவில்லை என்று சிலரின் அபிப்பிராயம். அதேபோல் நேருஜியின் குறை என்ன என்றால் ராஜாஜி தம்மை டண்டன்ஜி தகராறில் முழுமனதுடன் ஆதரிக்க வில்லை என்று கருதினர். இது எப்படியிருந்தபோதிலும் ராஜாஜியை மந்திரிசபையிற் சேரும்படி அழைத்தபொழுது நேருஜி ராஜாஜிக்குப் பழைய பிரிட்டிஷ் மந்திரி சபையில் ஹெர்பெர்ட் மாரிஸனுக்கு இருந்த (Lord President of the council) அந்தஸ்து கொடுக்கப்படும் என்று அறிவித்து இருந்தார். ஆனால் உண்மையில் அவருடைய அரிய ஆலோசனை கூறக்கூடிய சக்தியை நேருஜி பயன் படுத்திக் கொள்ளவில்லை என்பது பகிரங்கம். ராஜாஜியை விட நேருஜி சமீப காலத்தில் ஆஸாதின் பேரில் அதிக நம்பிக்கை வைத்திருந்ததுடன் ராஜாஜியின் முதிர்ந்த ராஜ தந்திரி என்ற புகழுக்கு முழு மரியாதை கொடுக்கவில்லை.

ராஜாஜி டில்லியைவிட்டுச் சென்ற பிறகுதான் அவர் இல்லாத குறை தெரியவருகிறது. அப்பொழுதுதான் நேரு ராஜாஜியை வருந்தி அழைக்கிறார். அதேபோல் மறுபடியும் ராஜாஜியை நேருஜி அழைக்கத்தான் போகிறார், அவரும் வரத்தான் போகி

றார் என்று அறிந்த வட்டாரங்களில் இன்றும் கருதுகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரை, ராஜாஜி சம்பந்தப்பட்டவரை, அவரால் தவிர்க்க முடியுமானால் அவர் இனி அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளமாட்டார்.

* * *

பதவியை விட்டு விலகுபவர்கள் எல்லாருமே ராஜாஜியைப்போல் கண்ணியமாக நடந்துகொள்கிறார்களா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது. அம்பேத்கார் இதற்கு ஒரு உதாரணம், ஸ்ரீ அச்ருராம் மற்றொரு உதாரணம்.

அம்பேத்கார் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி, தேசத்தின் நன்மதிப்பை எப்படிப் பெற்றாரோ அதை ஒரு நொடியில் குப்பையில் போட்டுவிட்டார். திரும்பவும் பார்லிமெண்டுக்கு வரவேண்டும், தீண்டாதார் சமஷ்டியை வலுப்படுத்தவேண்டும் என்று அவர் சமீபகாலங்களில் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார். இருந்தாலும் அதைச் சாதிக்கப் போகும்பொழுது ஆபாசமாகச் சண்டை போட்டுக்கொண்டு, இல்லாத குறைகளைக் கற்பித்துக்கொண்டு நேருஜியைக் குறை கூறியது இங்கு யாவருக்கும் "நாயைக் குளிப்பாட்டி..................." என்ற பழமொழியையே ஞாபகப்படுத்தியது.

தமக்குச் சட்ட இலாகாவைத் தவிர வேறு எந்த இலாகாவையும் கொடுக்கவில்லை, நேரு ஹரிஜனங்கள் விஷயத்தில் முஸ்லிம்கள் விஷயத்தில் காட்டும் அக்கறையைக் காட்டவில்லை என்று குற்றம் சாட்டினார் அம்பேத்கார். ஆனால் அவரே தம் இலாகாதான் மிகவும் பளுவானது என்றும் உபரிவேலை அவரால் செய்யமுடியாது என்றும் சொல்லியிருக்கிறார். ஹிந்து சட்ட மசோதாவை நிறைவேற்றக் காங்கிரஸ் கக்ஷி உதவவில்லை என்றும் அம்பேத்கார் கூறினார். ஆனால் அவர் புத்தமதத்தைத் தழுவிய பிறகு ஹிந்துமதத்தைத் தாக்கிப் பேசியிருக்கும் சந்தர்ப்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. உண்மையில் ஹிந்து அல்லாதவரை, ஹிந்துக்களைக் கேவலமாக நினைத்துப் பழித்த ஒருவரை, ஹிந்து சட்ட மசோதாவைப் பிரேரேபித்து நடத்த அனுமதித்த நேருஜிக்கு அம்பேத்கார் வாலை ஆட்டி நன்றி செலுத்தவேண்டும்.

ஸ்ரீ அம்பேத்கார் காஷ்மீர் விஷயமாகப் பல்டி அடித்தார் அல்லவா! அதைப்பற்றி ஸ்ரீ ஷேக்அப்துல்லாவைச் சந்தித்து அவர் அபிப்பிராயத்தைக் கேட்டேன். கொலைகாரர்கள்கூட, சிநேகிதர்கள் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று பாகுபடுத்திச் சொல்லுவார்கள். அம்பேத்கார் அதிலும் கேவலம். அவர் மகாமனுஷன் என்பதற்காகச் சொல்லவில்லை. ஒரு மந்திரியாக இருந்தவர் காஷ்மீரைப் பிரிவினை செய்யவேண்டும் என்று உளறினால் பாகிஸ்தானுக்குக் கும்மாளம் அல்லவா என்று கர்ஜித்தார் ஸ்ரீ அப்துல்லா. கொஞ்சம் யோசித்து, பிறகு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இதையும் அப்துல்லா சொன்னார்: குரங்கு வாலால் மரத்திலிருந்து தொங்கிப்பார்த்து அதோ இருக்கும் வீடு ஆகாயத்திலிருந்து தொங்குகிறது என்று சொன்னால் எல்லாரும் நம்புவார்களா? ஆகவே மௌடீகம் வெகு சிலரையே பீடித்த வியாதி என்று சந்தோஷம் அடைவோம் என்றார் காஷ்மீர் பிரதமர்.

* * *

ஸ்ரீ அச்ருராம் பஞ்சாப் வக்கீல்களில் பிரசித்தி பெற்றவர். அதற்காகத்தான் அவர் இந்தியாவைவிட்டு வெளியேறிய முஸ்லிம்கள் சொத்துக்களைப் பரிபாலிக்கப் பிரதம பாதுகாப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். சர்க்கார் சமீபகாலத்தில் ஸ்ரீ சதரிவாலா என்ற முஸ்லிம் பாகிஸ்தானுக்கு நிரந்தரமாகப் போகவில்லை, ஆகவே அவருடைய சொத்தை அவருக்குத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று ஸர்டிபிகேட் கொடுத்தார்கள். இது ஸ்ரீ அச்ருராமைக் கலந்துகொண்டு செய்யப்பட்ட விஷயம். ஆனால் ஸ்ரீ அச்ருராம் இது தவறு, சர்க்கார் அனாவசியமாகச் சட்ட பரிபாலிப்பில் தலையிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டினார். காரணம், சர்க்கார் கொடுத்த ஸர்டிபிகேட்டை ஆக்ஷேபிக்க அகதிகளுக்கு உரிமை உண்டு என்று ஸ்ரீ அச்ருராம் கொடுத்த தீர்ப்புத்தான். இது வேறு என்று சர்க்கார் சொன்னதும் ஸ்ரீ அச்ருராம் சர்க்கார்மீது பாய்ந்ததுடன் அகதிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் எண்ணம் சர்க்காருக்குக் கிடையாது என்றும் சொன்னார். கோடிக்கணக்கில் உள்ள முஸ்லிம்களின் சொத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் நஷ்ட ஈட்டுக்குப் பணம் சர்க்காருக்கு எங்கிருந்து கிடைக்கும் என்று கேட்ட ஸ்ரீ அச்ருராம்தான் நிர்வாகப் பொறுப்புடன் பெரிய ஜட்ஜ்களுக்குச் சமமான நீதிப் பொறுப்பையும் வகித்தார் என்பதை மறந்துவிட்டார்.

ஆகவே, ஸ்ரீ அச்ருராமின் ராஜினாமா அகதிகள் வோட்டை, காங்கிரஸிடமிருந்து முனிஸிபல் எலக்ஷனில் பிடுங்காதது ஆச்சரியமே. ஆனால் அகதிகள் விஷயமேதான் நிச்சயமாகச் சொல்ல முடியாத விஷயமாயிற்றே!

காஞ்சனா

கே. வி. கே.

அவனிருந்த அறைக் கதவு திறந்து மூடு வதைக்கூடக் கவனிக்காதவனாய் அவ்வளவு தீவிரமாக அச் சித்திரத்தில் ஈடுபட்டிருந்தான் சந்திரன். இயற்கையுடன் இழைந்து கொண் டிருந்தவனின் பின்புறமாய் வந்து நின்ற வாசு அச் சித்திரத்தில் லயிக்காமல் போக முடியவில்லை.

"பலே, சந்திரா! தத்ரூபமாய் இருக்கிறதப்பா!"

சாவதானமாய்த் திரும்பிய சந்திரன் அவனை ஏறிட்டுப் பார்த்து விட்டு, "ஹூம்" என்று மட் டும் தலையசைத்தான். அவன் முகத்தில் திருப்தி யின் நிறைவு பொங்கியது.

அவ்வூருக்கு அவன் வந்து இரண்டு வருஷங் களாகின்றன. பெரிய குடும்பத்தில் பிறந்திருந்த வனானாலும் வறுமை மட்டும் அவனை விட்டு விட வில்லை. அதிலும் கலைஞனாக வாழ்வைத் துவக்கிய போது செல்வத்துக்கும் அவனுக்கும் வெகு தூரம் ஆய்விட்டது. ஏதோ காரியமாக இவ்வூருக்கு வந்தவன் அப்படியே இங்கே தங்கி விட்டான்.

எவருடனும் அதிகமாய்ப் பழகாத அவன் வாசு விடம் மட்டும் சிறிது நன் மதிப்பு வைத்திருந்தது, தன் சித்திரங்களை உண்மையிலேயே பாராட்டி ரசிக்கும் பண்பு அவனிடம் நிறைந்திருந்ததினால் தானோ என்னவோ. அதோடு அவனுக்குப் பூரண சுதந்திரமும் அளித்திருந்தான்.

"என்ன வாசு! இவ்வளவு அதிகாலையிலே வர மாட்டாயே......! என்ன விஷயம்......?"

"விஷயம் என்ன! எல்லாம் உன் காரியம்தான்! உன்னிடம் ஒன்று கேட்கிறேன்......! காஞ்சனா வைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? இரு! இரு! அவசரப்பட்டுத் தலையசைத்துவிட்டுப்போய் விடாதே......! கொஞ்சம் நிதானமாய்க் கேள்.!"

நாற்காலியை விட்டு எழுந்து நின்றிருந்த சந்தி ரன் அலட்சியமாகக் கேட்டான்:

"யார் அது...? காஞ்சனா...?"

"அவள்..........வந்து.........காஞ்சனாதான்....! அதாவது இந்த ஊரிலேயே பெரிய பணக்காரி யப்பா! ஜமீன்தார் வம்சத்தைச் சேர்ந்தவள். சித்திரத்தில் அவளுக்கு அபாரப் பிரியம். அவள் உருவப் படத்தை நீ வரைந்து கொடுக்கவேண்டு மாம்...! பொறு...! மூர்ச்சித்து விடாதே...!"

சிரத்தையற்றுச் சிரித்தவனாய், சந்திரன் தலையை ஆட்டினான்.

"நான் எவருடைய உருவப் படத்தையும் வரைவதில்லையே, வாசு...!"

"சரிதானப்பா! எல்லாம் இருக்கட்டும்! காஞ்சனா வைப்பற்றி உனக்கு என்ன தெரியும்! போன வரு ஷம் நீ கண்காட்சிச் சாலைக்கு வரைந்துகொடுத்த படத்தைப் பார்த்துவிட்டு அதை அவள் விலை கொடுத்து வாங்கியிருக்கிறாள். அதை வரைந்தவ னின் கையாலேயே தன் படத்தை வரைய வேண்டும் என்று துடியாய்த் துடிப்பதோடு அதற் காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தரச் சித்தமாய் இருக்கிறாள். தவிர இதை நீ செய்தால் இந்த ஊர் முழுதும் உன்னைப்பற்றி விளம்பரப் படுத்தி விடமாட்டாளா...! சந்திரா! உன் அதிர் ஷ்ட தேவதை இவள் மூலமாகத்தான் வரப்போ கிறது...!"

"யார் உனக்கு இதைக் கூறியது...?"

"காஞ்சனாவேதான்! அவள் வாங்கிய படத்தை நான் பார்க்கும்படி நேரிட்டது. உன்னை எனக் குத் தெரியும் என்று அப்போது கூறிவிட்டேன். அவ்வளவுதான்! அக்கணமே என்னைத் திருகி எடுத்துவிட்டாள், உன் இருப்பிடத்தைக் கூறும் படி. இன்னும் சற்று நேரத்தில் இங்கு வருவாள்!"

சந்திரனின் முகம் சுருங்கியது.

"என்ன......? வருகிறாளா......! அதைப்பற்றி என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே......!"

"கேட்பதா...! காஞ்சனா விஷயத்தில் 'கேட்பது' என்பதெல்லாம் கிடையாதப்பா......! அவளுக்கு வேண்டியதைச் சாதித்துக்கொண்டுவிடுவாள்! அவ்வளவுதான்......!"

"சரி! அவள் வந்தால் நீ அவளிடம் கூறி வேறு சித்திரக்காரர்களிடம் அனுப்பிவிடு! என்னைவிட நன்றாக வரைபவர்கள் இவ்வூரில் இல்லையா, என்ன......?"

"அவள் எல்லோரையும் பார்த்துவிட்டாள், சந்திரா! தத்ரூபமாய் அவர்களால் வரையத் தெரியவில்லையாம்...! இதோபார்...! நான் சொல் கிறேனே என்று நினைக்காதே...! இதுதான் உனக்கு அரிய சந்தர்ப்பம்...!"

சந்திரன் பதில் கூறுமுன்பே, வாசு துள்ளி எழுந்தான். ஜன்னலின் மூலம் எட்டிப் பார்த்து விட்டு,

"சந்திரா! இதோ அவள் வண்டி வந்துவிட்டது! நான் இப்படியே போய்விடுகிறேன். அவள் கண்களில் அகப்பட்டால் என்னை விடமாட்டாள்......! பத்திரம்! சந்தர்ப்பத்தை விட்டு விடாதே...!"

அவன் சென்ற அதே நிமிஷம் வாயிற் கதவு திறக்கப்பட்டது. காஞ்சனுவும் மற்றொரு பெண்ணும் உள்ளே நுழைந்தனர். சந்திரன் அவர்களை உற்றுக் கவனித்தான். செல்வத்தின் சின்னமாய் விளங்கிய காஞ்சனு பருத்து, சற்று வயதானவளாய் இருந்தாலும், அவள் முகம் களை பொருந்தி இருந்தது. அவளுக்குப்பின்னுல் சாதாரண ஆடையுடன் நின்று கொண்டிருந்த இளம் பெண், சீமாட்டியின் பணிப்பெண்போல் காணப்பட்டாள்.

மரியாதைகளுடன் அவர்களை வரவேற்று நாற்காலியில் அமரச்செய்தான் சந்திரன்.

"இவ்வளவு தூரம் நீங்கள் வரும்படி நேரிட்டு விட்டது......! இப்போதுதான் என் நண்பன் கூறினுன் உங்களைப்பற்றி.........! ஆனுல் நான் உருவப்படம் வரைவதில்லையே.........!" என்று இழுத்தான் மெல்ல.

காஞ்சனு அவனை ஏற இறங்கப்பார்த்தாள் ஒரு கணம். பிறகு ஏதோ கூறுபவளைப்போல் தன் பணிப்பெண்ணை நோக்கினுள். அப்பெண்ணும் அவளைப்பார்த்துத் தலையசைத்துவிட்டு சந்திரனை நோக்கினுள்.

"என் எஜமானியம்மாள் விஷயத்தில் நீங்கள் சற்று விட்டுக்கொடுப்பீர்கள் என்று நம்புகிருேம் ...." என்றுள் வினயமாகவே.

சந்திரன் அவர்களை மாறிமாறிப்பார்த்தான். அவன் நெற்றி சுருங்கியது. என்னவோ கூற வாய் திறந்தவன் பேசாமலேயே இருந்து விட்டான். சற்றுநேரம் மௌனத்துடன் சிந்தித்தவனுய் நின்றுவிட்டுக் கடைசியில் நீண்ட பெருமூச்சுடன் வேறு வழியின்றி, தன் சித்திரக் கருவிகளைக் கையில் எடுத்தான். காஞ்சனுவின் நாற்காலியை இழுத்து ஜன்னலண்டை போட்டு அதில் அவளை அமர வைத்தான்.

அவன் ஒருவாறு இணங்கியதைக்கண்ட அப் பணிப்பெண் மறுபடியும் பேச ஆரம்பித்தாள்.

"மிக்க வந்தனம்! என் எஜமானிக்குத் தத்ரூபமாய் இருக்கவேண்டும் என்பது அவா! பணத்தைப் பற்றிக் கவலையில்லை! நீங்கள் கேட்பதைக் கொடுத்துவிட அவர்கள் சித்தமாய் இருக்கிருர்கள்......!"

"என்னுல் முடிந்தவரை செய்கிறேன்.........!" என்றுமட்டும் கூறிவிட்டு, சந்திரன் தன் வேலையை ஆரம்பித்தான்.

பழக்கப்பட்ட அவன் கரம் லாகவமாக அசைய ஆரம்பித்தது. சிறிது நேரத்திலே அவன் தன் வேலையில் பூரணமாக ஈடு பட்டு விட்டதோடு அதில் மகிழ்ச்சியும் அடைய ஆரம்பித்தான். அவன் பின்புறமாய் வந்து நின்று அப் பணிப் பெண் ஆவலுடன் அவன் வரைவதைப் பார்த்துக் கொண்டிருந்தபோதும் அவன் அதை உணராதவன் போல்தான் இருந்தான்.

சிறிது நேரத்திலேயே அவன் கரங்களில் சீமாட்டியின் பிம்பம் உருவமெடுக்கத் தொடங்கியது.

"ஆகா! எவ்வளவு அழகாக வருகிறது.........! ஏன் நீங்கள் உருவப்படம் எழுதுவதில்லை.........? மனிதர்களின் முகங்களை விட இயற்கையின் வதனம்தான் உங்களுக்குப் பிடிக்கிறது போலிருக்கிறது......!" என்று ஏதோ பேசிய அப் பெண், சீமாட்டியை நோக்கி,

"அம்மா! பார்த்தீர்களா......! இதற்குள்ளாகவே உங்களை அப்படியே படமெடுத்திருக்கிருர்!" என்றுள்.

காஞ்சனு இதைக் கேட்டுப் பெருமை அடைந்தாலும் ஒன்றும் கூறவில்லை. அவளிடம் சற்றே கர்வம் தோன்றியிருந்தது போலவே மௌனமும் இருந்தது.

சந்திரன் சற்று நிறுத்தி விட்டு நிமிர்ந்து அப் படத்தை ஒரு முறை நோக்கினுன். அதே சமயம் அவன் பார்வை, தன் அருகில் நின்று கொண்டிருந்த அப் பெண்ணின் முகத்தில் விழவே, சற்றே திகைப்புடனேயே அவள் முகத்தைப் பார்த்தான். அதில் படர்ந்திருந்த அபூர்வ அழகும் பூரிப்பும் முதல் முறையாக அவனுக்கு அப்போதுதான் பட்டன. வயது சென்ற காஞ்சனுவின் படத்தை வரைவதைவிட, இவள் படத்தை வரைவது எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும் என்றுகூட அவன் மனம் எண்ணமிடலாயிற்று. ஆயினும் தன் உணர்ச்சியொன்றையும் வெளியிடாமல் மறுபடியும் வேலையில் முனைந்தான். அவள் மட்டும் ஏதோ பேசிக்கொண்டு சென்ருள்.

"இப்போது வர்ணம் தீட்டப்போகிறீர்களா! உண்மையில் சித்திரம் வரைவதைப் பார்ப்பது இவ்வளவு உற்சாகமாய் இருக்கும் என்று எனக்குத் தெரியாது! நீங்கள் சிறந்த கலைஞராகத்தான் இருக்கவேண்டும்......! இல்லையா அம்மா......?"

காஞ்சனுவிடமிருந்து ஒரு கனைப்பு மட்டும் வெளிப்பட்டது.

சற்று நேரம் கழித்து அவள் மறுபடியும் ஆரம்பித்தாள்.

"நீங்கள் இவ்வூருக்குப் புதிதுதானே...?"

மௌனமாகவே தலையசைத்தான் சந்திரன்.

"எவ்வளவு நாளாயிற்று நீங்கள் வந்து...?"

"இரண்டு வருஷம்......!"

"அவ்வளவு காலம் உங்கள் ஊரைவிட்டு இங்கு இருப்பதற்குக் காரணம் இருக்கவேண்டுமே...!"

"பிழைப்புத்தான்...! இவ்வூர் சௌகரியமாய் இருக்கிறது...! தவிர செலவும் குறைவு...!"

அவள் உடனே பேசவில்லை. கொஞ்ச நேரம் கழித்துக் கேட்டாள்:

"நீங்கள் ஏழையா......!"

"திருப்திதான் என் பெரிய செல்வம்...!"

அத்துடன் அவள் பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டாள். நீண்ட அவள் கருவிழிகள் அவனை உற்று நோக்கின ஒரு கணம். மெல்ல, தன் எஜமானியிடம் சென்று ஜன்னலோரம் நின்று கொண்டாள்.

நேரம் செல்லச் செல்லக் காஞ்சனுவின் பொறுமை குறையத்தொடங்கியது.

"இன்னும் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும்.............?" என்று அலுப்புடனே கேட்டாள்.

"உங்களுக்குக் களைப்பாக இருக்கிறது போலிருக்கிறது.................!" என்று கூறிய வண்ணம் சந்திரன் எழுந்து,

"இன்று இவ்வளவு போதும்! நீங்கள் சென்று நாளை இதே நேரத்திற்கு வாருங்கள்........?" என்றான்.

சலிப்புடன் ஏதோ முணுமுணுத்தவாறே சீமாட்டி எழுந்து புறப்பட்டாள். அவள் பின் னாலேயே அப்பணிப்பெண்ணும் தொடர்ந்தாள். வெளியே போகும்போது அவனை அவள் பார்த்த பார்வையில் மட்டும் பாராட்டுப் பொங்கியது.

மறுநாளும் அதைத்தொடர்ந்து பல நாட்களும் அவர்கள் வந்தனர். காஞ்சனு முதல் நாளில் நடந்து கொண்டதைப் போலத்தான் ஒவ்வொரு நாளும் இருந்தாள். அவள் தோரணையில் அகம்பாவமும் அதிருப்தியும் மாருமலே இருந்தன. தன் உருவத்தைத் தத்ரூபமாய் அவன் எழுதி முடித்து விட்டபோதும்கூட அதைப்பார்த்த அவள் ஏனோ ஏமாற்ற மடைந்த வளைப்போல்தான்— தோன்றினாள். அவ்வளவு கச்சிதமாய் அதை அவன் தீட்டியிருக்க வேண்டாம்........! அவளுக்கு எத்தனை அழகு இருந்ததோ அத்தனை அழகுதானே அவன் தீட்டிய உருவத்திற்கும் இருக்கிறது.........!

ஆனால் அப்பணிப்பெண் அவனுடைய மகிழ்ச்சியில் பங்கு கொண்டாள்.

"ஆகா! இவ்வளவு நன்ருக இருக்கிறதே! நேரில் பார்ப்பதைப் போலத்தான் காணப்படு கிறது இப்படம்...! நீங்கள் உருவப்படம் எழுது வதை இனி கைவிடாதீர்கள்...! முடிந்தால்......!" என்று கூறிக்கொண்டு வந்தவள் சற்று நிறுத்தி விட்டுத் தன் எஜமானியைப் பார்த்தாள்.

காஞ்சனு மெல்ல அவள் பக்கம் திரும்பி. "என்ன முடிந்தால்......?" என்ருள்.

"ஒன்றுமில்லை...! முடிந்தால் என் படத்தையும் இம்மாதிரி வரையலாம் என்று நினைத்தேன்...! ஆனல்...அதற்குப்...பணம்...!" என்று இழுத் தாற்போல் கூறினாள்.

சந்திரன் சாவதானமாய் எழுந்து அறையின் மறு கோடியை அடைந்து அங்கே சுருளாக வைத் திருந்த ஒரு துணியை எடுத்துப் பிரித்தான். அபூர்வப் பொலிவுடன் அப் பெண்ணின் உருவம் அதில் அரைகுறையாக வரையப்பட்டிருந்தது.

பெருமையுடன் அப் பெண்ணின் முகம் சிவந் தது. அவள் ஏதோ கூறுமுன்பே காஞ்சனு கோபத்துடன் எழுந்து அவளைப் பார்த்து,

"லீலா! இதென்ன இது...! இம் மனிதன்...!" என்று ஆரம்பித்தாள். ஆனல் சந்திரன் இடை மறித்து, அவளை நோக்கி,

"அம்மா! இது என் சொந்த வேலை...!" என் ருன், அத்துடன் பேச்சை முடிப்பவன் போல. அதற்குள் லீலாவே தன் எஜமானியிடம் நெருங்கி ஏதேதோ கூறி அவளைச் சமாதானப் படுத்தினாள். பிறகு அவனிடம் வந்து காஞ்சனுவின்மேல் வருத் தம் கொள்ளாமலிருக்கும்படி அவனை வேண்டி ளுள்.

"நான் இந்த உரிமையை எடுத்துக் கொண் டது தப்பு என்றுதானே அவள் நினைக்கி ருள். முக்கியமாக இந்த வேலையை நான் ஒப்புக் கொண்டது உனக்காகத்தான் என்பது அவளுக் குத் தெரியுமா...!" என்று சீமாட்டியின் காதில் விழாமல் மெல்ல அவன் கூறினான்.

அவள் கண்கள் பிரகாசித்தன.

"உண்மையாகவா...! ஆனல் அவள் என்னைத் தனியாக இங்கு வர அனுமதிக்கமாட்டாள்! நான் வராமல் நீங்கள் எப்படி என் படத்தைப் பூர்த்தி செய்வீர்கள்...!"

"பரவாயில்லை! ஞாபகத்திலிருந்தே எழுதிவிடு கிறேன்! நீ அவள் பக்கத்திலேயே ஜன்னலண்டை நின்றுகொள். அவளைப் பார்க்கும்போதே உன் னையும் பார்க்கும்படி இருந்தால் அதுபோதும்...!" என்ருன்.

அதேபோல் அவள் சென்று குறிப்பிட்ட இடத்தில் நின்று கொண்டாள். அவனும்

ஜண்டு பார்மஸூடிகல் வொர்க்ஸ் லிமிடெட்.

சகல ஆயுர்வேத மருந்துகளையும், இங்கிலீஷ் மருந்துகளையும்
ஏராளமாக, சாஸ்திரோக்தமாக, தயாரிப்பவர்கள்.

"ஜண்டு கேஸரி ஜீவன்"

இது சாதாரண இருமல், ஜலதோஷம், ஆஸ்த்மா தொண்டைக் கம்மல், சுவாசகோச அழற்சியால் தோன்றும் இருமல் முதலியவைகளுக்குச் சிறந்தது மேலும் இது வக்கீல்கள், உபாத்தியாயர்கள், நூல் ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு மூளைக்குத் தெளிவையும், ஞாபக சக்தியையும் அளிப்பதோடு தேகத்திற்கு. தேஜஸூம் வீரியவிருத்தியும் அளிப்பதில் சிறந்தது

1 பவுன் 6—8—0 ½ பவுன் 3—6—0 ¼ பவுன் 1—13—0.

கும்பகோணம் : பிரிமியர் மெடிகல் ஸ்டோர்ஸ் லிமிடெட், கடைத்தெரு.
தி பார்மஸி, மடத்துதெருவு.

காரைக்குடி:— இந்திரா மெடிகல் ஹால்

தஞ்சை : P. V. முத்துகிருஷ்ணராஜா சன், அய்யங்கடைத் தெருவு.

திருச்சி : விநாயகர் மெடிகல் ஹால். தெப்பக்குளம்

மதுரை : N. R. சாமி அண்டு கோ. வடக்குச் சித்திரை வீதி.

மாயவரம் : பிரிமியர் மெடிகல் ஹால்.

சிதம்பரம் : நடராஜா டிஸ்பென்சரி, சிதம்பரம்.

கடலூர் : ஸ்ரீ ராம் பார்மஸி, புதுப்பாளயம்.

வியாபார நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும் கீழேகண்ட விலாசத்திற்கு எழுதவும்,

சென்னை ராஜதானி ஏஜண்டுகள் :

தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C.K.)

JULLUNDUR CITY. Pb.

காஞ்சனுவின் படத்தை வரையும் போதே, ஒரு தனிக்காகிதத்தில் அவள் பிம்பத்தையும் வரைந்து கொண்டு வந்தான்.

அன்று அதிக நேரம் காஞ்சனு அங்கே தங்க விரும்பவில்லை. அவள் கோபம் தணியாமலே இருந்ததால் அவளால் அசையாமல் உட்கார முடியவில்லை. ஆகையால் ஒருவாறு அவன் அவர்களை அனுப்பிவிட வேண்டியதாய் விட்டது.

அவர்கள் சென்ற உடனேயே அவன் காஞ்சனுவின் படத்தை ஒதுக்கிவிட்டு, அப்பெண் ணின் படத்தை எடுத்து வைத்துக்கொண்டு ஆவலுடன் அதை எழுத ஆரம்பித்தான். அதில் தோன்றிய உற்சாகமும், இன்பமும் அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தன. இருள் சூழும் வரையில் குனிந்த தலை நிமிராமல் அதில் லயித்திருந்த அவன் கடைசியில் எழுந்தபோதும் அவன் மனம் அந்த உருவத்திலேயே ஆழ்ந்து விட்டுத்தான் இருந்தது.

மறு நாள் வழக்கம்போல் காலடி ஓசை கேட்டு அவன் கதவைத் திறந்த போது, காஞ்சனு இல் லாமல் லீலாமட்டும் தனியாக வந்திருந்தாள். வியப்புடன் நோக்கிய அவனைப் பார்த்து அவள்,

"என் எஜமானியம்மாள் இன்னும் வரவில் லையா? இதோ இப்பொழுது வந்து விடுவாள்......! தெரிந்தவர் ஒருவர் இல்லத்திற்குப் போய்விட்டு வருவதாகக் கூறிச் சென்ருள்......!" என்ருள்.

அவன் அவளை உள்ளே அழைத்துச் சென்று அவள் படத்தைக் காண்பித்தான். அபார கை வன்மை பெற்றிருந்த அது அவளை அடிமையாக்கி யது.

"ஆகா! எத்தனை அழகாய் எழுதியிருக்கிறீர் கள்......!" என்ருள் பெருமையுடன்,

"அப்படியா நினைக்கிருய்! என் அபிப்பிராயம் வேறு! உன் அழகில் பாதிகூட நான் அதில் காண் பிக்க வில்லை......!"

சிவந்த முகத்துடன் அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களில் நன்றி பொங்கி யது.

"அப்படியே சற்று நேரம் நில்......! அந்தக் கண்களை வரைந்து விடுகிறேன்......!"

அப்போதுதான் அது நடந்தது. அவள் கண்களை அவன் வரைந்தானே என்னவோ! ஆனல் அதில் அவன் அகப்பட்டுக் கொண்டு விட்டதென்னவோ நிச்சயம். வைத்த கண் வாங்காதபடி அவை களையே உற்று நோக்கினன். நீலக் கடல் போன்ற அக் கண்களின் ஆழம் அவனுடலைப் புல் லரிக்கச் செய்தது.

"லீலா" என்று மட்டும் அவன் வாய் மெல்ல முணகியது.

மந்திரத்தால் கட்டுண்டவள்போல் அவளும் நின்றுவிட்டாள். அவன் கை அவள் கரத்தைப் பற்றியது.

"லீலா...!"

"சந்தர்...!"

அதே சமயம் வெளியே காலடிச் சப்தம் கேட் கவே இருவரும் சுய உணர்வு பெற்றனர். தன் பணிப் பெண்ணைக் கூவி அழைத்துக்கொண்டிருந் தாள் காஞ்சனு,

"நான் போகவேண்டும்! அவள் கோபமாய் இருக்கிருள்...!" என்று கூறிவிட்டு ஒரே ஓட்ட மாய்ச் சென்றுவிட்டாள் லீலா.

அன்றிரவெல்லாம் அவன் தூங்கவே இல்லை. மறுநாளும் அதே நினைவுடன் அவன் அமர்ந்திருந் தான். ஆனல் அன்று அவர்கள் வரவேயில்லை, மாலை நேரம் செல்லச் செல்ல அவன் மனம் கொந்தளிக்க ஆரம்பித்தது.

ஆறு மணி சுமாருக்குக் காஞ்சனுவின் வேலையாள் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றுன். லீலாதான் அதை எழுதியிருந்தாள். தன் எஜமா னியினல் இனிமேல் வருவதற்குச் சௌகரியப் படாததினல் அவள் படத்தை அத்துடன் முடித்து அனுப்பும்படி எழுதியிருந்தாள். தன்னுலும் இனி வெளியே வர இயலாது போய்விட்டதால் தன் படத்தையும் அதோடு சேர்த்து அனுப்பும் படி கேட்டிருந்தாள். எல்லாவற்றிற்கும் கடைசி யில் இருந்த ஒரு வரிமட்டும் அவனை ஆட் கொண்டுவிட்டது.

"உங்களை மறக்க முடியவில்லை! பொறுமை யுடன் காத்திருப்போம்...!"

மூன்று தினங்களுக்குப்பிறகு அதே வேலை யாள் மறுபடியும் வந்தான். அந்தப்படங்களை எந்த இடத்தில் எப்படி மாட்டுவது என்று யோஜனை கூற அவனை எஜமானியம்மாள் அழைத்துவரச் சொன்னதாகக் கூறினன்.

சந்திரனின் உள்ளம் துள்ளியது. மறுகணமே தன் ஆடையை மாற்றிக்கொண்டு வேலையாளுடன் புறப்பட்டான்.

அரண்மனை போன்றிருந்த அச்சலவைக்கல் மாளிகையில் அவன் நுழைந்தபோது அவனை யறியாமல் சிமாட்டி காஞ்சனுவின் மீது அவனுக்கு மரியாதை ஏற்பட்டது! அவள் செல்வத்திற்கு ஓர் எல்லையில்லையா?

உட்புற ஹாலில் காஞ்சனு கம்பீரத்துடன் அமர்ந்திருந்தாள், சற்றுத் தூரத்தில் லீலா

நின்ற வண்ணம் இருந்தாள். அவனை வரவேற்ற காஞ்சனா இரண்டொரு வார்த்தையில் அவனுக்கு நன்றி கூறிவிட்டு எதிரே மேஜையின்மேல் வைத்திருந்த பணத்தைச் சுட்டிக்காட்டினாள்.

அலட்சியமாய்ச் சந்திரன் அதைக் கையில் எடுத்துப் பார்த்ததும் திகைப்புடன் உடனே கீழே வைத்துவிட்டான்.

"இவ்வளவு பணம் எனக்கு வேண்டாம். இதில் பாதி போதும்.........!"

காஞ்சனாவின் முகம் சுண்டியது. அதற்குள் பணிப்பெண் லீலா அவனை நெருங்கி,

"ஹஉம்! எடுத்துக்கொள்ளுங்கள்............!" என்று மெல்லக்கூறினாள். அவள் கட்டளையை மீற மாட்டாதவன்போல் அவன் ஒன்றும் பேசாமல் அப்பணத்தை எடுத்துப் பையில் திணித்துக்கொண்டான்.

"இப்போது படத்தை மாட்டலாம்...!" என்று கூறியபடியே காஞ்சனா எழுந்து உள் ஹாலுக்குச் சென்றாள். அவள் பின் நடந்து சென்ற சந்திரனும் லீலாவும் ஒருவரையொருவர் நோக்கிப் புன்னகை புரிந்தனர், மெல்ல அவன் கரம் அவள் கரத்தை நாடும்போது சீமாட்டி நின்று திரும்பி,

"ஹஉம்! எங்கே மாட்டலாம்...!" என்று லீலாவைப் பார்த்துக் கேட்டாள். நாற்புறமும் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அவ்வறை அற்புதமாய்க் காணப்பட்டது. ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு லீலா ஒரு தனி இடத்தைக் காட்டவே சந்திரனும் அதை ஆமோதித்தான். அக்கணமே அங்கே சீமாட்டியின் படம் தொங்க விடப்பட்டது.

"சரி! இப்போது உன் படத்தை எங்கே மாட்டுவது?" என்று காஞ்சனா கேட்டபோது, லீலா நாணத்துடன் தலை குனிந்து கொள்ளத்தான் முடிந்தது.

அதற்குள் காஞ்சனாவே அவ்வறைக் கோடியை அடைந்து அங்கிருந்த ஒரு காலியிடத்தைச் சுட்டிக் காட்டினாள். அந்த இடத்திற்குப் பக்கத்தில் சீமாட்டியின் முன்னோர்களின் படங்கள் மாட்டப்பட்டிருந்தன.

சந்திரன் சற்றுத் தயங்கி நின்றான். இந்த எளிய பணிப் பெண்ணின் படத்தைக் காஞ்சனாவின் பரம்பரையுடன் எப்படி மாட்டுவது?

புன்னகையுடன் அவனைப் பார்த்துக்கொண்டிருந்த காஞ்சனா அதற்குள் பேச ஆரம்பித்து விட்டாள்.

"இதுதான் அப்படத்திற்குத் தக்க இடம். அவள் தந்தையின் படத்திற்கு அருகிலேயே இருக்கும்...!" என்றபடியே அவளைப் பார்த்தாள். அவள் முகத்தில் வியப்பும் கலவரமும் தாண்டவமாடின.

அவள் மேலும் பரிகாசமாய் அவனை நோக்கி,

"என்னப்பா யோஜனை செய்கிறாய்? இன்னுமா உனக்குத் தெரியவில்லை! எங்கள் நாடகம்தான் முடிந்துவிட்டதே! இதெல்லாம் காஞ்சனாவின் யோஜனைதான். அவள் உத்தரவிட்டால் பணிப்பெண்ணான நான் அதை நிறைவேற்றாமல் தப்ப முடியாது. ஆமாம்! ஆனால் உனக்கு இதெல்லாம் எப்படிப் புரியும்! காதல் வலையில் விழுந்து விட்டாலே கண்கள் குருடாவதோடு மூளையும் தானே மங்கி விடுகிறது! பாவம்! காதல் வெள்ளத்தில் மூழ்கி மோசம் போய்விட்டாய் உண்மையறியாமல்! இந்தப் பணிப்பெண்தான் காஞ்சனா, நான்தான் அவள் தோழி என்பது உனக்கு எட்டவேயில்லையே......! இந்தக்காதல் மயக்கம் இல்லாவிட்டால், அவள் படத்தை வரைவதில்தான் நீ இவ்வளவு தீவிரம் காண்பித்திருக்க முடியுமா......!"

அவள் வெளியே சென்று ஐந்து நிமிஷம் வரை சந்திரன் ஒன்றும் பேசவில்லை. தன் எதிரே நின்ற அப்பெண்ணை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். அகல விரித்த கண்களுடன் பலவித உணர்ச்சிகளை வீசிக்கொண்டிருந்த அவள் முகத்தில் தோன்றிய குறுகுறுப்பும் விஷமமும் அவனை உலுக்கின.

"நீங்கள் ஏமாந்து விட்டதாக நினைக்கிறீர்களா.........! இப்போதும் ஒன்றும் முழுகிப்போய் விடவில்லை......!"

"முழுகிப்போய் விடவில்லையா.........? என் வாழ்வே உன்னுள் முழுகி விட்டதே.........!" என்று கூறியபடியே அவளைத் தாவிப் பற்றினான் அவன். ●



199328

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

டாடா
அக்ரிகோ
கருவிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றன

நம் நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவரும் அக்ரிகோ கருவிகளையே பெரும்பாலும் விரும்புகின்றனர். ஏனெனில் அவை மிகவும் உறுதியானவை. நீடித்துழைக்கக்கூடியவை. கையாளுவதற்கு சுலபமானவை. வெற்றிகரமான உழவுக்கு இன்றியமையாதவை.

எல்லாவித உழவு வேலைகளுக்கும் ஏற்ற அக்ரிகோ கருவிகள் இருக்கின்றன.

மண்வெட்டிகள்:

பிரபலமான ஸ்வான்-நெக் டிஸைன் உள்பட மூன்று நினுசுகளில் கிடைக்கிறது. கூராக வெட்டும் முனைகள் வேலையை திறமையுடன் செய்து முடிக்க உதவுகின்றன. சீரான அமைப்பு வாய்ந்திருப்பதால் வேலை செய்ய இலகுவாக இருக்கிறது.



பாரைகள் :

விதவிதமான வேலைகள் புரிவதற்காக ஐந்து வித டிசைன்களில் கிடைக்கின்றன. இதர எல்லா அக்ரிகோ கருவிகளைப் போல், உஷ்ண மளிக்கப் பட்ட ஹை கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டது.

கோடாரிகள், செம்மட்டிகள் :

வெவ்வேறு வேலைகளுக்காக நான்கு விதமான அடிப்படையான நினுசுகளில் கிடைக்கும். கூராக வெட்டும் முனைகள் மழுங்காமலிருப்பதற்காக விசேஷமாக உறுதியாக்கப்பட்டவை. மிகவும் உறுதி வாய்ந்தவை. நீடித்து உழைக்கக் கூடியவை.

டாடா அக்ரிகோ கருவிகள்

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்,

ஸேல்ஸ் ஆபீஸ்: 23B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.
பிரான்சுகள்: பம்பாய், மதருஸ், நாக்பூர், அஹமதாபாத், கான்பூர், ஸெகந்திராபாத், விஜயநகரம் கன்டோன்மென்ட், ஜலந்தர் கன்டோன்மென்ட்.

இணையில்லா
வாசனை
தயாரிப்புகள்
டி. எஸ். ஆர்
அரைக்கீரை விதை தைலம்
சந்தனாதி
தைலம்
கோகுல் ஹேர்
ஆயில்
T.S.R. & CO.
Sandanathi
Thailam
T.S.R. & CO. KUMBAKONAM
T.S.R. & CO.
Thailam
டி. எஸ். ஆர். & கோ., கும்பகோணம்.